
தர்மசக்கரம்



ரக்தாக்ஷி ௵ ஆடி ௴ சக்கரம் 33 ஆரம் 7

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

திருநெல்வேலி ஜில்லா

பாபநாசத்தில் அந்தர்யோகம் - 21
20, 21, & 22—7—84

அந்தர்யோகத்தில் கலந்துகொண்டு இடவசதி, உணவு வசதி வேண்டும் அன்பர்களும், தாய்மார்களும் நபர் ஒன்றுக்கு ரூபாய் முப்பது வீதம் திருநெல்வேலி ஜில்லா, அம்பாசமுத்திரம், நூல் ஜவுளி வியாபாரம், திரு. SV. RM. A. நடராஜ முதலியார் அவர்களுக்கு மணியார்டர் மூலமோ, நேரிலோ செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்து, அனுமதிக் கார்டு பெற்றுக்கொள்ளவேண்டும். கலந்து கொள்ள இயலாதவர்களுக்குத் தொகை வாபஸ் செய்ய இயலாது. பதிவுசெய்யப்பெற்றவர்களுக்குப் பதிலாக வேறு ஒருவர் எடுத்துக்கொள்ளப்படமாட்டார். பதிவு செய்து கொண்டவர்கள் அனைவரும் ஜூலை மாதம் 19ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்குள் பாபநாசத்திற்கு வந்து சேரவேண்டும். தங்கள் சௌகரியத்திற்குத் தேவையான படுக்கை முதலியவற்றைத் தாங்களே கொண்டுவரவேண்டும். இட வசதி, உணவுவசதி தேவையில்லாதவர்கள் பணம் கட்டாமலேயே அந்தர்யோக நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பயன்பெறலாம்.

காரியதரிசி
SV. RM. A. நடராஜ முதலியார், அம்பாசமுத்திரம்

ஸதானந்த
ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

விவேகானந்த உபநிஷதம்

தமிழாக்கம்

சுவாமி சித்பவானந்தர்

வேதங்களின் சிகரங்களாக அமைந்திருப்பவைகள் உபநிஷதங்கள். பிரம்ம ஞானமும் பிரம்ம ஞானத்துக்குரிய விஷயங்களுமே இவைகளில் காணப்படுகின்றன. ஆதலால் அவைகள் மெய்ப்பொருள் உணர்வுக்கு முடிவான பிரமாணங்கள் ஆகின்றன.

சுவாமி விவேகானந்தரை இக்காலத்தில் தோன்றிய மகரிஷி எனலாம். அவர் அமெரிக்காவில் செண்ட்லாரன்ஸ் நதியில் உள்ள ஆயிரம் தீவுச்சோலையில் திருவாய் மலர்ந்தருளிய பாரமார்த்திகப் பேருண்மைகள் ஈண்டுத் தமிழ் வடிவத்தில் தமிழ் மக்களுக்கு எடுத்து வழங்கப்படுகின்றன. ரிஷி வாக்கியம் என்றைக்கும் மாறுத பேருண்மை என்பதற்கு இது சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். எனவே இதை விவேகானந்த உபநிஷதம் என்பது முற்றிலும் பொருந்தும். ஆயுட்காலம் முழுதும் திரும்பத் திரும்ப வாசித்துச் சிந்தித்துத் தெளிவுறுதற்குரிய நூல் இது.

கிரௌன் சைஸ் — 236 பக்கங்களை உடையது

விலை ரூ. *7-00* (தபாற்செலவு 3-00)

காரியதரிசி

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை போஸ்ட், — *திருச்சி ஜில்லா.*

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 33 ‖ ரக்தாக்ஷி ஞூ ஆடி மீ ‖ ஆரம் 7

பொருளடக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா : ரூ. 150 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும்வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட்செய்த ரூபாய் நூற்றைம்பதை யும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா : ரூ. 15 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா : மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பதினைந்து செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் பத்து அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவிநிதி' யினின்று ஈடுசெய்து கொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூ. 15 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தவேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறு கிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப்பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-50 வெளிநாடு தனி இதழ் ரூ 4-00

உள் நாடு வருட சந்தா: ரூ. 15-00 வெளிநாடு வருட சந்தா: ரூ. 45-00

அந்தர்யோக விவரங்கள்

சேலத்தில் 22—7—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா கல்லூரியின் பிரார்த்தனைக் கொட்டகை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 2-00 நேரில் செலுத்திச் சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

இராமநாதபுரம் ஜில்லா—இராஜபாளையத்தில் 29—7—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பழைய பாளையம் பாரதி கல்யாண மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
உணவு வசதி: மதிய உணவிற்கு ரூ. 1-50 நேரில் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

திருநெல்வேலி ஜில்லா—முக்கூடலில் 29—7—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் திருக்கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

திருச்சி—பொன்மலையில் 5—8—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண—சாரதா ஸமிதி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருச்சி ஜில்லா—தாத்தையங்கார் பேட்டையில் 7—8—84 செவ்வாய்க்கிழமை

இடம்: பிருந்தாவன கல்யாண மண்டபம்
நேரம்: இரவு 7-00 மணி முதல் இரவு 9-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—செங்குட்டைப்பாளையத்தில் 12—8—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சுவாமி சித்பவானந்த கிராம சேவாசங்கம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

நீலகிரி ஜில்லா—குன்னூரில் 17—8—84 வெள்ளிக்கிழமை

இடம்: குன்னூர், மவுண்ட் பிளசன்ட், ஹிந்து வித்யாலயா பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும், தாய்மார்களும் அந்தர்யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 33	ரக்தாக்ஷி ஹூ ஆடி மீ	ஆரம் 7

பிரார்த்தனை

अशरीरं शरीरेषु अनवस्थेष्ववस्थितम् ।
महान्तं विभुमात्मानं मत्वा धीरो न शोचति ॥

— कठोपनिषद्

அசரீரம் சரீரேஷு அனவஸ்தேஷ்வவஸ்திதம் ।
மஹாந்தம் விபுமாத்மானம் மத்வா தீரோ ன சோசதி ॥

— *கடோபநிஷதம்*

நிலையற்ற உலகில் வாழ்ந்திருப்பதற்கிடையில் நிலையுற்ற ஆத்ம சொருபத்தை அறிகிறவன் துயருறுவதில்லை.

கண்டேன் கமல மலர்ப் பாதம் காண்டலுமே
விண்டே யொழிந்த வினையாயின வெல்லாம்
தொண்டே செய்(து) என்றும் தொழுது வழி யொழுகப்
பண்டே பரமன் பணித்த பணி வகையே.

— *திருவாய்மொழி*

அருள் விருந்து

நல்லொழுக்கம் மனிதனை மேலோனுக்குகிறது.

தூய உள்ளத்தில் தீயது எதற்கும் இடமில்லை.

உண்மையை வாழ்வில் அனுஷ்டிப்பவனே மேலோனுகிருன்.

தன் அகத்திலிருப்பதைத்தான் மனிதன் புறஉலகிலும் காண்கிருன்.

யோகி ஒருவனுக்கு அகவாழ்வு, புறவாழ்வு ஆகிய இரண்டும் ஒன்றே.

தீமையைப் பொருட்படுத்தாமையே அதை அகற்றுதற்கு உற்ற உபாயமாம்.

தளர்வடையாது முயலுபவர்களே ஆகாத காரியத்தை ஆகும்படி செய்கின்றனர்.

அறிஞன் ஒருவனுக்கு லாபநஷ்டத்தில் பெரியது, சிறியது என்னும் வேற்றுமையில்லை.

உலகுக்குப் பயன்பட்டு வாழ்வை முடிவுக்குக் கொண்டு வருதலில் தனி இன்பம் ஒன்றுண்டு.

உபவாசம் பண்ணுதற்கிடையில் மனதை நல்வழியில் செலுத்தாதவன் பொய் வேஷக்காரனுகிருன்.

சாந்தியைத் தன் உள்ளத்தினுள்ளே காணமாட்டாதவன் அதைப் புற உலகிலும் காணமாட்டான்.

அறிவிலியாக ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருப்பதைவிட அறிஞனுக ஓர் ஆண்டு வாழ்ந்திருப்பது மேல்.

உள்ளத்தின் உள்ளே இருக்கும் இறைவனை எவ்வளவு காலம் வெளி உலகில் தேடினுலும் அவன் தென்படமாட்டான்

துயரத்தை உண்டுபண்ணும் சூழ்நிலையை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்பவனே அதைத் தனக்கு அனுகூலமானதாக மாற்றியமைக்கிருன்.

தந்தையின் போக்கை அங்கீகரிக்க மகனுக்கு இயலாதவிடத்தும் தந்தைக்குரிய வந்தனை வழிபாட்டை முறையாகச் செலுத்துபவனே நன் மகனுகிருன்.

மரக்கறி உணவு உண்பதற்கிடையில் பொருந்தாத வாழ்க்கை வாழ்பவன் கீழோன். புல்லிய உணவு உண்பதற்கிடையில் தூய வாழ்வும் நல்லொழுக்கமும் வாய்க்கப்பெற்றவன் சிறந்தவன்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

"இறைவன் மாயையை உடைத்திருக்கிறார். அம்மாயையிலே வித்யாமாயை, அவித்யா மாயை என இரு கூறுகள் இருக்கின்றன. வித்யாமாயையானது ஆத்ம சாதகனைக் கடவுளிடத்து எடுத்துச் செல்கிறது. அவித்யா மாயையோ ஜீவாத்மனைப் பரமாத்மாவுக்கு வேற்றாகப் பண்ணுகிறது. வித்யாமாயைக்கு ஆளாகிறவனிடத்து ஞானம், பக்தி, இரக்கம், துறவு ஆகிய தெய்விக சம்பத்துக்கள் ஓங்குகின்றன. இத்தகைய தெய்விக சம்பத்துக்களின் துணைகொண்டு ஆத்ம சாதகன் ஒருவன் ஈசுவரனுக்குப் பக்கத்தில் வருகிறான். இன்னும் ஒருபடி அவன் சாதனத்தில் மேலே ஏறுகின்றபொழுது அவன் இறைவனை அடையப் பெறுகிறான். பிரம்மஞானம் அடையப்பெற்றானபிறகு உலகில் உள்ள அனைத்துமாய் வடிவெடுத்திருப்பவர் பரமனே என்பதைத் தெற்றென அவன் அனுபூதியில் உணர்கிறான். அந்நிலையை அடையப்பெற்றவனுக்குத் துறப்பதற்கும் ஏற்பதற்கும் ஏதும் இல்லை. அத்தகையவன் முயன்றாலும் யாரிடமும் கோபித்துக் கொள்வது சாத்தியப்படாது.

"அன்றொரு நாள் நான் ஒரு வண்டியில் போய்க்கொண்டிருந்தேன். வேசியர்கள் இருவர் தம் வீட்டுத் திண்ணையில் நின்றுகொண்டிருந்ததை நான் பார்த்தேன். அம்மங்கையர் இருவரும் அன்னை பராசக்தியின் சொரூபமே என நான் உணர்ந்ததால் அவர்களிருவருக்கும் என்னுடைய வந்தனை வழிபாட்டை நான் செலுத்தினேன்.

"இத்தகைய பாரமார்த்திகப் பெருநிலையை நான் அடையப்பெற்றான பிறகு அன்னை பராசக்திக்கு முறையாக ஆராதனையைச் செலுத்த எனக்கு இயலாது போயிற்று., நைவேத்தியம் முதலியன படைப்பது அந்நிலையில் இருந்த எனக்குச் சாத்தியப்படவில்லை. இதை முன்னிட்டு ஹலதாரியும் ஹிருதயனும் என்னைக் குறைகூறினர். நான் முறையாகப் பூஜை செய்யாததனால் கோயில் வழிபாட்டு முறைக்கு இழுக்கு ஏற்பட்டிருக்கிறதென்று கோயில் நிர்வாகிகள் முறையிட்டனர். இதைக்கேட்டு எனக்குச் சிரிப்பு மூண்டுவிட்டது; சிறிதேனும் அவர்களை நான் நொந்து கொள்ளவில்லை. கோபமும் என் உள்ளத்தில் இம்மி அளவாவது வடிவெடுக்கவில்லை. பிரம்ம ஞானத்தைப் பெறுவது மனிதனுடைய முதல் கடமையாகின்றது. அதைப்பெற்றான பிறகு இறைவனுடைய திருவிளையாடல்களாய்த் தென்படுகின்ற இப் பிரபஞ்சத்தின்கண் அவன் வேண்டியவாறு வாழ்ந்திருக்கலாம்.

"சாது ஒருவன் கல்கத்தாவுக்கு வந்து இங்குமங்கும் சுற்றி அப்பட்டணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனோடு பழகியிருந்த மற்றொரு சாதுவை அவன் சந்தித்தான். இரண்டாமவன் இயம்பியதாவது: "கவலையற்று இங்குமங்கும் சுற்றித் திரிகின்றாய். உன்னுடைய மூட்டை முடிச்சுக்கள் எங்கே? திருடன் யாருடைய கையிலும் அவைகள் அகப்படவில்லை என்று நான் நினைக்கிறேன்." "இல்லை, நானா திருட்டுக் கொடுப்பவன்? தகுந்த அறை ஒன்று வாடகைக்குப் பிடித்து அதில் சாமான்களைப் போட்டுப் பத்திரமாகப் பூட்டி வைத்துள்ளேன். இப்போது கவலையற்று நான் ஊரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று முதலாம் சாது கூறினான்.

"தொண்டர்கள் விளையாட்டு இத்தகையதாம்." இதைக் கேட்டு அனைவரும் நகைத்தார்கள்.

பரமஹம்சதேவர் பக்தர்களோடு தொடர்ந்து உரையாடிக் கொண்டிருக்கின்றார்.

பவநாதன்: "ஐயனே, தாங்கள் பகர்கின்ற கூற்று ஒவ்வொன்றிலும் அரிய பெரிய கருத்துக்கள் புதைந்திருக்கின்றன. அவையாவும் சிந்தனைக்கு உரியவைகளாம்."

மகேந்திரர் தமக்குத் தாமே எண்ணிக் கொண்டதாவது: "பிரம்ம ஞானிகள் சமாதி நிலையில் பரம்பொருளோடு இணக்கம் கொள்கின்றனர்; பரமானந்தத்தை அனுபவிக்கின்றனர். பிறகு இவ்வுலக வியவகாரங்களுக்குக்

கீழே இறங்கி அவர்கள் பகர்கின்ற கருத்துக்கள் அனைத்தும் இங்ஙனம் பொருள் மிகப் புதைந்தவைகளாக இருப்பதில் வியப்பு யாது உளது?"

பரமஹம்சதேவர் ஆங்குக் குழுமியிருந்த பக்தர்களிடம் பகர்ந்ததாவது: "பிரம்ம ஞானத்தைப் பெறுவது மிக எளியது அன்று. மனோநாசம் உண்டானால் ஒழிய பரஞானம் உதிக்கமாட்டாது. ஒருவர் தம் சிஷ்யரிடம் பகர்ந்ததாவது: 'உன் மனதை என்னிடம் ஒப்படைத்து விடு. நான் உனக்குப் பிரம்ம ஞானத்தை நல்குகின்றேன்.' பரநாட்டம் படைத்திருக்கின்ற மக்களுக்கு உலக வியவகாரங்களைப் பற்றிய பேச்சுச் சிறிதேனும் ரசிக்காது. அவர்கள் பாரமார்த்திகப் பெரிய விஷயங்களையே சதா ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பக்தர்கள் இணக்கத்தைத் தவிர உலகத்தவர்களோடு பழகுதலிலும் சிறிதேனும் நாட்டம் இல்லை."

ராமுவிடம் பரமஹம்சதேவர் பின்பு பகர்ந்ததாவது: "நீ ஒரு மருத்துவனாக இருக்கின்றாய். மருந்து ஒன்று நோயாளியினுடைய உடலிலே முற்றிலும் பற்றிக்கொண்ட பிறகே அது வேலை செய்கிறது என்பதை நீ நன்கு அறிந்துள்ளாய். அதே பாங்கில் பிரம்மஞானம் அடைந்துள்ள ஒருவனுக்கு அகம், புறம் என்றபடி பரம்பொருள் ஒன்றே யாண்டும் வியாபித்திருப்பது அனுபவ பூர்வமாக அமைகிறது. பரவஸ்து ஒன்றுதானே உள்ளது. அதற்குப் புறம்பாக உடலோ உள்ளமோ பிராணனோ ஜீவபோதமோ இருக்கமாட்டா."

இந்தக் கூற்றுக்குச் செவிசாய்த்துக்கொண்டிருந்த மகேந்திரர் மீண்டும் தமக்குள்ளேயே எண்ணிக்கொண்டதாவது: "கருத்தில் ஊறிய கூற்று இது!"

பரமஹம்சதேவர்: "மனிதன் ஒருவனுக்கு மனோநாசம் உண்டாகுமிடத்துப் பிரம்மஞானம் தானே உதயமாகிறது. 'நான், நான்' என்று உச்சரிக்கின்ற அகங்காரமும் மனோ நாசத்தோடு அழிந்துபட்டுப் போகிறது. பக்தி மார்க்கத்தை முறையாகக் கடைப்பிடிப்பவனுக்கும் பரஞானம் தானே வந்து வாய்க்கிறது. மற்று, விசார மார்க்கம் எனப் பகரப்பெறுகிற ஞான மார்க்கத்திலும் அதே நிலையை ஆத்ம சாதகன் ஒருவன் அடையப்பெறுகிறான். நாம ரூபத்தோடு தென்படுகின்ற அனைத்தும் மாயையின் விளையாட்டு என ஞானி ஒருவன் முடிவு கட்டுகிறான். நாமரூபமாகக் காட்சி கொடுத்த உலகம் அழிந்துபட்டுப்போன பிறகு ஜீவர்களின் அகங்காரம் மட்டுமே எஞ்சி நிற்கிறது.

"ஒவ்வோர் அகங்காரத்தையும் ஒரு மட்பாண்டத்துடன் சீர்தூக்கிச் சொல்லலாம். பத்து மட்பாண்டங்களில் நீர் நிறைந்திருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது அவை ஒவ்வொன்றிலும் தனித்தனியாகச் சூரியன் பிரதிபிம்பிப்பதாகத் தென்படுகிறது. இந்தப் பத்துப் பிரதிபிம்பங்கள் யாவுக்கும் ஆதாரமாயுள்ள அசல் சூரியன் இருந்தபடி இருக்கிறது.

"பத்துப் பாண்டங்களுள் ஏதேனும் ஒன்று உடைந்துபட்டுப் போவதாக வைத்துக்கொள்வோம். அதன் பிறகு எத்தனை சூரியர்கள் இருக்கின்றன? பிரதிபிம்பிக்கின்ற ஒன்பது சூரியர்கள் ஒளிர்வதற்கிடையில் மூல சூரியனும் மாற்றம் ஏதும் இல்லாது இருந்தபடி இருக்கிறது.

"இதே பாங்கில் ஏனைய ஒன்பது பாண்டங்களையும் உடைத்து விட்டால் அவைகளில் தென்பட்ட ஒன்பது சூரியர்களும் அழிந்து பட்டுப் போகின்றன. ஆனால் இந்நிகழ்ச்சிகளை முன்னிட்டு மூல சூரியனுக்கு லாப நஷ்டம் ஏதும் உண்டாவதில்லை.

"அதைச் சொல்லுதற்கு ஆள் யாரும் மிச்சமில்லை. பிரதிபிம்பிக்கின்ற சூரியனைக் கொண்டுதான் மூல சூரியனை நாம் யூகிக்கின்றோம். அதாவது அகங்காரம் இருந்தால்தான் அந்த அகங்காரத்துக்கு மூலகாரணமாயுள்ள மெய்ப்பொருள் விளக்கப்பெறுகிறது. ஆனால் சமாதி நிலையில் அகங்காரம் அறவே அகன்று போகிறது. சமாதி நிலையில் அடைந்த பேரானந்தம் எத்தகையது என்பதை அந்தப் பெருநிலையினின்று கீழே வியவகார நிலைக்கு அதாவது உலக ஞாபகத்துக்குத் திரும்பி வந்தவன் விளக்க முடியாது!"

சூரியன் அஸ்தமித்து இப்போது இருண்டு போயிற்று. பரமஹம்ச தேவருடைய திருக்கூட்டம் அமர்ந்திருந்த மண்டபத்தினுள் தீபங்

கள் எரிந்து கொண்டிருந்தன. பரமஹம்ச தேவருடைய மனது அதீத நிலையில் உலவிக் கொண்டிருந்தது. அவரைப் புடைசூழ்ந்து பக்தர்கள் அமர்ந்திருந்தனர்.

பரவச நிலையில் இருந்தவாறே பரமஹம்ச தேவர் பகர்ந்ததாவது: "உண்மை ஒன்றை நான் உங்களுக்கு எடுத்து இயம்புகின்றேன். முழுமனதோடு முயல்கின்றவனுக்குப் பரம் பொருளை அனுபூதியில் அறிந்துகொள்வது சாத்தியமாகிறது. அருள் நாட்டம் உடைய வனுக்கே அது சாத்தியமாகிறது.

"பரநாட்டம் பூணுகிறவர்கள் அரிதிலும் அரிதாம். அவர்கள் பாக்கியவான்கள். பர ஞானத்தினின்று பிசகி அன்னவர்கள் கீழ் நிலைக்கு வருவதில்லை. அத்தகைய பெருநிலை பெறுகின்ற தீவிர அதிகாரிகள் உலகில் யாண்டும் இருந்து வருகின்றனர். அவர்களுக் குப் பரஞானத்தைக் கிருபை கூர்ந்து அன்னை பராசக்தி கொடுத்தருள்கின்றாள்.

"மனிதனுடைய மனது கடவுள் நாட்டத் துக்கே உரியதாம். ஆயினும் அதற்கு நேர் மாறாக அது ஏன் உலக நாட்டத்தில் அவ்வளவு தீவிரமாகப் போகிறது? கடவுளினும் மிக்க வல்லமைவாய்ந்ததாக அவனுடைய மாயாசக்தி அமைந்திருக்கிறது. ஒரு நியாயாதிபதியின் ஒழுங்குப்பாட்டினும் மிக்கதாக அவனுடைய வேலையாளின் அதிகாரம் தென்படுகிறது." (இதைக்கேட்டு எல்லாரும் நகைக்கிறார்கள்.)

"உம்முடைய பிரார்த்தனையைக் கேட்டு நான் மகிழ்வு மிக எய்துகிறேன். ஆதலால் ஏதேனும் வரம் ஒன்று கேட்பீராக!" என்று ஸ்ரீ ராமன் நாரத மஹரிஷியிடம் இயம்பினான். 'ஓ ராமா! மாறாத பக்தி நான் உன்னிடம் யாண்டும் வைத்திருப்பேனாக. மேலும், உலகம் முழுதையும் ஏமாற்ற வல்ல உன்னுடைய மாயாசக்தி என்மீது எந்தவிதமான ஆதிக்க மும் செலுத்தாதிருக்கும்படி நீ அனுக்கிரகம் பண்ணுவாயாக!' என்று நாரதர் தசரத ராம னிடம் விண்ணப்பித்தார். 'அது அங்ஙனமே ஆகுக; மேலும் ஒரு வரம் என்னிடம் கேட் பீராக' என்று ஸ்ரீ ராமன் அம்மஹரிஷியிடம் தெரிவித்தான். 'ஓ ராமா! எனக்கு இது போதும். வேறு எந்த வரமும் உன்னிடம் நான் கேட்க மாட்டேன்' என்றார் நாரதர்.

"உலகம் முழுவதையும் மயக்கவல்ல இந்த மாயாசக்திக்கு அடிமைப்பட்டவர்களாக மக் கள் இருக்கிறார்கள். பரம்பொருள் மானுட வடி வெடுக்கும்பொழுது அப்பரமனும் இந்த மாயா சக்தியின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவனாகிறான். ஸ்ரீ ராமன் சீதையை இழந்தபொழுது கதறிப் பதறி அழுததற்கு எல்லை இல்லை. ஐம்பூதங்களின் ஆதிக்கத்துக்குட்பட்டுப் பரப்பிரம்மமே திணறு கிறது. ஆனால் மற்றொரு விஷயத்தை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ஈசுவரன் வெறும் சங்கற்ப மாத்திரத்தில் மாயையின் ஆதிக்கத்தை உதறித் தள்ளவல்லவனாகிறான்."

பவநாதன்: "இருப்புப்பாதை வண்டித் தொடரின் மீது ஆதிக்கம் செலுத்துகிற அதன் காப்பாளன் (Guard) வேண்டுமென்றே தன் இச்சா சுதந்திரத்தைக்கொண்டு தான் ஊர்ந்து செல்லும் வண்டியின் கதவை மூடிக்கொள் கிறான். ஆயினும் எப்பொழுது வேண்டுமானா லும் அக்கதவைத் திறந்துகொண்டு வெளியே வரும் சுதந்திரத்தை அவன் அனுபவிக்கிறான்."

பரமஹம்ச தேவர்: "அவதார மூர்த்திகள் எப்பொழுது வேண்டுமானாலும் மாயையின் ஆதிக்கத்தினின்று தங்களை விடுவித்துக் கொள்ள முடியும். ஆனால் பந்த பாசத்தில் உழல்கின்ற ஜீவர்களுக்கு அது சாத்தியப் படாது. அவர்கள் காமம், காசு, ஆசை என்னும் மாயையில் கட்டுண்டு கிடக்கிறார்கள். அறை ஒன்றின் வாயில் ஆணியடித்து அடைக்கப் பட்டிருக்கின்றபொழுது மக்கள் உள்ளிருந்து வெளியே வருவது எப்படி?"

பவநாதன்: "வண்டித் தொடரில் மூன்றாம் வகுப்பில் பிரயாணம் பண்ணுகிறவர்கள் வண்டியினுள் அடைபட்டுக் கிடக்கின்றனர். வண்டித்தொடர் அதிகாரிகள் சாவி போட்டு வண்டியைத் திறந்து வைத்தால்தான் அவர்கள் வெளியே வர முடியும்."

கிரீஷ்: "மானுடன் ஒருவனுடைய இச்சா சுதந்திரம் இங்ஙனம் கட்டுண்டு கிடக்கின்ற பொழுது அவன் எங்ஙனம் உய்வடைவான்?"

பரமஹம்சதேவர்: "ஈசன் தானே குருஸ்தா னத்தை ஏற்றுக்கொண்டு அவனுடைய தளை யைக் களைய வல்லவனாயிருக்கின்றபொழுது கட்டுண்டு கிடக்கிற மானுடன் அதைக் குறித் துக் கவலைப்பட வேண்டியதில்லை."

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

11-10. பொங்குஏதம் ஆன புழுக்கம்எலாம் தீர [இன்பம்
எங்கேஎங் கேஎன்று இரங்குநாள் [எந்நாளோ.

பொங்கு ஏதம்-மிகுதியான குற்றம். புழுக்கம்-துன்பம்.

பருவமழை கொட்டிக் கொண்டிருக்கின்ற பொழுது பகலையும் இரவையும் பாகுபடுத்தத் தான் சாத்தியமாகிறது. ஆனால் சூரியனைக் காண முடியாது. அந்நிலையில் சூரியனுடைய சன்னிதியில் இருந்தும் அது இல்லாததற்கு நிகராகிறது. அதே போன்று யாண்டும் ஆனந்தத்தில் திளைத்திருப்பது மனிதனுக்குச் சொந்தமான இயல்பாயிருக்கிறது. அப்படியிருந்தும் மக்களுள் பெரும்பான்மையோர் காலமெல்லாம் துயரத்துக்கு ஆளாகி வருகின்றனர். அதற்குப் பொறுப்பாளிகள் அவர்கள் தாமே ஆகின்றனர். சூரியன் வண்ணத்திலும் ஆற்றலிலும் மிகப்பெரியது எனினும் பருவமேகம் அதை மூடி மறைத்து வைத்திருப்பது போன்று காட்சி கொடுக்கிறது. அதே பாங்கில் மனிதன் பேரானந்தத்துக்கு உரியவனாகிறான். ஆனால் அவன் செய்கின்ற குற்றம் அந்த ஆனந்தத்தை மறைத்து வைத்திருப்பதுபோன்று காட்சி தருகிறது. மனிதன் செய்கிற குற்றம் அக்ஞானத்தினின்று வருகிறது. அக்ஞானமே மனிதன்படுகிற துயரங்களனைத்துக்கும் மூல காரணமாகிறது. அதை அகற்றுவது மனிதனுடைய பொறுப்பு.

பருவமழை ஓய்ந்து வருகிறபொழுது இடையிடையே சூரியன் தென்படுகிறது. அதற்கு நிகராக மனிதன் தனக்குத் தானே உண்டு பண்ணிக் கொண்டுள்ள அக்ஞானத்துக்கு முடிவுகாலம் ஒன்று வருகிறது. அது முடிவடைதற்கு ஏற்பத் தனக்கு யாண்டும் சொந்தமாயுள்ள இன்பத்தை மனிதன் இடையிடையே நுகர்கிறான். சஞ்சரிக்கும் மேகங்களுக்கிடையில் சூரியன் தென்படுவதும் மறைவதும் போன்று காட்சி தருகிறது. அதே போன்று மனிதன் தனக்குத் தானே உண்டு பண்ணிக்கொண்டுள்ள அக்ஞான நிலையை இடையிடையே அகற்றுகிறான். அக்ஞான இருளை அறவே ஓட்டுதற்கு உற்ற உபாயம் பரஞானம் அடைதற்பொருட்டுப் பேராவல் கொண்டிருப்பதேயாம். அந்த ஆவல் அதிகரிப்பதற்கு ஏற்ப அக்ஞானம் அல்லது மடமை தானே அகன்றுபோகிறது. எனவே துயரத்தில் அழுந்திக் கிடக்கிற மனிதன் அத்துயரத்தை உடனடியாக மறந்துவிட்டு அருள் நாட்டம் பூணுவானாகில் அந்த அருள் நாட்டம் ஒன்றே அக்ஞான இருளை ஓட்டுதற்கு உபாயமாம் என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

அருள் நாட்டத்தினுடைய வேகம் அதிகரிப்பதற்கு ஏற்ப அக்ஞான இருளின் வேகம் தணிகிறது. மானுடன் ஒருவனை நீருக்குள் அமுக்கிப் பிடித்துக்கொண்டால் மூச்சுவிடுவதற்குக் காற்றில்லாது அவன் திணறுகிறான். அவன் படும் பாட்டினுடைய வேகத்தை ஒருவாறு மற்றவர்களும் கிரகித்துக்கொள்ள முடியும். அத்தகைய வேகம் வாய்த்தால் அக்கணமே அக்ஞானத்தின் ஆதிக்கம் நிரந்தரமாக அடிபட்டுப் போகிறது. எனவே மனிதன் தனக்குத் தானே உண்டுபண்ணிக்கொண்ட துயரமெல்லாம் உண்மையல்ல என்னும் தெளிவை அடையப்பெறுகிறான். தான் எப்போதும் ஆனந்தமயமான பேரறிவுப் பொருள் என்னும் மெய்ஞ்ஞானம் அவனுக்கு வந்து வாய்க்கிறது. அவ்வாறு தம்மிடம் உள்ள அக்ஞான இருளெல்லாம் அகன்று போய்த் தாம் அப்பெருநிலையை விரைவில் எய்துதல் வேண்டும் என்று தாயுமானவர் பரம்பொருளிடம் விண்ணப்பிக்கின்றார்.

11-11. கடலின்மடை கண்டதுபோல் கண்ணீர் ஆறாக
உடல்வெதும்பி மூர்ச்சித்து உருகுநாள் எந்நாளோ.

கண்ணீர் சொட்டுதலில் இரண்டுவிதக் கூறுகள் இருக்கின்றன. ஒன்று உலகம் தருகிற நிலையற்ற இன்பத்தை நாடிக் கண்ணீர் சிந்தலாம். மற்றதோ முற்றிலும் தனக்குச் சொந்தமானது. உள்ளத்தினுள்ளே வீற்றிருக்கின்ற

பரம்பொருளிடத்திருந்து வருகிற இன்பத்தை நாடி அழுதலே பாராட்டுதற்குரிய கூறு ஆம். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தம்முடைய சாதன காலத்தில் தம்முடைய மனதோடு போராடிய பாங்கில் இங்ஙனம் கதறி அழுதார் : ‘ஓ மனமே! உலகம் தருகின்ற போகத்தை நாடி நீ குடம் குடமாகக் கண்ணீர் சிந்தியுள்ளாய். பரம்பொருளை நாடி நீ ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தியது உண்டா? நிலையற்ற நிலவுலகப் பொருளை நாடி நீ குடம் குடமாகக் கண்ணீர் சிந்தியுள்ளாய். நிலையுற்ற பரம்பொருளை நாடி நீ ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தியது உண்டா? ஓ மனமே! உனக்கு நீ கற்பனை பண்ணிக்கொண்டுள்ள பதவியை நாடி நீ குடம் குடமாகக் கண்ணீர் சிந்தியுள்ளாய். உள்ளத்தின் உள்ளே வீற்றிருக்கும் பெரிய பொருளை நாடி நீ ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தியது உண்டா? ஓ மனமே! நீ புகழை நாடிக் குடம் குடமாகக் கண்ணீர் சிந்தியுள்ளாய். பரம்பொருளை நாடி எப்பொழுதாவது ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தியது உண்டா? ஓ மனமே! உனக்கு நீ வைத்துக் கொண்டுள்ள பேரை நாடி நீ குடம் குடமாகக் கண்ணீர் சிந்தியுள்ளாய். அழிந்துபட்டுப்போகும் இவைகளுக்குக் கண்ணீர் சிந்துகின்ற நீ அழியாப் பொருளாகிய பரமனை நாடி ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தியது உண்டா?’ இந்தப் பாங்கில் மனதின் போக்கை அவர் படம் பிடித்துக் காட்டினர். அது நல்வழிக்குத் திரும்ப வேண்டும் என்று அதனோடு போராடினர். அப்படிப் போராடி அதை நல்வழிக்குத் திருப்பினர். அதன் விளைவாகப் பாரமார்த்திகப் பெரிய பேறதனை அடையப் பெற்றார்.

இரண்டு விதமான அழுகையிலும் உடல் வெதும்புதல், மூர்ச்சை போதல் முதலியன பொதுவாம். ஆனல் நிலையற்ற உலக விஷயங்களை நாடி அழுகின்றவன் தளர்வுறுகிறான்; கீழ்மையடைகிறான். தன்னிடத்து இயல்பாயுள்ள பொலிவை இழக்கிறான். மற்று, அவன் அழுகிற அழுகையானது பரம்பொருள் நாட்டத்துடன் கூடியதாய் இருக்குமாகில் அதன் விளைவு மனிதனுக்கு நலன் அனைத்தையும் தருவதாகிறது; அவன் உடலின்கண் உறுதிப்பாடு அடைகிறான்; அவன் படைத்துள்ள தெய்விக மகிமைகள் அனைத்தும் அவனுக்குச் சொந்தமாகின்றன. அவன் படைத்துள்ள பொலிவு ஓங்குகிறது. எனவே ஆத்மசாதகன் உலக நாட்டத்துக்கு உரிய துன்பக் கண்ணீரை ஒதுக்கிவைத்துவிட்டுப் பரநாட்டத்துக்குரிய இன்பக்கண்ணீரில் திளைத்திருக்க வேண்டும் என்பது இக்கண்ணியின் கருத்து.

12-12. புலர்ந்தேன் முகம்சருகாய்ப் போனேன்நின் காணே
அலந்தேன்என்று ஏங்கி அழுங்குநாள் எந்நாளோ.

புலர்ந்தேன்—முகம் வாடினேன்.

மனத்திருப்தியோடும் மகிழ்வோடும் வாழ்ந்திருப்பவர்களுக்குப் பொருத்தமான உணவு அமைந்தால் உடல் கொழுத்து வருவதும் உறுதிப்பாடு அடைவதும் அத்தகைய சுக ஜீவனத்துக்கு எடுத்துக் காட்டாகிறது. இதற்கு நேர்மாறாக நலனே கேடோ ஆகிய ஏதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டு அதிருப்தி உண்டாகுமானல் முகம் சோர்வடைவதும் உடல் மெலிந்து போவதும் இயல்பே. இது துயரத்தின் விளைவாக நிகழுமாகில் உடலின் பொலிவு குன்றுகிறது. பரநாட்டத்தை முன்னிட்டு இது நிகழுமாகில் உடலின் பொலிவும் பிரகாசமும் ஓங்குகிறது. முந்தையது பெறுதற்கரிய பேறு ஆம். மானுடன் உடல் எடுத்திருப்பது அதைச்சொகுசாக வைத்திருத்தல் பொருட்டன்று. மேலான காரியம் ஏதேனும் ஒன்றுக்கு அவ்வுடல் பயன்படுமாகில் அம்மனிதன் பாக்கியவானுகிறான். சீதாபிராட்டியின் சிறை வாழ்வு இதற்குச் சான்றாகிறது. ஆங்கு அவள் உண்ணாது உறங்காது இராமன் சிந்தனையிலேயே ஊறியவளாகக் கிடந்தாள். அதன் விளைவாக அவள் பெற்றிருந்த அருள்நிலையின் மேன்மையை ஆஞ்சநேயன் ஒருவன்தான் கண்டான். கண்டதும் அவளுடைய மகிமையை உள்ளபடி அவன் அறிந்துகொண்டான். அக்காட்சியைக் காணும் பேறு அவளுடைய நாயகனாகிய ஸ்ரீ ராமனுக்கே வாய்க்கவில்லை. அருள்நாட்டத்தின் விளைவாக உடல் மெலிந்து போவதும் வாடிக் கிடப்பதும் ஜீவன் ஒருவன் அடையப்பெறும் பெரிய பேறாகும். அப்பெரிய நிலை தமக்கு வந்து வாய்க்கவேண்டும் என்று தாயுமான சுவாமிகள் அலறிப் பதறிப் பிரார்த்திக்கின்றார்.

சமூகப் புரட்சி

(சுவாமி விவேகானந்தர்)

சூத்திரர்கள் தங்கள் சூத்திர இயல்போடும், பழக்க வழக்கங்களோடும் சமுதாயத்தில் தலைமை தாங்குவதற்கு உரிய காலம் வரும். அவர்கள் மனப்பான்மையில் தங்களை வைசியராகவோ க்ஷத்திரியராகவோ மாற்றிக்கொள்ளாமல் தலைமை வகிக்கும் உரிமையைப்பெற்று விடுவார்கள். இது எல்லாச் சமுதாயங்களிலும் நிகழும் காலம் வரும். மேனாடுகளில் இந்தச் சக்தி உதயமாக ஆரம்பித்து விட்டது. முதன் முதல் அங்குதான் இது உதயமாக ஆரம்பித்துள்ளது. சிந்தனையாளர்கள் இதன் விளைவு எப்படிப்பட்டதாக இருக்கும் என்று புரிந்து கொள்ள முடியாமல் திகைப்படைந்துள்ளார்கள். பொதுவுடைமை வாதமும், ஆட்சியொழிப்புவாதமும், அனைத்தையும் மறுக்கும் வாதமும் இவைபோன்ற மற்றவையும் இனி வரும் சமூகப்புரட்சியில் முன்னணியில் இருக்கும்.

நீண்டகாலம் மூடியிருந்த இருள் நீங்கும் அறிகுறி தென்படுகிறது. கொடிய துன்பத்துக்கு இறுதியாக முடிவு ஏற்படும் அறிகுறி தென்படுகிறது. உயிர் இழந்து கிடந்த ஒன்று மீண்டும் உயிர்பெற்று எழுகின்ற அறிகுறி தென்படுகிறது. வரலாற்றுக்கும் எட்டாத மிகத் தொலைவான காலத்திலிருந்து குரல் ஒன்று வந்துகொண்டிருக்கிறது. இமயத்திலிருந்து வரும் குரல் ஞானமும், பக்தியும், தொண்டும் நம்மிடத்தில் ஓங்கவேண்டும்என்று ஒலிக்கிறது. இக்குரல் தெளிவானதாகவும், உறுதியானதாகவும் இருக்கின்றது. நாளுக்கு நாள் அது வலிமையடைந்துகொண்டே இருக்கின்றது. தூங்கிக்கொண்டிருந்த சமுதாயம் எழுந்திருக்கின்றது. இமயத்திலிருந்து வீசும் தென்றல் போன்று அக்குரல் உயிர்ச் சக்தியை ஊட்டுகிறது. சோம்பலும், மயக்கமும் சமுதாயத்தை விட்டு அகன்றுகொண்டிருக்கின்றன. உறங்கிக்கொண்டிருந்த பாரதத் தாய் விழித்து எழுந்திருப்பதைக் காணாதவர்கள் குருடர்கள் ஆவார்கள். பாரதத்தாய் எழுந்திருப்பதை அஞ்ஞானிகள் காண்பதில்லை. பாரதத்தாய் வீறுகொண்டு எழுந்திருப்பதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. இனி அவள் உறங்க மாட்டாள். புறச் சக்திகள் எதுவும் அவள் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த முடியாது. அவளிடத்திலுள்ள அளப்பரிய சக்தி எழுந்திருக்க ஆரம்பித்துவிட்டது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிறந்த அன்றே சத்திய யுகம் பிறந்துவிட்டது. இனிமேல் மக்களிடம் உள்ள வேறுபாடுகள் அனைத்துக்கும் முடிவு வந்துவிடும். அனைவரும் அவருடைய தெய்வீக அன்பில் இடம் பெறுவார்கள். ஆண் பெண் என்னும் பால் வேறுபாடு, ஏழை பணக்காரன் என்னும் வேறுபாடு, பாமரன் படித்தவன் என்னும் வேறுபாடு, சண்டாளன் பிராம்மணன் என்னும் வேறுபாடு ஆகிய யாவற்றையும் வேரோடு களைந்தெறிவதற்கு என்றே அவர் வாழ்ந்து வந்தார். வேற்றுமைகள் யாவற்றையும் அவர் முறியடித்தார். இந்து, முகம்மதியன், கிறிஸ்தவன் என்னும் வேறுபாடுகளெல்லாம் அவர் முன்னிலையில் மறைந்துவிடுகின்றன. வேற்றுமை காரணமாக ஏற்பட்டிருந்த சச்சரவுகளெல்லாம் வேறு யுகத்தை நோக்கிப் போய் விட்டன. இந்தச் சத்திய யுகத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பேரன்பு யாவரையும் ஒன்று படுத்துகின்றது. இதுவரையிலும் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் போன்று பூரணத் தெய்வத் தன்மை வாய்ந்த ஒருவர் தோன்றியதில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணரை மையமாகக் கொண்டு நாம் அனைவரும் வாழவேண்டும். அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப யாரை வேண்டுமென்றாலும் கடவுள் என்றோ, இரட்சகர் என்றோ, இலட்சிய புருஷர் என்றோ, ஆசார்யர் என்றோ, மகான் என்றோ ஏற்றுக் கொள்வதற்குச் சுதந்திரம் அளித்துவிட வேண்டும். தெளிவான மார்க்கத்தில் செல்வதற்கிடையில் சுதந்தரமும் இருக்கவேண்டும். உறக்கத்தில் இருந்து எழுந்திருக்கும் சமுதாயம் நேரான வழியில் விழிப்புடன் செல்ல வேண்டும். தவறான வழியில் சென்றுவிடுமானால் ஆபத்தாக முடியம். சமுதாயம் இனி விழிப்புடைவிருந்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் காட்டிய வழிநின்று முன்னேறிச் சென்று கொண்டிருப்பதாகுக.

புரந்தரதாசர் சரிதம்

(211 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரகுநாதராவ் பகவத் சிந்தனையில் மூழ்கியதால் மற்ற அனைத்தையும் மறந்தவரானார். குடும்ப விஷயங்களைப் பற்றி அவர் மனம் சிந்தனை செய்யவில்லை. பகவான் மீது கீதங்களைப் பாடிப் பரமானந்தம் அடைவார். அவருடைய மகள் ருக்மணிபாயும்அவரோடு சேர்ந்து பஜனையில் ஈடுபட்டாள். இங்ஙனம் அவருடைய குடும்பமும், அவரும் பக்தியில் ஈடுபட்டிருந்தனர்.

பகவான் அவருடைய பக்தியைச் சோதிக்க அவர்களுடைய வீட்டுக்கு எழுந்தருளினார். வயோதிகனாக அந்தணர் வேடத்தில் அவர் வந்தார். ரகுநாதராவும், அவருடைய மனைவியும் அந்தணர் வேடத்தில் வந்த பகவானை முறைப்படி உபசரித்தனர். அந்தணர் வேடத்திலிருந்த பகவான் அவர்களுக்கு உரைத்ததாவது: "உங்கள் பக்தியைப் பாராட்டுகின்றோம். நீங்கள் பகவத் சேவையில் ஈடுபட்டுக் குடும்பக் காரியங்களை மறந்துவிட்டீர்கள். உங்கள் செல்வத்தையெல்லாம் வாரி வழங்குகின்றீர்கள். செல்வத்தையெல்லாம் வாரி இறைத்துவிட்டுத் தரித்திர நிலையை அடைவது பொருந்தாது. இல்லறம் நடத்துகின்றவர்கள் உலோபிகளாகவும் இருக்கக் கூடாது; தரித்திரர்களாகவும் இருக்கக் கூடாது. பொருளை நேர்மையான முறையில் தேடவும் வேண்டும். அப்பொருளைப் பாதுகாத்து நல்ல முறையில் செலவழிக்கவும் வேண்டும்." அதற்கு ரகுநாதராவ் பதில் கூறியதாவது; "சுவாமி, பகவான் என்னைத் தடுத்தாட்கொண்ட நாள் முதல் என் இச்சைப்படி நான் எக்காரியமும் செய்வதில்லை. என் அந்தராத்மாவாகத் திகழும் எம்பெருமானின் தூண்டுதல் பிரகாரம் நான் காரியம் செய்து வருகின்றேன். பகவானுடைய திருவடிகளையே கதியென்று நம்பி இருக்கின்றேன். நாளைக்கென்று பொருள் சேகரித்து வைப்பது பொருந்தாது. கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைய வேண்டும். நான் பகவான் காரியம் செய்து வருகின்றேன். என்னைக் காப்பாற்றுவது அவனுடைய செயல். நான் பகவானைச் சேவிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றேன். என் கடன் பணி செய்து கிடப்பது. அவன் கடன் அடியேனைக் காப்பது." இங்ஙனம் ரகுநாதராவ் கூறியதைக் கேட்ட பகவான் மகிழ்ச்சி அடைந்தார். "உம் குழந்தை ருக்மணிபாய்க்கு ஏன் விவாகம் செய்து வைக்காதிருக்கின்றீர்?" என்று பகவான் கேட்டார். கல்யாணத்திற்கு வேண்டிய பொருள் என்னிடத்தில் இல்லை. நான் இப்பொழுது இருக்கும் நிலையில் கல்யாணம் செய்துவைப்பது முடியாத காரியம். ருக்மணிக்குக் கல்யாணம் முடியவேண்டுமென்பது பகவானின் திட்டமாக இருந்தால் முடியட்டும். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. எப்பொழுது ருக்மணிக்குக் கல்யாணம் முடிக்க வேண்டுமென்பதை பகவான் அறிவார். எனவே நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை."

பகவான் கூறியதாவது: "உன் பக்தியை மெச்சுகின்றேன். இந்த ஊருக்கு அடுத்த கிஷ்கிந்தாபுரியில் செல்வந்தன் ஒருவன் இருக்கின்றான். அவனுக்கு ஒரு குமாரன் இருக்கின்றான். கல்வி, குணம் எல்லாவற்றிலும் அவன் உம்முடைய புதல்விக்குத் தகுந்தவன். இக்கல்யாணத்தை முடிப்பது என்னுடைய பொறுப்பு."

பகவான் தாம் மேற்கொண்ட பொறுப்பை நிறைவேற்றுவதற்காகக் கிஷ்கிந்தாபுரிக்குச் சென்றார். அங்குக் கேசவராவைச் சந்தித்தார். கேசவராவும் அவரை நன்கு உபசரித்தார். கேசவராவுக்குத் தம் மகனுக்குக் கல்யாணம் செய்ய வேண்டுமென்ற ஒரு கவலைதான் இருந்தது. அவருடைய மனக்கவலையைப் போக்குவதற்கே தாம் வந்திருப்பதாக வயோதிகர் வடிவில் வந்த பகவான் கூறினார். அவர் மேலும் சொன்னதாவது: "அன்பரே! வேமனபுரி என்னும் சிற்றூர் உங்கள் ஊருக்குப் பக்கத்தில் இருக்கிறது. ரகுநாதராவ் என்னும் பக்தர் ஒருவர் அங்கு இருக்கிறார். அவருக்கு ருக்மணிபாய் என்னும் புதல்வி இருக்கின்றாள். அவர்கள் இப்பொழுது வறுமையில் இருப்பினும் அவர்கள் என்ன சீர் செய்வார்கள் என்று நீ நினைக்க வேண்டாம். அதை நான் பார்த்துக்

கொள்கிறேன். ருக்மணி உன் புதல்வனுக்கு ஏற்ற பெண் ஆவாள். நீ கல்யாணத்துக்கு எவ்விதச் செலவும் செய்யவேண்டாம். இக் கல்யாணம் சிறப்பாக நடப்பதற்கு நான் எல்லா ஏற்பாடுகளும் செய்கிறேன். உங்கள் சம்மதத்தைத்தான் நான் எதிர்பார்க்கிறேன்" என்ருர்.

கேசவராவ் பகர்ந்ததாவது; "நீங்கள் என் துயரைத் துடைத்தீர்கள். உங்கள் விருப்பப் படியே நான் நடக்கச் சித்தமாக இருக்கின் றேன்." பகவான் உடனே வேமனபுரி நோக் கிப் புறப்பட்டுச் சென்று ரகுநாதரிடம் "உம் மகள் ருக்மணிக்கு நாளைக்குக் கல்யாணம் செய்ய முடிவாகி விட்டது. கல்யாணம் எப்படி நடக்கும் என்ற விசாரம் உங்களுக்கு வேண் டாம். இன்றைக்கே புறப்பட்டு உங்கள் மகளு டனும், பந்துமித்திரர்களுடனும் நாளை கிஷ் கிந்தாபுரியை அடைந்து விடுங்கள்" என்று அவர்களைத் துரிதப்படுத்தினர். ரகுநாதராவ் பக்தகோடிகளைத் திரட்டிக்கொண்டு தம்புரா, வீணை, ஜால்ரா, சிப்ளா முதலிய வாத்தியக் கருவிகளுடன் கிஷ்கிந்தாபுரிக்குப் புறப்பட் டார். அக்கூட்டம் கிஷ்கிந்தாபுரியை அடைந் ததும் அவ்வூர் மக்கள் பெருமகிழ்ச்சி அடைந் தனர். நாமசங்கீர்த்தனத்தின் பேரொலி அவ் வூர் மக்களைப் பரவசப்படுத்தியது. கேசவராவ் விரைந்து சென்று அவர்களை வரவேற்று அவர் களுக்காக ஏற்பாடு செய்திருந்த விடுதியில் தங்கும்படி சொன்னர். இதுவரையிலும் இத் தகைய சிறப்புடன் கல்யாணம் நடந்ததில்லை என்று சொல்லுகின்ற வகையில் கல்யாணம் சிறப்பாக நடந்தேறியது. கல்யாணத்திற்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான மக்கள் முகத்தி லும் ஆனந்தமே குடிகொண்டிருந்தது. கல்யா ணம் முடிந்ததும் அதை நடத்தி வைத்த அந்தணர் மாயமாய் மறைந்தார். ரகுநாதராவ் தம் மகளை உரிய இடத்தில் சேர்த்துவிட்டோம் என்ற மன நிம்மதியுடன் வேமனபுரிக்குத் திரும்பி நாதப்பிரம்ம மடத்தில் தங்கிப் பகவத் சேவையில் ஈடுபட்டிருந்தார்.

பகவந் நாமசங்கீர்த்தனம் செய்து மக்களை யெல்லாம் உய்விக்கவேண்டும் என்ற எண்ணம் தூண்டத் தம்மனைவியிடமிருந்தும், பக்தர்களிட மிருந்தும், சமூகத்திடமிருந்தும் விடை பெற்றுக் கொண்டு ரகுநாதராவ் க்ஷேத்திர யாத்திரை புறப்பட்டார். பத்ரிகாச்ரமம், மதுரா, கோகு லம், பிருந்தாவனம், வாரணசி, பூரி முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களில் உள்ள பகவானைத் தரிசித்துப் பரவசமடைந்தார். லட்சக்கணக் கான பாமர மக்களை இனிய சங்கீதத்தாலும், பகவந் நாம உச்சாரணையினலும் பக்தர்களாக மாற்றி அமைத்தார்.

திருவேங்கட மலைக்குச் சென்று அங்கு எழுந்தருளியுள்ள இறைவனைக் குறித்து ரகு நாதராவ் உருகிப் பாடினர். அவருடைய மனைவி லட்சுமிபாயும் திருவேங்கடம் வந்து சேர்ந் தாள். கணவனும், மனைவியும் உள்ளம் உருகும் படியாகச் சங்கீதத்தோடு கீதங்கள் பாடிக் கொண்டு திருப்பதி வீதிவழியே சென்று கொண்டிருந்தனர். வேசியர் குலத்தில் பிறந்த ஒரு பக்திமதி அவர்கள் இருவரும் உருகிப் பாடிச் செல்வதைக் கண்டாள். அவர்கள் இருவரையும் அவள் தன்வீட்டிற்கு அழைத்துச் சென்று "பக்த சீலர்களே, திருவேங்கடத்தில் இருக்கும்வரை அடியாளின் இல்லத்தில் தங்கி இவ் இல்லத்தைக் கிருதார்த்தம் ஆக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். அவர்கள் இருவரும் அதற்குச் சம்மதித்தனர். நாள்தோறும் திருவேங்கடத்தானைத் தரிசனம் செய்து அந்தப் பக்திமதியின் வீட்டில் வசித்து வந்தார்கள். அந்தப் பக்திமதி புரந்தரி நாள் தோறும் இரவில் வீணையை எடுத்துக்கொண்டு திருவேங்கடத்தான் கோயிலுக்குப் போய்வந் தாள். அவள் நாள்தோறும் செல்வதைக் கவனித்த ரகுநாதராவ் ஒருநாள் அவள் முன் விழுந்து வணங்கி "தாங்கள் இரவில் சங்கீத விருந்துக்குப் போய் வருகிறீர்கள். தாங்கள் பிரதிதினமும் சந்நிதிக்குச் சென்று வருகின் றீர்கள். சந்நிதியின் வாயில் இரவில் மூடப் பட்டிருக்கும். ஆங்குத் தாங்கள் என்னசெய் கின்றீர்கள்?" என்று கேட்டார். புரந்தரி பகர்ந்ததாவது: "பக்தசிகாமணி! நான் சந் நிதிக்குச் சென்று வீணையை வாசிக்க ஆரம்பித் ததும் கதவு திறக்கும். திருவேங்கடத்தான் வெளி வருவார். என் வீணை ஒலிக்கு ஏற்ப அவர் நடனம் செய்வார். பின்னர் அவர் வீணு கானம் செய்ய நான் நடனம் செய்வேன். இது தான் நிகழ்கின்ற செயல்" என்ருள். இதைக்

கேட்ட ரகுநாதராவ் பிரமித்துப் போய்விட்டார். இவ் அம்மையின் பக்திக்கு உலகில் ஈடு உண்டோ? இவ்அம்மையின் வீட்டில் தங்குவதற்கு நாங்கள் முன்பு தவம் செய்திருக்க வேண்டும். இவர்களால்தான் நம் ஜன்மம் ஈடேறவேண்டும். "இன்றுமுதல் எனக்கு நீங்களே குரு ஆவீர்கள். உங்கள் மூலமாகத் தான் நான் திருவேங்கடத்தானைத் தரிசிக்க வேண்டும். நீங்கள் அதற்குக் கிருபை செய்ய வேண்டும்'' என்று அந்த அம்மையாரின் அடி பணிந்தார். புரந்தரி கூறியதாவது: "நானும் பகவானும் ஆடல் பாடலில் இருக்கும்போது நீங்கள் கம்பத்தின் மறைவில் நின்று பகவானைத் தரிசனம் செய்துகொள்ளுங்கள். நீங்கள் இருப்பது பகவானுக்குத் தெரியலாகாது. வாருங்கள் சந்நிதிக்குப் போகலாம்.'' புரந்தரி ரகுநாதராவைச் சந்நிதிக்கு அழைத்துச்சென்றாள். ரகுநாதராவைக் கம்பத்தின் மறைவில் நிறுத்திவிட்டுப் புரந்தரி சந்நிதியின் முன் சென்று அமர்ந்து சுருதி மீட்டிக் கானம செய்ய ஆரம்பித்தாள். சந்நிதிக் கதவு திறந்தது. பகவான் வெளிவந்து கானத்துக்கு ஏற்ப நடனம் செய்தார். ரகுநாதராவ் பகவானின் நடனத்துக்கு ஏற்பத் தாளம் போட ஆரம்பித்தார். புரந்தரி ரகுநாதராவை அழைத்து வந்து கம்பத்தின் மறைவில் நிறுத்திவைத்திருப்பதையும் ரகுநாதராவ் கம்பத்தின் மறைவில் நின்று கொண்டு தம் நடனத்துக்கேற்பத் தாளம் போடுவதையும் அறிந்த பகவான் ஒரு சூழ்ச்சி செய்தார். புரந்தரியிடமிருந்த வீணையை வாங்கிச் சுருதியைக் குறைத்து ஒரு ராகத்தை அபஸ்வரத்தில் பாடினர். ரகுநாதராவ் அதைக்கேட்டுச் சகிக்க முடியாதநிலையை அடைந்தார். ''அபஸ்வரமாய் இருக்கிறதே, மண்டைவெடித்துப் போய்விடும் போலிருக்கிறதே'' என்று பதறினர். கம்பத்தின் மறைவிலிருந்துகொண்டு ரகுநாதராவ் போட்ட சப்தம் பகவான் காதில் விழுந்தது. உடனேபகவான் கோபித்தவராக ''புரந்தரி! என்ன சூழ்ச்சி நடக்கின்றது? உண்மையைச் சொல்'' என்று கேட்டார். புரந்தரி நடுநடுங்கிக்கொண்டு உண்மையைக் கூறினள். ''மறைவில் இருப்பவரை அழைத்து வா" என்று பகவான் கூறினர். புரந்தரி மறைவில் இருந்த ரகுநாதராவை அழைத்து வந்து பகவான்எதிரில் நிறுத்தினள். ரகுநாதராவ் பகவானின் அடிகளில் வீழ்ந்து உருகிப் பாடினர். பகவான் மகிழ்ச்சி அடைந்தவராய் ''ரகுநாதராவ், உமக்கு வீணை வாசிக்கத் தெரியுமென்று நினைக்கின்றோம்" என்று கூறி வீணையைத் தந்து வாசிக்கச் சொன்னர். ரகுநாதராவ் வீணையை வாங்கி ஒரு ராகத்தை அற்புதமான முறையில் பாடினர். பகவானும் அப்பாடலுக்கு ஏற்ப ஆடினர். வீணையைப் புரந்தரியின் கையில் கொடுத்து விட்டு ரகுநாதராவ் உருக்கமாகப் பாடினர். பகவான் பெருமகிழ்ச்சி அடைந்தவராய் ''என் உள்ளத்திற்கு உகந்த பக்தரே! புரந்தரியின் உதவியால் எம் தரிசனம் உமக்குக் கிடைத்தமையால், இன்று முதல் உமக்குப் புரந்தரதாசர் என்ற பெயர் நிலைத்திருக்கும். இந்த அம்மையாரை நீர் குருவாக ஏற்றுக் கொண்டதால் அவரிடமிருந்தே நீர் உபதேசம் பெற்றுக்கொள்வீராக" என்று பகவான் திருவாய்மலர்ந்தருளினர். புரந்தரியைப் பார்த்து ''புரந்தரி! இவரைச் சாதாரணமானவர் என்று நினைக்கவேண்டாம். நாரத மகானுடைய அம்சமாவார். இவருக்கு நீ உபதேசம் செய்தருள்வாயாக'' என்று புரந்தரிக்குக் கூறிவிட்டுப் பகவான் மறைந்தார்.

பக்தர்களின் பெருமையை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டுவதே பகவான் செயலாகும். இங்குப் பக்திமதியாகிய புரந்தரியின் பக்திப் பெருமையை ரகுநாதராவுக்கும், பக்தராகிய ரகுநாதராவின் பெருமையைப் புரந்தரிக்கும் பகவான் எடுத்துக் காட்டுகிறுர். இருவரும் பகவானின் அருளையும், ஒருவர் மற்றவருடைய பக்திச் சிறப்பையும் அறிந்து பெருமகிழ்வு அடைந்தனர். ஒவ்வோர் உயிரும் தன் இனத்துடன் மகிழ்ந்திருப்பது போன்று பக்தர்கள் தங்கள் கூட்டத்துடன் மகிழ்ந்திருக்கிறுர்கள். ரகுநாதராவ் புரந்தரியின் பக்திப் பெருமையை அறிந்து புரந்தரியைத் தமக்குக் குருவாக ஏற்றுர். அவரிடமிருந்து உபதேசம் பெறும் பாக்கியம் கிடைத்ததைக் குறித்துப் பேரானந்தம் அடைந்தார். புரந்தரியிடமிருந்து உபதேசம் பெற்றுக்கொள்ளுமாறு பகவான் அருளியதைத் தமக்குக் கிடைத்த பெரும் பேருகக் கருதினர். புரந்தரியும் பகவானின் திருவிளையாடலைக் கண்டு ஆனந்தம் அடைந்தாள். (தொடரும்)

67. ज्येष्ठः श्रेष्ठः ஜ்யேஷ்ட ச்ரேஷ்ட: உயிர்களனைத்துக்கும் மூத்தவன்.

முன்னமே தோன்றியிருப்பவன் மூத்தவன் எனப்பகரப்பெறுகிறான். பிரபஞ்சத்தில் இருக்கும் அனைத்துக்கும் மூலகாரணமாக அல்லது முழுமுதற்பொருளாக இருப்பது பிராணன். பிராணன் இயங்குமிடத்து உயிர்கள் அனைத்தும் வடிவெடுக்கின்றன. ஆகையினால் அவன் ஜ்யேஷ்டன் அல்லது மூத்தவன் என இயம்பப் பெறுகிறான். மூத்தவனாய் இருப்பதுமன்றிச் சிறப்புக்கள் அனைத்துக்கும் பிறப்பிடமாகவும் இருப்பிடமாகவும் இருப்பவன் பிராணன். இக்காரணத்தை முன்னிட்டு அவனுக்குச் சிரேஷ்டன் என்னும் பெயர் வந்துள்ளது. சிறப்பனைத்துக்கும் இருப்பிடமாயிருப்பவன் சிரேஷ்டன். பரமாத்மாவுக்கு இக்கோட்பாடு முற்றிலும் பொருந்துகிறது.

68. प्रजापतिः ப்ரஜாபதி: உயிர்களனைத்தையும் பரிபாலிப்பவன்.

படைத்தல், காத்தல், துடைத்தல் ஆகிய மூன்று கிருத்தியங்களுள் காத்தல் என்னும் கடமை சிறப்பாக விஷ்ணுவுக்குரியதாகிறது. தோற்றத்துக்கு வந்துள்ள உயிர்களனைத்தையும் அவன் நன்கு காத்து வருகின்றான். ஆகையினால் அவன் பிரஜாபதி என இயம்பப்பெறுகிறான். பிரஜைகள் அனைவருக்கும் அவன் தலைவனாக இலங்குகின்றான். அதற்கேற்ற தகைமை இயல்பாக அவனிடத்து அமைந்திருக்கிறது.

69. हिरण्यगर्भः ஹிரண்ய கர்ப: தங்க மயமாகத் தகதக என்று பிரகாசித்துக்கொண்டிருக்கும் அண்டம் அல்லது முட்டையாக வடிவெடுத்திருப்பவன்.

சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்ம தேவனுக்குத் தந்தையாயிருப்பவர் மஹாவிஷ்ணு என்பது புராண ஐதிகம். அந்த ஐதிகத்தின்படி ஹிரண்யகர்ப்பனாக அல்லது மிகப் பெரியவனாகப் பிரகாசிக்கின்ற பிரம்மாண்டமாகத் தோன்றி வந்தவன் நான்முகக் கடவுள். அக்கடவுளின் அம்சமாக ஜீவர்களனைவரும் இலங்குகின்றனர். ஹிரண்யகர்ப்பன் சமஷ்டி என்றால் ஜீவாத்மன் வியஷ்டியாக இலங்குகின்றான்.

பரமபதத்தில் வீற்றிருப்பவர் என்பது இதன் பொருள். மாசுபடியாத உயிர்த்தத்துவமாக இலங்குவது ஹிரண்யகர்ப்பன் படைத்துள்ள சிறப்பாகும்.

70. भूगर्भः பூகர்ப: உலகுக்கு இருப்பிடமாகின்றவன்.

அண்டங்களனைத்தும் இறைவனுடையவயிற்றில் இடம் பெறுகின்றன. பூதேவி இவனுக்குச் சக்தியாக இலங்குகின்றாள். அத்தகைய பூதேவியையும் பிரபஞ்சத்தையும் காப்பாற்றுபவன் பூகர்ப்பன் எனப் பெயர் பெறுகின்றான்.

71. माधवः மாதவ: தவ: என்னும் சொல் கணவனைக் குறிக்கிறது. விதவ: என்று சொல்கின்றவிடத்துக் கணவனை இழந்தவள் அல்லது கைம்பெண் என்று பொருள்படுகின்றது. அதற்கு நேர்மாறாகச் சதவ: என்னும் பதம் கணவனை உடையவள் என்னும் பொருள் படுகிறது. ஈண்டு மா என்னும் சொல் லக்ஷ்மி தேவியைக் குறிக்கிறது. ஆகையால் மாதவ: லட்சுமி தேவிக்குக் கணவனாயிருக்கும் மஹா விஷ்ணுவைக் குறிக்கிறது. அன்னவர் மார்பினின்று மாறாது அவள் யாண்டும் தன் தலைவனுக்கு அபின்னமாக இருப்பதால் அன்னவர் மாதவன் அல்லது திருமகளுக்குத் தலைவன் எனப் பொருள்படுகின்றார். இனித் திருமகளோ ஆறு விபூதிகளை உடையவள். அவையாவன: ஞானம், வைராக்கியம், வீரியம், ஐசுவரியம், ஸ்ரீ, கீர்த்தி என்பனவாம். மானுடன் ஒருவனிடத்து இந்த ஆறுவிதத் தெய்வ சம்பத்துக்களுள் ஏதேனும் ஒன்று வந்துவாய்க்குமிடத்து அவன் பெருமகனாகக் கருதப்படுகிறான். பிறகு இந்த ஆறு விபூதிகளும் பரமனிடத்தே ஏகோபித்து மிளிர்ந்து கொண்டிருப்பதால் அவர் மாதவன் என மொழியப் பெறுகின்றார்.

'மா' என்னும் பதம் மதுவித்யா அல்லது பரஞானத்தைக் குறிக்கிறது. எந்தப் பெரிய பொருளிடத்துப் பரஞானம் நிறைநிலையில் இருக்கிறதோ அன்னவர் மாதவ: என மொழியப் பெறுகின்றார்.

இனி, நிறைகுடம் ததும்பாது என்பது பழமொழி. அதற்கொப்ப எந்தப் புருஷனிடம்

ஞானம் நிறைநிலை அடைந்திருக்கிறதோ அன்னவன் பேச்சற்று மௌனத்தில் நிலைத்திருக்கிருன். இந்த மௌனத்தை அடையப் பெற விரும்புகின்றவன் யாண்டும் தியான நிஷ்டனுகத் திகழ்கின்ருன். தியானமோ யோகத்தின் ஏழாவது படியாக அமைந்துள்ளது. அது முதிரும் இடத்துச் சமாதியாகப் பூர்த்தியடைகின்றது. எனவே, மாதவன் என்னும் சொல் யோகத்துக்கும் அதன் ஏழாவதுபடியாயிருக்கின்ற தியானத்துக்கும் அதன் உச்சநிலையாகிய சமாதி அல்லது மௌனத்துக்கும் உறைவிடமானவர் எனப் பொருள்படுகின்றது.

72. मधुसूदनः — மதுசூதன:

விஷய சுகத்தில் கட்டுண்டு கிடப்பது ஜீவர்களின் பாங்கு. ஜீவர்களுள் ஒருவனுக்கு எது ஒவ்வாத மலமாக அமைகிறதோ அது மற்ருெருவனுக்கு நல்லுணவாக அமைகிறது. இதற்கு வேண்டியவாறு சான்றுகளை இயற்கையில் காணலாம். மற்ற உயிர்களால் எது மலமாக ஒதுக்கி வைக்கப்படுகிறதோ அதை நல்லுணவாகப் பன்றி எடுத்துப் புசிக்கிறது. பொதுப்பட பன்றி கீழ்த்தரமான உயிர் என ஒதுக்கி வைக்கப்படுகிறது. மனிதனுக்கு நிகராகக் கருதப்படுகின்ற கால்நடைகளுள் பசுவின் பாங்கை ஆராய்ந்து பார்ப்போம். மனிதன் புறக்கணிக்கின்ற மலத்தை மகிழ்வுடன் தின்னும் பசு இருக்கிறது. இனி, பசு தன் சரீரத்தினின்று புறக்கணிக்கின்ற மலம், மூத்திரம் ஆகியவற்றைப் புனிதம் வாய்ந்தவைகளாக மனிதன் எடுத்துப் பயன்படுத்துகிருன். கடவுள் வழிபாட்டிலும் அவை இடம் பெறுகின்றன. இயற்கையின் அமைப்பு இத்தகையது. இனி, இத்தகைய அழுக்கினின்று வண்டு, புழு, பூச்சி முதலியன வடிவெடுத்து வருகின்றன. இக்கோட்பாட்டை அனுசரித்தே புராண வரலாறு வந்தமைந்துள்ளது. பரசுராமன் என்னும் அவதார மூர்த்தி நித்திராவஸ்தையில் இருந்தபொழுது அவருடைய காதில் குறும்பி வடிவெடுத்தது. அத்தகைய அழுக்கினின்று தோன்றியவன் மது என்னும் அரக்கன். நச்சுப் பூச்சிக்கு நிகரான அத்தகைய அரக்கன் மற்ற உயிர்வகைகளின் ஆரோக்கியமானதும் இனியதுமான உலக வாழ்க்கைக்குப் பேரிடைஞ்சலாக வாய்த்தான். அவனைக் கொன்றுமாய்க்க வேண்டுமென்று கிருஷ்ணபரமாத்மா வேண்டிக்கொள்ளப்பட்டார். அவரும் விளையாட்டுப் போன்று அந்த அரக்கனைக் கொன்று மாய்த்தார். ஆகையினுல் மதுசூதனன் என்னும் பெயர் அவருக்கு வந்துள்ளது. இதினின்று வாழ்க்கைத் தத்துவம் ஒன்று வெளியாகிறது. உயிர்வகைகளுள் எவை நச்சுப் பூச்சிகளாகவும், தொற்றுநோய்க்கு இருப்பிடமாகவும் நோயைப்பெருக்குபவைகளாகவும் இருக்கின்றனவோ அவையாவையும் சம்ஹாரம் பண்ண மனிதன் கடமைப்பட்டிருக்கிருன். தன் செயலின் வாயிலாக மதுசூதனன் இவ் அரிய வாழ்க்கைச் செய்தியை மக்களுக்கு வழங்கியுள்ளான்.

73. ईश्वरः ஈசுவர: ஆளும் திறமையுடையவன்.

ஈசுவரனுடைய திறமைக்குச் சான்ருக இப்பிரபஞ்சமே இருக்கிறது. அரசனை நேரே காணுவிடினும் ஆட்சி முறையின் பாங்கினின்று அரசனுடைய வல்லமையை அறிந்துகொள்ளலாம். அதே விதத்தில் ஈசனுடைய பேராற்றலை இப்பிரபஞ்ச நடைமுறையிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். பிரபஞ்சத்தின் நடைமுறையிலுள்ள ஒழுங்குப்பாடு, வினைக்கேற்ற வினைப்பயன், மக்களின் திறமைக்கேற்ற பதவி தானே வந்து அமைதல் ஆகியவைகளினின்று ஈசனுடைய பேராற்றல் நன்கு வெளியாகிறது.

ஆற்றுக்குக் கரைபோட்டு ஆற்றுப் பெருக்கைத் தடுக்க மனிதனுல் முடிவதில்லை. வெள்ளப் பெருக்கினுல் ஆறு கரையை உடைத்துக் கொண்டு பெருஞ்சேதத்தை விளைவிப்பதை நாம் காண்கின்ருேம். நீர்ப்பரப்பில் சமுத்திரம் மிகப் பெரியது. அது கரையில்லாமலேயே அடங்கி இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பவர் ஈசன் ஆகிருர். அது அவருடைய பேராற்றலுக்குச் சான்று ஆகிறது. அண்டம் முழுவதையும் ஆக்குவதையும், காப்பதையும், அழிப்பதையும் அவர் விளையாட்டுப் போன்று செய்து வருவது அவருடைய ஆளும் திறமைக்குச் சான்ருகிறது. இயற்கை முழுவதையும் ஆராய்ந்து பார்த்தால் அதன்கண் ஒழுங்குப்பாடு இருப்பதைக் காணலாம். அவ் ஒழுங்குப்பாட்டை உண்டுபண்ணி வைத்திருப்பது ஈசுவரனுடைய ஆட்சி முறையாகும்.

ஞான வெட்டியான்-7

உறுதியான உள்ளம்

முற்றிலும் பண்பட்டுள்ள மனிதன் ஒருவன் வஜ்ராயுதமாகக் கருதப்படுகின்றான். பகவத் கீதையிலே ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா 'ஆயுதங்களுள் நான் வஜ்ராயுதமாக இருக்கிறேன்' என்று இயம்புகிறார். நன்றாக முற்றிய மரம் உட்பகுதியில் வைரம் ஏறியதாக வந்தமைகிறது. மரத்தின் அத்தகைய பகுதி வெயில், மழை ஆகிய எதற்கும் கெட்டுப் போகாது தாக்குப் பிடிக்கும். நன்மகன் ஒருவன் பாங்கில் மேலே வரவேண்டும். முற்றும் மேலே வந்துள்ள மனிதன் வஜ்ராயுதம் எனப்படுகிறான். உறுதிப்பாட்டிலே வஜ்ராயுதம் கோடரிக்கு நிகரானது. கூர்மையிலே அது க்ஷவரக் கத்திக்கு நிகரானது. வஜ்ராயுதத்தை வைத்துக்கொண்டு மாறி மாறி க்ஷவரம் செய்யவும் விறகு பிளக்கவும் செய்யலாம். அங்ஙனம் பண்பாடு அடைந்துள்ள மனிதன் எதற்கும் அசையாத வல்லமை படைத்தவனாக இருக்கின்றான். சோதனைகள் எத்தனை வந்தமைந்தாலும் நன்னெறியைவிட்டு அவன் பிசகான்.

நரேந்திரநாதன் என்பது உலகப் பிரசித்தி பெற்றுள்ள விவேகானந்த சுவாமிகளின் பிள்ளைத் திருநாமமாகும். அந்த இளைஞன் சின்னஞ் சிறு வயதிலிருந்தே திட்பம் மிக வாய்க்கப் பெற்றவனாகத் திகழ்ந்து வந்தான். அதற்கு முதன் முதல் விதை விதைத்தவர் நரேந்திரனுடைய தந்தையாகிய விசுவநாத தத்தராவார். இரண்டு முக்கியமான கருத்துக்களை அவர் தம் பிள்ளைக்குச் சின்ன வயதிலேயே ஊட்டிவைத்தார். அவர் புகட்டிய முதல் கருத்தாவது: 'உலகில் திடீரென்று நலனும் கேடும் மாறி மாறி அமையும். அமைவது எதுவானாலும் பிள்ளாய், நீ வியப்படையாதே.' (Never be surprised, my boy.)

விசுவநாத தத்தர் ஆண்மை மிகப் படைத்தவர். அதற்கிடையில் தாராளமான மனப்பான்மையையும் அவர் படைத்திருந்தார். கல்கத்தாவிலே உயர்நீதி மன்றத்தில் அவர் ஒரு வழக்கறிஞராகத் திகழ்ந்தார். செல்வம் மிகச் சம்பாதிக்கும் திறமை அவரிடத்திருந்தது. மற்று, சம்பாதித்த செல்வத்தை எல்லாம் நல்வழியில் தாராளமாகச் செலவு பண்ணியும் வந்தார். தம் குடும்பத்தின் எதிர்கால நன்மையின் பொருட்டுச் செல்வம் எதையும் அவர் சேகரித்து வைக்கவில்லை. ஆற்றுப் பாலம் போன்று அவர் வாழ்ந்து வந்தார். பாலத்தின் ஒரு பக்கமிருந்து நீர் வந்துகொண்டே இருக்கிறது. அப்படி வருகிற நீர் அடுத்த பக்கம் வடிந்து ஓடுகிறது. அங்ஙனம் விசுவநாத தத்தர் தமக்கு வந்தமைந்த செல்வத்தைத் தயங்காது தாராளமாகச் செலவு பண்ணிக்கொண்டே வந்தார்.

தன் தாயாகிய புவனேசுவரி மாதாவினால் ஏவப்பட்டு தந்தையிடம் அனுப்பப்பட்ட நரேந்திரன், 'அப்பா, எதிர்காலத்தில் எனக்காக என்று நீங்கள் சேகரித்து வைத்திருக்கும் செல்வம் யாது?' என்று கேட்டான். உடனே தந்தை கொடுத்த விடையாவது: 'மகனே, உனக்காக வென்று நான் சேகரித்து வைத்திருப்பது நீயே! முகக்கண்ணாடியில் சென்று பார். நீ எத்தகைய பாங்கு படைத்துள்ளவன் என்பது உனக்கே விளங்கும்.'

விதிவசத்தால் விசுவநாத தத்தர் திடீரென்று மாரடைப்பால் ஒருநாள் மாண்டு போனார். அதன் விளைவாக அன்று முதல் அவர் குடும்பத்தில் தரித்திரம் தாண்டவமாடியது. ஆனால் நரேந்திரனே தந்தையார் புகட்டிய பெரிய பாடத்துக்கு இருப்பிடமாக இலங்கினான். உடைமையே வடிவெடுத்து வாழ்ந்து வந்த அவன் திடீரென்று வறுமைக்காளானான். அப்பெரிய மாறுதலை முன்னிட்டு அவன் சிறிதேனும் மனத்தளர்வு அடையவில்லை. அந்நிலையில் அவன் ஒரு வஜ்ராயுதமாக விளங்கினான்.

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பொழுது கடவுள் உண்டா என்னும் ஐயம் நரேந்திரன் உள்ளத்தில் தீவிரமாக உதித்து வந்தது. மாணவன் ஒருவனுக்கு இத்தகைய ஐயம் உண்டாகுமிடத்து அது தன்னுடைய வாழ்க்கையின் முடிவான சித்தாந்தம் என்று தீர்மானிக்கின்றான். ஆனால் நரேந்திரன் அப்படிச் செய்யவில்லை. இந்த ஐயத்தை அகற்ற வல்ல சான்றோர் பலரிடம் சென்றான். ஆனால்

இக்கேள்விக்குச் சரியான விடையை யாரும் தரவில்லை. கல்கத்தாவுக்கு அருகில் தக்ஷிணேசுவரத்தில் வாழ்ந்துவந்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டான். 'ஆம் பிள்ளாய், ஊனக்கண்கொண்டு உலகைக் காண்பதை விடப் பன்மடங்கு உறுதியாக ஞானக்கண் கொண்டு சர்வகாலமும் கடவுளைக் கண்டு வருகிறேன். உனக்கும் காட்டுகிறேன்' என்று பரமஹம்சதேவர் திருவாய் மலர்ந்தருளினார். அவர் பகர்ந்தபடியே நிகழ்ந்தது. அதன் விளைவாக நரேந்திரநாதன் உலகப் பிரசித்தி பெற்ற விவேகானந்த சுவாமிகளாக மாறியமைந்தான்.

விவேகானந்த சுவாமிகள் நம் நாட்டின் நிலைமையை உள்ளபடி அறிந்து கொள்ளுதற்குக் காஷ்மீர் முதற்கொண்டு கன்னியாகுமரி பரியந்தம் கால்நடையாக நடந்து போனார். அவர் சென்னைக்கு வந்த பொழுது அவர் மகிமையை அறிந்த மாணாக்கர்கள் அவரை அமெரிக்காவில் நிகழ்வதற்கிருந்த சர்வமத மகாசபைக்கு இந்து மதத்தின் பிரதிநிதியாகப் போகவேண்டும் என்று வற்புறுத்தினர். அவரும் ஒருவாறு அதற்கு இசைந்தார். மாணாக்கர்கள் பணம் திரட்டி அவரை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் அங்குச் சென்ற அவருக்குச் சர்வமத மகாசபையில் இடம் கிடைக்கவில்லை. ஏனென்றால் ஆங்கு அவர் ஒரு வழிப்போக்கராகப் போனவர். இந்தியாவில் எந்தச் சங்கத்திலிருந்தோ சமாஜத்தின் பிரதிநிதியாகவோ அவர் அங்கு அனுப்பப்படவில்லை. இந்நிகழ்ச்சி வாழ்க்கையில் பெரிய ஏமாற்றத்தை உண்டுபண்ணக் கூடியது. ஆனால் விவேகானந்த சுவாமிகளோ அத்தோல்வியைச் சிறிதும் பொருள்படுத்தவில்லை. அது மட்டுமன்று; இந்தியாவிற்குத் திரும்பி வருவதற்குச் சென்னை மாணாக்கர் மீண்டும் பணம் திரட்டி அனுப்பும் வரையில் அமெரிக்காவில் எப்படியாவது தாக்குப் பிடித்து இருந்தாகவேண்டும். இந்தியாவில் செய்வதுபோன்று அமெரிக்காவில் துறவியர்கள் ஐயம் ஏற்கச்சென்றால் பிடித்துச் சிறையில் அடைத்துவிடுவார்கள். ஆதலால் செல்வம் நிறைந்த சீமாட்டி ஒருத்தியின் விருந்தினராக இவர் கிராமப் பக்கம் காலம் கழித்து வந்தார்.

ஒரு விநோதமான மனிதன் என்று தன் நண்பர்களுக்குக் காட்டித்தர அக்கிழவி இவரைத் தன் வீட்டில் வைத்திருந்தாள். அவளுடைய நண்பர்கள் இந்த நூதன மனிதரிடம் வந்து பொருளற்ற பல கேள்விகளைக் கேட்டனர். விவேகானந்த சுவாமிகள் அந்தச் சம்பவத்தையும் ஒரு விளையாட்டாக எடுத்துக் கொண்டார். சிறிதேனும் மனத்தளர்ச்சியடையாத நிலையிலிருந்தார்.

வேடிக்கை பார்க்க வந்தவர்களுள் கல்லூரிப் பேராசிரியர் ரைட் என்பார் ஒருவர் இவருடைய தகைமையை உள்ளபடி அறிந்து கொண்டார். அன்னவருடையசெல்வாக்கின்படி இவருக்குச் சர்வமத மகாசபையில் பேசுதற்கு இடம் கிடைத்தது. அதன்விளைவாக இவர் உலகப் பிரசித்தி பெற்றார். வானளாவ சமாச்சாரப் பத்திரிகைகள் இவரைப் போற்றின. இகழ்ச்சியிலே சிறிதேனும் அசையாதிருந்த விவேகானந்த சுவாமிகள் இந்தப் புகழ்ச்சியையும் பொருள்படுத்தவில்லை. அத்தகைய பண்பாடடைந்திருந்த உறுதியான உள்ளம் படைத்தவராக விவேகானந்த சுவாமிகள் திகழ்ந்தார்.

நரேந்திரனைக் காணவேண்டும் என்று நான் ஏன் ஆவல் மிகக் கொண்டிருக்க வேண்டும் என்று போலோநாதரிடம் விசாரித்தேன். அதற்கு விளக்கம் மகாபாரதத்தில் இருப்பதாக அவர் விடைவிடுத்தார். சாத்வீக மக்களைக் காணவும், அவர்களோடு உறவாடவும் விரும்புவது பரஞானத்தை அடையப் பெற்றவர்களுடைய இயல்பு என்றார் அவர். சில வேளைகளில் நரேந்திரனைப் பற்றிய எண்ணமும் ஆவலும் என் உள்ளத்தைக் கலக்கிக் கொண்டே இருக்கும். "நரேந்திரன் மீது எனக்கு எதற்காக இவ்வளவு ஆவலை வைத்துள்ளாய்?" என்று நான் அம்பிகையைக் கேட்டேன். அம்பிகை பகர்ந்ததாவது: "நரேந்திரனைக் காணும் பொழுதெல்லாம் நீ சிவபெருமானைக் காண்கின்றாய். ஆகையால் அவனிடத்து உனக்கு அளவிலா ஆவல் ஏற்பட்டுள்ளது."

ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-6

1889ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பதினேழாம் தேதி பிரமததாஸ் மித்ரா அவர்களுக்குச் சுவாமிஜி எழுதிய கடிதத்தில் ஆச்ரம தர்மத்தைப்பற்றி எழுதினர். இப்பொழுது வருண தர்மத்தைப்பற்றிச் சுவாமிகள் கொண்டிருந்த கருத்து வருமாறு:

வருணபேதம் பிறப்பை ஒட்டியது என்பது பெரும்பான்மையோர் கருத்து. ஆனால் பகவத் கீதையில் பகர்ந்திருப்பது அதுவன்று. ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா நான்கு வருணங்களைக் குணத்தைக் கொண்டும் கர்மத்தைக்கொண்டும் சிருஷ்டித்திருப்பதாகத் தெரிவிக்கிறார். அத்தகைய சிருஷ்டி இடையறாது இன்றும் நிகழ்ந்து வருகிறது. இத்தகைய வருணபேதம் அலாதியாக மனிதனுக்கு மட்டும் உரியதன்று. உயிர்வகைகள் அனைத்துக்குமே இது பொதுவானது. இதற்குச் சில சான்றுகள் எடுத்துக்கொள்வோம். ஸ்தாவரங்களுள் ஒன்று வாழை. அது மனிதனுக்கு மிகவும் பயன்பட்டு வருகின்றது. வாழையில் குணபேதம் ஏராளமாக இருக்கிறது. உபயோகப்படுத்துகிறவர்கள் குணபேதத்தை அனுசரித்து வாழையைப் பயன்படுத்துகின்றனர். சில நோய்களுக்குச் சத்துவ குணம் ஓங்கியிருக்கின்ற வாழையைப் பயன்படுத்துகின்றனர். வேறு சில நோய்களுக்கு ரஜோகுணம் ஓங்கியிருக்கும் வாழைப் பழத்தைப் பயன்படுத்துகின்றனர். இங்ஙனம் வாழையினிடத்து அமைந்துள்ள குணபேதத்தை மக்கள் பயன்படுத்துவது மிகவும் பொருத்தமானது.

மக்களுள் நான்கு சகோதரர்களுக்கிடையே ஒருவன் குணத்திலும் கர்மத்திலும் பிராம்மண இயல்பு உடையவனாகத் தென்படுகிறான். மற்றொருவன் க்ஷத்திரியனாக இலங்குகின்றான். மூன்றாமவனிடம் வைசியனுக்குரிய பண்புகள் தென்படுகின்றன. நான்காம் சகோதரன் சூத்திரனாக அமைந்திருக்கிறான். இது இயற்கையில் நாம் காணும் காட்சியாகிறது. சமுதாயப் பழக்கவழக்கத்தை முன்னிட்டு நான்கு சகோதரர்களையும் ஒரே குணத்தில் இணைத்து வைத்திருப்பது பொருந்தாது. யாது காரணத்தாலோ சான்றோர்களில் சிலர் பிறப்புக்கு முதன்மை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் கிருஷ்ண பரமாத்மா அங்ஙனம் செய்யவில்லை. அவர் கூற்று பிரபஞ்சத்திலுள்ள உயிர்வகைகள் அனைத்துக்கும் பொருத்தமானது. மற்று, பிறப்பையோ ஜாதியையோ முன்னணிக்குக் கொண்டுவந்தால் அது மக்களுடைய ஓரம் சாரும் தன்மையை வெளிப்படுத்துகிறது. தத்துவத்துக்கு அது ஒத்துவராது. 'எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்பது கோட்பாடு. இக்காலத்தில் தோன்றிய சான்றோராகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் உலகத்தவர்கள் கையாண்டு வருகின்ற பழக்க வழக்கங்களில் தம் கருத்தைச் செலுத்தவில்லை. எது தத்துவத்துக்கு ஒத்து வருகிறதோ அதை மட்டும் அவர் கடைப்பிடித்தார். ஆதலால் கிருஷ்ண பரமாத்மாவின் கூற்றும் அதைக் கையாண்டுவந்த பரமஹம்சரின் முறைமையும் முற்றும் இயற்கையின் பாங்கை ஒத்திருக்கின்றன. பரமஹம்சதேவர் ஒரு மனிதனுடைய பிறப்பைப்பற்றியோ குலம், கோத்திரத்தைப்பற்றியோ கேட்பது கிடையாது. தாம் இணக்கம்கொள்ளும் மனிதன் நல்லவனாயிருந்தால் அது அவருக்குப் போதுமானது. பின்பு, அவன் எக்குடியில் பிறந்தவன் என்பதைப்பற்றி அவர் சிறிதும் எண்ணியது கிடையாது. இந்நிலையே தத்துவத்தை ஒத்திருக்கிறது. தத்துவத்துக்கு ஒத்திருப்பதில் தீங்கு ஏதும் நிகழாது. வெறும் பிறப்பை முன்னிட்டு மனிதர்கள் ஒருவர்க்கொருவர் பேதத்தை வளர்த்துக்கொள்வது அறிவின்மையாகும். அவரவருடைய குண விசேஷங்களை முன்னிட்டே மனிதர்களின் தராதரம் நிர்ணயிக்கப்படுகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் இதில் மிகவும் கருத்துடையவராயிருந்தார். தத்துவத்துடன் முரண்படாத நடைமுறைதான் யாண்டும் அன்பையும் சீலத்தையும் பெருக்குவதாக அமைகின்றது. தத்துவத்துக்கு ஒவ்வாத வருணத்தைப்பற்றிய வியாக்கியானமும் அதைக் கையாளும் முறைமையும் மக்களுக்கிடையில் பேதத்தையும் வெறுப்பையும் வளர்க்கின்றன.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (417) உழைப்பாளிகள் ஏன் நான்கு வர்ணங்களில் கடைசியாக வைக்கப்பட்டுள்ளனர்?

மக்கள் தங்கள் தரத்துக்கேற்ற பிரகாரம் நான்கு வர்ணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இது இயற்கையின் கூறு; செயற்கையாக மக்கள் தங்களுக்குத் தாங்களே அமைத்துக்கொண்ட திட்டமாகாது. இயற்கையின் செயல் என்பதும் இறைவன் செயல் என்பதும் ஒன்றே. ஆகையினால்தான் கிருஷ்ண பரமாத்மா, நான்கு வர்ணங்கள் தம்மால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன என்று பகவத்கீதையில் பகர்ந்துள்ளார்.

நான்கு வர்ணங்களின் கூறுகள் ஒரு மனிதனுடைய வாழ்க்கையிலே அமைந்திருக்கின்றன. ஒரு மனிதன் எண்ணுகின்ற மேலான எண்ணங்கள் அவனுடைய மூளையின் செயலாகின்றன. ஆகையினால் ஒரு மனிதனுடைய அமைப்பில் அவன் தலை தலைத்தரமான வர்ணமாகிய பிராம்மணன் எனக் கருதப்படுகின்றது. அடுத்த படியாக அவன் ஆற்றுகின்ற அறங்கள் அனைத்துக்கும் இருப்பிடமாக இருப்பது புஜம். அது க்ஷத்திரியனாகக் கருதப்படுகிறது. மூன்றாவதாக மனிதன் படைத்திருக்கிற வயிறு வைசியனாகக் கருதப்படுகிறது. அது உணவை ஏற்று ஜீரணம் பண்ணி உறுப்புகள் அனைத்துக்கும் உரிய பாங்கில் அதைப் பங்கிட்டுத் தருகிறது. மனிதன் படைத்துள்ள கைகளும் கால்களும் சூத்திரனாகக் கருதப்படுகின்றன. சரீர முன்னேற்றத்துக்குத் தேவையான சாதாரணச் செயல்களையே இந்த உறுப்புகள் செய்து வருகின்றன. இவைகளுள் ஏதேனும் ஒன்று பழுதுபட்டுப்போனால் மனிதனுக்கு அது பெரிய நஷ்டமாகாது. அக்கேட்டுக்கு ஈடும் செய்துகொள்வது அம்மனிதனுக்குச் சாத்தியம். ஆனால் நல்வாழ்வுக்கு இன்றியமையாத உறுப்புக்களாகிய தலை, புஜம், வயிறு ஆகியவை கெட்டுப் போகாதபடி காத்துக் கொள்ள மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். அதே விதத்தில் சமுதாயத்தில் அமைந்துள்ள மக்களுள் பேரறிஞர்களைப் பேணிப் பாதுகாக்கச் சமுதாயம் கடமைப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாகச் சமுதாய வாழ்க்கையைக் கேடில்லாமல் நடத்தி வரும் மக்கள் இரண்டாவதாக இடம் பெறுகின்றனர். பொருள் சம்பாதிப்பதும் அதைப் பொது நன்மைக்குப் பயன்படுத்துவதும் ஆகிய நல்ல செயல்களைச் செய்பவர்களுக்கு மூன்றாவது இடம் தரப்படுகின்றது. இனி, கொடுத்த வேலையை மட்டும் செய்ய வல்லவர்களாய் இருக்கின்ற தொழிலாளர்களுக்கு நான்காவது இடம் தருவதில் குறைபாடு ஏதும் இல்லை. இப்படி அமைவது தான் முறைமை.

கேள்வி : (418) பில்லி சூனியம் செய்வது சாத்தியமா? அதை அறிவதும் அவ்வாறு செய்யப்பட்டுள்ளதை நிவர்த்திப்பதும் எவ்வாறு? 'சங்கரர்' சூன்யம் வைத்துக் கொல்லப்பட்டார் என்பது உண்மையா?

பில்லி சூனியம் சாத்தியமானதே. இதற்குப் பிரமாணம் அதர்வ வேதத்தில் இருக்கிறது. அம்முறையைக் கையாண்டு பிறருக்குத் தீங்கு விளைவிப்பதே அதன் முக்கியமான நோக்கமாகிறது. பில்லி சூனியத்துக்கு நிவாரணம் உண்டு. அதுவும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இக்கலை இக்காலத்தில் பெரிதும் மறைந்து போய்விட்டது. அரிதிலும் அரிதாக இக்கலையைக் கையாள வல்லவர் யாரோ சிலர்தான் இக்காலத்தில் இருக்கின்றனர். சங்கரர் சூனியத்துக்கு இலக்காகிச் சிறிது காலம் வருந்தினர். ஆனால் கொல்லப்படவில்லை. சங்கரர் போன்று சுவாமி விவேகானந்தரும் இந்தக் கலைக்கு இலக்காகி மண்டையிடியால் வருந்தினர். தமக்கேன் இவ்வாறு நிகழ வேண்டுமென்று அவர் அன்னை சாரதாதேவியிடம் முறையிட்டார். அதற்குப் பொருத்தமான விடையைச் சாரதாதேவியார் விடுத்தார். இங்ஙனம் செய்த ஏவல் நிரந்தரமாக இருக்கமாட்டாது. அப்படி வருகிற துயரத்தையும் ஈசன் செயல் என்று ஏற்றுப் பொறுமையுடன் அத்துயரத்தைச் சகிப்பது நல்ல ஆத்ம சாதனமாகிறது. அதைக் குறித்துச் சான்றோன் ஒருவன் யாரையும் நொந்து கொள்ளலாகாது. அப்படிப் பழகினால் கேடாக ஏவப்பட்டது ஆத்ம சாதகனுக்குப்

பொறுமை பழகுதற்குப் பயன்படுகிறது. பொறுமையில் மேலோங்குகிறவர்களுக்கு வந்தமைகிற கேட்டை நலமாக மாற்றிக்கொள்ளும் பேறு அவர்களுடையதாம்.

கேள்வி: (419) பொதுவாக இந்தியர்கள் சமயப்பொறை மிக்கவர்கள் என்று கருதப்படுகிறது. ஆனால் இந்து–முஸ்லீம், இந்து–கிறிஸ்தவக் கலகங்களும் சண்டைகளும் ஒருபுறம் இருக்க, இந்துக்கள் தமக்குள் ஒற்றுமையின்றிச் சண்டையிட்டு வருகின்றனர். தம் இயல்பான பொறுமையை இந்துக்கள் இழந்து வருவதாகத் தோன்றுகிறதே?

பொதுவாகப்பகருமிடத்துப் புறமதச்சகிப்பை இந்தியாவில்தான் வேண்டியவாறு காணலாம். அவரவர்க்கு ஒத்துள்ள உணவை அவரவர் உண்டு உடல் வளர்ச்சி பெறுவதற்கு நிகராக அவரவர்க்கு ஒத்துள்ள சமயத்தை அவரவர் அனுஷ்டிக்கவேண்டும் என்பதே இந்நாட்டின் சீரிய கொள்கையாகும். ஆனால் காலப்போக்கு இதற்கு எதிரிடையாக அமைந்திருக்கிறது. இந்தியாவுக்குள்ளே புதியதாக வந்துள்ள சமயங்கள் இஸ்லாம், கிறிஸ்தவ மதம் ஆகிய இரண்டாம். இவை இரண்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் இந்துக்கள் இதுகாறும் எந்தவிதத் தடையும் செய்யவில்லை. இந்த இரண்டு மதஸ்தர்களும் பரஸ்பரம் வெறுப்பது காலமெல்லாம் அவர்கள் போக்காய் இருந்து வந்துள்ளது. இன்றைக்கு அவர்கள் இருவரும் ஒன்றுகூடிக் கூடிய அளவு இந்துக்களைத் தங்கள் மதங்களில் சேர்க்க முயன்று வருகின்றனர். இத்தகைய முயற்சிக்கு அந்த இரு கூட்டத்தாருக்கும் வெளிநாடுகளிலின்று வேண்டியவாறு உதவி கிடைக்கிறது என்று யூகிக்க இடம் உண்டு.

இந்துக்களுள் ஒதுக்கப்பட்டவர்களாகக் கருதப்படும் கீழ்நிலையில் உள்ளவர்களையே தங்கள் மதங்களில் சேர்க்க அவர்கள் முயன்று வருகின்றனர். "கல்லைக் கடவுளாகக் கருதுகின்ற இந்துமதம் உங்களை மக்களாகப் பாராட்டுவதில்லை. அத்தகைய சீர்கேடான நிலை உங்களுக்கு வேண்டாம். எங்கள் மதங்களில் சேர்ந்து எங்களோடு சம உரிமையுடன் வாழ்ந்திருங்கள்" என்னும் கொள்கையைத் தீவிரமாக அவர்கள் பரப்பி வருகின்றனர். பொருளாதாரத்துறையில் கீழ்நிலையில் இருக்கிறவர்களுக்கு ஏராளமான பணம் கொடுத்து அவர்களைத் தங்கள் மதத்திற்கு மாற்ற முயன்று வருகிறார்கள். இந்த முயற்சி இந்து மதத்துக்கு ஆபத்தானது. ஆதலால் இதை முற்றிலும் நிராகரிக்க இந்துக்களாகிய நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இதுகாறும் இடைக்கால இந்துக்கள் தூங்கிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது சிறிது சிறிதாக விழித்து எழுந்திருக்கிறார்கள். அவர்களுக்குள் இதுகாறும் நிகழ்ந்து வந்த சைவ சமயம் பெரியதா வைஷ்ணவ சமயம் பெரியதா என்பது மேற்போக்கான சண்டை. சமுதாய அமைப்புக்கு அது இடைஞ்சல் ஏதும் செய்யவில்லை. ஆனால் புறமதஸ்தர்கள் நம் நாட்டிற்குரிய சமுதாய அமைப்பையே மாற்றி விட முயன்று வருகிறார்கள். சமயத்துறையில் இதுகாறும் உறங்கிக்கொண்டிருந்த இந்துக்கள் உடனே எழுந்திருக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். சமயத்துறையில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தை உணரவும் பரஸ்பரம் எடுத்து விளக்கிக்கொள்ளவும் அவர்கள் கடமைப்பட்டிருக்கின்றார்கள். அதன் பொருட்டு விழித்தெழுந்திருக்கின்ற இந்துக்கள் அனைவரும் ஒன்று கூடுவதும் அவசியமாகிறது. சகிப்புத்தன்மையே வடிவெடுத்துள்ள இந்துமதம் அவசியம் ஏற்படுமிடத்து எதிர்த்துப் போராடவும் வல்லது என்பதை நாம் நிரூபிப்போம். 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே' என்று பாரதியார் சொன்னது இன்றைக்கு முற்றிலும் பொருத்தமாக அமைந்துள்ளது. தற்பாதுகாப்பின் பொருட்டு இந்துக்களாகிய நாம் அனைவரும் உடனே எழுந்திருப்போம்; எதிரிகளை விரட்டி ஓட்டுவோம். தற்பொழுது நாடு முழுவதும் மக்களிடையே இந்து சமய உணர்ச்சி வெகுவாகக் கிளர்ந்தெழுந்துள்ளது. எனவே, அற்ப விஷயங்களை முன்னிட்டு இந்துக்கள் ஒருவர்க்கொருவர் வேற்றுமை பாராட்டிக்கொள்ளாமல் இந்து சமுதாயத்தின் பொதுவான நலனைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவதற்கான சிறந்த சூழ்நிலை ஏற்பட்டு வருவது பாராட்டுதற்குரியதாம்.

யக்ஞம்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1970ல் விருதுநகர் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

நாம் சிற்றுயிர் நிலையில் அணுவாக வாழ்க்கையைத் துவக்கினோம். இப்பொழுது நாம் மானுட நிலைக்கு வந்திருக்கிறோம். இனிமேல் தெய்விகப் பண்பை வளர்த்துப் பரமாத்மாவில் லயமாக வேண்டும். சிற்றுயிர் நிலையில் பரமாத்மாவில் லயமாவது சாத்தியமாகாது. பிரபஞ்சத்தை ஆராய்ந்து பார்த்தால் ஓர் உண்மை விளங்கும். ஓர் உயிர் மற்றோர் உயிரோடு போட்டி போட்டு வாழ்ந்து வருகிறது. பக்கம் பக்கம் வளர்கின்ற இரண்டு செடிகளை ஆராய்ந்து பார்த்தால் அவைகள் வேர்விடுவதிலும், வளர்வதிலும், கிளைகளை அனுப்புவதிலும் ஒன்றோடொன்று போட்டி போடுகின்றன. அவ்விரண்டினுள் வலிவுவாய்ந்தது விரைந்து வளர்கின்றது. அவற்றுள் வலிவற்றது குன்றிப போகின்றது. இனி, ஜங்கமமாயிருப்பவைகளை ஆராய்ந்து பார்த்தாலும் அவைகள் ஒன்றோடொன்று போட்டி போடுவதைக் காணலாம். திறமை வாய்ந்தவை வாழ்வில் வெற்றி அடைகின்றன. பலஹீனமாய் இருப்பதனுடைய வாழ்வு குன்றிப் போகின்றது. குரங்குக் கூட்டம் ஒன்றுக்குத் தீனி போடுவோமானால் அவற்றுள் வலிவு வாய்ந்தது மற்றவற்றை விரட்டி ஓட்டிவிட்டுத் தான் உண்கின்றது. வலிவுவாய்ந்தவை உண்டதுபோக மீதியுள்ளதை வலிவற்றவை உண்கின்றன. வனத்தில் சிங்கம், புலி போன்றவை கொன்று தின்ற மீதியைத்தான் வலிவற்ற நரி, ஓநாய் ஆகியவை உண்கின்றன. வலிவு வாய்ந்தவைகள் மேலும் மேலும் வலிவடைந்து வருகின்றன. வலிவற்றவைகள் பிரதிகூலமான சூழ்நிலையில் சிரமப்பட்டு உயிர் வாழ்ந்து வருகின்றன. இங்ஙனம் வாழ்வில் கீழ்த்தரமான உயிர்களிடத்தில் போட்டி மயமான வாழ்வைக் காண்கின்றோம்.

இதற்குமேல் கூட்டு வாழ்க்கையாகிய சமுதாய வாழ்க்கை உயிர்களிடத்தில் இருப்பதைக் காணலாம். சமுதாய வாழ்வு அலாதியாக மக்களுக்கு மட்டும் உரியதன்று. எறும்பு தலைத்தரமான சமுதாய வாழ்க்கை வாழ்ந்து வருகின்றது. ஸ்பரிசம், மோப்பம், சுவை ஆகிய மூன்று இந்திரியங்களைக் கொண்டு எறும்பு சமுதாய வாழ்க்கை வாழ்ந்து வருகின்றது. ஓர் இடத்திலிருக்கும் உணவை மோப்பத்தின் மூலம் அறிந்து அந்த இடத்திற்குச் செல்கின்றது. ஓர் எறும்பு போன பாதையை ஸ்பரிசத்தால் உணர்ந்து அவ்வெறும்பு போன வழியில் மற்ற எறும்புகள் செல்கின்றன. மேலும் சுவைத்தலில் எறும்புக்கு மனிதனைவிட அறிவு அதிகம். கைக்குத்தலரிசியையும், நன்கு தீட்டிய அரிசியையும் கலந்து வைத்தால் சத்துள்ள கைக்குத்தலரிசியை எறும்பு எடுத்துக்கொண்டு போகும். சத்தில்லாத தீட்டிய அரிசியை எறும்பு ஒதுக்கிவிடும். எறும்புக்கு இருக்கும் அறிவுகூட நமக்கில்லை. ஏனென்றால் சத்தில்லாத தீட்டிய அரிசியைத்தான் நாம் விரும்பிச் சாப்படுகின்றோம் சத்துள்ளதையும், சத்தில்லாததையும் கலந்து கோழிக்குப் போட்டால் அதுவும் சத்துள்ளதைத்தான் முதலில் சாப்பிடும். எறும்பினிடத்து மற்றொரு சிறப்பையும் காணலாம். மோப்பத்தால் மழை வரப்போவதை முன்கூட்டியே அறிந்து உணவுப் பொருளைப் பாதுகாப்பான இடத்துக்கு அது கொண்டுபோகும். எறும்பின் சமுதாய வாழ்க்கை மேலானது.

ஐந்து இந்திரியங்களைப் பெற்றிருப்பது தேனீ. அது அற்புதமான சமுதாய வாழ்க்கை வாழ்கிறது. விலங்குகளில் யானை பாராட்டத்தக்க முறையில் சமுதாய வாழ்வு வாழ்ந்து வருகிறது.

சமுதாய வாழ்வு வாழ்வதில் மக்கள் சிறந்தவர்களாக இருந்து வருகிறார்கள். சமுதாய வாழ்க்கையில் போட்டி போடுதல் என்பது கீழ்த்தரமான வாழ்க்கை. அது தொல்லை தரும் வாழ்க்கையாக இருக்கும். மேலும் கவலையையே உண்டாக்கும். இணங்கி வாழும் வாழ்க்கை நிம்மதியைத் தரும். அவரவர்களுக்கு ஏற்பட்ட கடமையைச் செய்து கொண்டு கூட்டுறவாக இருந்து வாழ்க்கைக்கு வேண்டிய வசதியைச் செய்து கொள்வது சமுதாய வாழ்க்கையாகிறது.

கர்மம் இல்லாத வாழ்க்கை இல்லை. கர்மத்

தில் மேலாம் நிலை ஒன்று உண்டு. கர்மத்தை யக்ஞமாகச் செய்தால் அது மேலான நிலையாகும். யக்ஞ கர்மத்தைச் செய்கின்றவர்கள் இகபரம் இரண்டிலும் பெரிய நிலையை அடைகிறார்கள். மேலும் மேலும் பிறவியை வளர்க்கின்ற கர்மம் குறையுடைய கர்மமாகிறது. பிறவிப் பெருங்கடலில் இருந்து நாம் தப்பியாக வேண்டும். எப்பொழுதும் நாம் வாழ்கின்ற முறையில் வாழ்ந்தால் பிறவியை ஒழித்துவிட முடியாது. பிறவியை ஒழிப்பது எப்படி என்பதுபற்றி ஆன்றோர்கள் ஆராய்ச்சி செய்து இருக்கிறார்கள். வாழ்வில் உள்ள போட்டி பொறாமையை ஒழித்து விட்டு இவ் உலக வாழ்க்கையை இனிது நடாத்திப் பாரமார்த்திகப் பெருநிலையைப் பெறுவதற்கான வழியை ஆன்றோர்கள் கண்டுபிடித்து இருக்கிறார்கள். பாரமார்த்திகப் பெருநெறியை அடைவதற்குரிய வழி உபநிஷதங்களில் சொல்லி வைக்கப்பட்டிருக்கிறது. பகவத்கீதை உபநிஷத்தின் சாரமாக வந்துள்ளது. பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா வேள்வித் தத்துவத்தை விளக்கி இருக்கின்றார்.

यज्ञार्थात्कर्मणोऽन्यत्र लोकोऽयं कर्मबन्धनः ।
तदर्थं कर्म कौन्तेय मुक्तसङ्गः समाचर ॥

"யக்ஞார்த்தாத் கர்மணோ அன்யத்ர
லோகோ அயம் கர்மபந்தன:
ததர்த்தம் கர்ம கௌந்தேய முக்த ஸங்க:
ஸமாசர" (3.9)

யக்ஞத்தின் பொருட்டுச் செய்யப்படும் கர்மம் நீங்கலாக ஏனைய கர்மங்கள் மேலும் மேலும் உலகத்தில் மனிதனைக் கட்டுப்படுத்துகின்றன. பட்டுப்புழு தான் கட்டுகின்ற கூட்டிலேயே கட்டுண்டு கிடப்பது போன்று நாம் செய்கின்ற கர்மங்களில் நாம் கட்டுண்டு கிடக்கிறோம். வினைக்கட்டிலிருந்து விடுபட முயல்பவன் பற்றற்றவனாக இருந்து யக்ஞ கர்மம் பண்ணவேண்டும். கர்மத்தைக் கடனுக்குச் செய்வது போல் செய்யக் கூடாது. திறமையோடு கர்மத்தைச் செய்யவேண்டும். செய்வதைத் திருந்தச் செய் என்பது கோட்பாடு. பற்றுடையவன் செய்கின்ற கர்மத்தைவிடப் பற்றற்றவன் செய்கின்ற கர்மம் சிறப்புடையதாக இருக்கும். பற்றை ஒழித்தால்தான் கர்மம் சிறப்பாக நிகழும். பற்றை ஒழிப்பதன் மூலம் பூலோக வாழ்க்கை நன்கு விருத்தியடைந்து நாமும் வினைக்கட்டிலிருந்து விடுபடுகிறோம்.

பெண்கள் கயிறுகளைக் கட்டித் தொங்கவிட்டு அவற்றைப் பிடித்துக்கொண்டு கோலாட்டம் விளையாடுவார்கள். கோலாட்டத்தில் அவர்கள் சுற்றிச் சுற்றி வரும்பொழுது பின்னல் விழும். அது போன்று ஆசையோடு செய்கின்ற கர்மம் நம்மைக் கர்மத்தில்கட்டுப்படுத்துகிறது. பெண்கள் கோலாட்டத்தை நிகழ்த்துகின்றபொழுது முதலில் விழுந்த பின்னல் கலைகிறது. பின்னலைக் கலைக்கின்ற கோலாட்டம் போன்றது யக்ஞகர்மம். அது நம்மை வினைக்கட்டிலிருந்து விடுவிக்கிறது. எனவே நம்மைக் கட்டுப்படுத்துவதும் கர்மம். நம்மை விடுவிப்பதும் கர்மமாகும். வினைத்தளையிலிருந்து விடுபடத் தெரிந்து கொண்ட மக்கள் வாழ்வாங்கு வாழ்கிறார்கள். அவர்களே யக்ஞம் புரிகின்றவர்களாகின்றார்கள். வினைத்தளையில் சிக்கிக்கொள்ளும்படி கர்மம் செய்கிறவர்கள் துன்பத்துக்கு ஆளாகிறார்கள்; அவர்கள் வாழத் தெரியாதவர்களாகின்றார்கள்.

வேள்வித் தீ வளர்த்துக் கிரியைகள் வாயிலாகப் புரோகிதர்கள் செய்யும் செயலை மக்கள் வேள்வி என்று கருதுகிறார்கள். கிருஷ்ணபரமாத்மா அதை யக்ஞம் என்று குறிப்பிடவில்லை. யக்ஞம் செய்வதற்குச் சின்னமாக அமைந்து இருப்பதுதான் வேள்வித் தீ. நெற்றியில் நீறு பூசுவது சைவத்தின் சின்னமாகும். வெப்பமானி வைத்திருப்பது டாக்டர்களுக்குச் சின்னமாகும். விபூதி பூசுவதால் மட்டும் ஒருவன் சைவனாகிவிட முடியாது. வெப்பமானி வைத்திருப்பதால் மட்டும் ஒருவன் டாக்டர் ஆகிவிடமுடியாது. ஒவ்வொன்றுக்கும் அதற்கு ஏற்ற தகுதி இருக்க வேண்டும். சைவனாக இருப்பதற்கு அதற்கு ஏற்ற பண்பு வேண்டும். தேசப் படத்தை வைத்துக் கொண்டு தேசத்தை விளக்கலாம். ஆனால் தேசப் படம் தேசமாகி விடாது. வேள்வித் தீ யக்ஞ தத்துவத்தை விளக்குகின்றது. வேள்வித் தீயே யக்ஞமாகி விடாது. தீயில் போடும் பொருள் எரிந்து சாம்பலாகி விடுகின்றது. சாம்பல்தான் எஞ்சி இருக்கும். கீழ்மையில் இருப்பதைப் பயன்படும்படி செய்வது வேள்வியாகும். வேள்வித் தீ அதற்குச் சின்னமாக

இருக்கிறது. அதற்குமேல் அதில் பிரயோஜன மில்லை.

மக்கள் மூன்று படித்தரங்களில் இருக்கின்றனர். விலங்கு நிலையில் இருக்கும் மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் போட்டி மயமான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். தங்களுக்குள் பரஸ்பரம் உதவி செய்துகொண்டு வாழ்கின்ற மக்கள் நடுத்தர மக்களாகிறார்கள். தங்களுடைய வாழ்வைப் பிறருடைய நன்மைக்கென ஒப்படைப்பவர்கள் தலைத்தரமானவராகிறார்கள். அவர்களே வேள்வி வேட்பவர்களாகின்றார்கள். வேள்வி என்பது வாழ்வைப் பெரு வாழ்வாகத் திருத்தி அமைப்பது ஆகின்றது. நம்மிடத்தில் உள்ள நலத்தை எவ்வளவுக்கெவ்வளவு பொதுநலனுக்கு மாற்றி அமைக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு பூலோக சம்பத்தும் அதிகரிக்கின்றது. பாரமார்த்திகத்துக்கும் நாம் தகுதி உடையவர்களாகின்றோம்.

'பெருநெறி பிடித்து ஒழுகவேண்டும்' என்கிறார் வள்ளலார். சுயநலத்துக்கென்றே வாழ்வது சிறுநெறியாகும். நாம் வாழ்ந்துவரும் வாழ்வு நமக்குப் பயன்படுவதைக் காட்டிலும் பிறருக்கு அதிகம் பயன்படுமானால் அது பெருநெறி எனப்படும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்வதாவது : "உன் ஜீவிதம் உனக்குப் பயன்படுவதைவிடச் சிறிதளவாவது மற்றவர்களுக்கு அதிகம் பயன்படுமானால் நீ வேள்வி வேட்பவனாகின்றாய். உன்னுடைய ஜீவிதம் உலகத்துக்குப் பயன்படுவது குறைகின்ற இடத்து நீ சுயநலத்தை வளர்க்கின்றவனாகின்றாய். சுயநலத்தை வளர்ப்பதன் மூலம் பிறவியை வளர்க்கின்றாய்."

வேள்வி, யக்ஞம், யாகம் என்பன ஒரே கருத்தை விளக்கும் சொற்களாகும். பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு ஐந்தாண்டுத் திட்டம் போடுகின்றார்கள். பொருள் விருத்தி அடைவதனால் மக்கள் சுகமாக வாழ்வார்கள். எனவே ஐந்தாண்டுத்திட்டத்தை யாகம் என்று சொல்லலாம். ஆனால் அதை முறையாகச் செய்யத் தெரியவில்லை. யாகம் செய்யத் தெரிந்துகொண்ட சமுதாயம்தான் விருத்தியடையும். சுயநலத்துக்காக என்று வாழும் சமுதாயத்தில் பொதுமக்கள் பயனடைய மாட்டார்கள். அவர்களுக்குத் துன்பம்தான் அதிகம் இருக்கும். பொதுநலத்துக்காக வாழும் சமுதாயத்தில் பொதுமக்களுக்குத் துன்பம் குறையும்; அதிகப் பயனும் அடைவார்கள். பொதுநலத்துக்கென்று செய்வதெல்லாம் யக்ஞம் ஆகின்றது. அங்ஙனம் செய்வதை ஈஸ்வர ஆராதனையாகச் செய்யுமிடத்துப் பற்றற்ற நிலை ஏற்படுகிறது. பொதுநலச் சேவையை ஈஸ்வர ஆராதனையாகச் செய்தால் அச்செயல் நம்மைப் பந்தப்படுத்துவதில்லை. நம்மைப் பந்தப்படுத்துவதற்குப் பதிலாக நம்மைக் கர்ம பந்தத்தில் இருந்து படிப்படியாக அது விடுவிக்கிறது. கர்ம தத்துவத்தை அறிந்து கர்மத்தைக் கையாண்டால் நாம் மேன்மையடையலாம்.

அமெரிக்காவில் போர்டு மோட்டார் கம்பெனி இப்பொழுது இருக்கிறது. அக்கம்பெனியாருக்கு யாகம் என்கின்ற பெயர் தெரியாது. ஆனால் யாக தத்துவத்தைக் கையாண்டு அவர்கள் முன்னேறி வருகிறார்கள். அக்கம்பெனியில் வேலை நிறுத்தம் நிகழ்வதில்லை. அதற்குக் காரணம் உண்டு. அக்கம்பெனியில் வரும் லாபத்தைத் தொழிலாளிகளுக்கும் விகிதாச்சாரப்படி பிரித்துக் கொடுத்துவிடுகிறார்கள். ஆகையால் அக்கம்பெனியில் உள்ள தொழிலாளிகள் கண்ணும் கருத்துமாய் உழைக்கின்றார்கள். இந்தியா யோகபூமி என்றும் யாகபூமி என்றும் பெயர் பெற்றுள்ளது. இன்றைக்கு அப்பெயர்கள் பெயரளவில்தான் இருந்து வருகின்றன. இன்றைக்கு யாகபூமியாக இருப்பது அமெரிக்கா ஆகும். அங்குச் செல்வம் கொட்டிக் கிடக்கின்றது. அமெரிக்காவிலிருந்து தாய்நாட்டுக்குத் திரும்பிய சுவாமி விவேகானந்தரிடம் தாய்நாட்டு மக்கள் "அமெரிக்கர்களுக்கு வேதாந்தம் புரிகிறதா?" என்று கேட்டார்கள்.

"அமெரிக்கர்கள் வேதாந்தத்தைப்பற்றி அறியார்கள். ஆனால் வேதாந்தத் தத்துவத்தை அவர்கள் அனுஷ்டித்து வருகிறார்கள். ஆகையால் அவர்கள் முன்னேறிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு வேதாந்தத் தத்துவத்தை எடுத்துச் சொன்னால் அவர்கள் நன்றாகப் புரிந்து கொள்கிறார்கள். புரிந்துகொண்டபின் இன்னும் நன்றாக அனுஷ்டிக்கிறார்கள்" என்று விவேகானந்த சுவாமிகள் கூறினார்கள். நாம் தத்துவம்பேசுவதில் நிபுணர்கள். ஆனால் தத்து

வத்தை நாம் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதில்லை. ஆகையால் நம்மிடத்தில் முன்னேற்றமுமில்லை. அமெரிக்கா யாகபூமி என்பதற்கு மற்ளெரு சான்று எடுத்துக்கொள்ளலாம். அங்குத் தக்காளிப்பழம் ஏராளமாக விளைகின்றது. அவர்கள் அதை மூன்று ரகமாகப் பிரிக்கிறார்கள். தலைத்தரமானதை விற்பனைக்கு அனுப்புவார்கள். இடைத்தரமானதைக் கால் நடைகளுக்கு உணவாகக் கொடுத்துவிடுவார்கள். கடைத்தரமானதைப் பூமியில் புதைத்து உரமாக்கிவிடுவார்கள். இதுதான் யாகம். நாம் கடைத்தரமானதைத்தான் விற்பனைக்கு அனுப்புவோம். அது யாகமாகுமா? நல்லது அல்லாததை மக்களுக்கு வழங்கக்கூடாது. வியட்நாம் போரில் அமெரிக்க அரசாங்கம் ஈடுபட்டதை அங்குள்ள மாணவர்கள் எதிர்த்துப் போராட்டம் செய்தார்கள். சந்திர மண்டலப் பயணத்தையும், அவர்கள் எதிர்த்தார்கள். செல்வத்தையெல்லாம் தேவையான நாடுகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று கூறினார்கள். இது நல்ல மனப்பான்மைக்கு அறிகுறியாகும்.

திரிகோணமலையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்கொள்வோம். திரிகோணமலை இலங்கையில் இருக்கிறது. உலகிலேயே இயற்கையாக அமைந்துள்ள துறைமுகங்களுள் அது பெரியது. ஆங்கிலேயரின் கப்பல்படை அங்கு இருந்தபோது அவர்கள் தங்களுடைய தேவைக்காக உணவுப் பொருள்களை டின்களில் ஏராளமாக அடைத்து வைத்திருந்தார்கள். ஒவ்வோர் உணவுப் பொருளிலும் தேதி குறிப்பிட்டு அக்குறிப்பிட்ட தேதிக்குள் பயன்படுத்தாவிட்டால் அது கெட்டுப்போய்விடும் என்று எழுதப்பட்டிருந்தது. ஒரு சமயம் காலம் கடந்து போன உணவுப்பொருள்கள் ஏராளமாக அவர்களிடம் இருந்தன. உடனே தலைவன் அவற்றையெல்லாம் கடலில் கொட்டிவிடும்படி உத்தரவிட்டார். சிப்பந்திகள் கடலில் போடுவதற்குப் பதிலாக ஊரில் உள்ள ஏழைகளுக்குக்கொடுத்துவிடலாம் என்றார்கள். ஆனால் தலைவன் "நமக்கு உதவாத உணவுப் பொருளைப் பிறருக்குத் தரக்கூடாது" என்று கூறிவிட்டார். இந்த மனப்பான்மைதான் யக்ஞ மனப்பான்மையாகும். நமக்கு உதவாததைப் பிறருக்குக் கொடுப்பது தானமாகாது. அப்படிக் கொடுக்கவும் கூடாது. தனக்குப் பயன்படுவதைத்தான் பிறருக்கும் தரவேண்டும். அது தான் யாகம் அல்லது யக்ஞம்.

நம்மிடத்திலுள்ள சிறந்ததை உலகுக்கு எடுத்து வழங்கினால் அது நம்மிடத்துப் பன்மடங்கு வளர்ந்து வருகிறது. நம்மிடத்திலுள்ள சிறந்த ஒன்றை உலகுக்கு வழங்க மறுத்தால் அது நமக்கும் பயன்படாது போய்விடும். இது ஒரு பெரிய கோட்பாடு. இந்தியாவை ஆட்சி புரிந்துவந்த ஆங்கிலேயர்கள் தங்களுடைய மொழியை நமக்குக் கொடுத்துள்ளார்கள். அதை நாம் இன்னும் விடாது வைத்திருக்கின்றோம். சம்ஸ்கிருதம் உலகத்திலுள்ள மொழிகள் எல்லாவற்றையும் விடப் பழைமையானது. அம்மொழியில்தான் வேதங்கள் எழுதப்பட்டன. அதைப் பெற்றிருந்தவர்கள் சுயநலம் கருதி அதைப் பிறருக்கு வழங்க மறுத்தார்கள். அதன் விளைவாக நம் நாட்டிலேயே அதற்கு ஆதரவு தருபவர்கள் இல்லாது போய்விட்டார்கள். சம்ஸ்கிருதத்தைப் பெற்றிருந்தவர்கள் அதைப் பொதுவுடைமையாக்கத் தவறியதால் அவர்களுக்கும் அது பயன்படாது போயிற்று. சமஸ்கிருதம் வெளிநாட்டில் போற்றப்படுகின்ற அளவுகூட நம்நாட்டில் போற்றப்படவில்லை. ஹாலந்திலிருந்து வந்த ஒருவர் கூறியதாவது: "எங்கள் நாட்டில் நான் படிக்கும் கல்லூரியில் இரண்டு சமஸ்கிருதப் பேராசிரியர்கள் சமஸ்கிருதத்திலேயே தங்களுக்கிடையில் பேசிக்கொள்கிறார்கள்." அந்நாட்டில் அவ்விதம் சமஸ்கிருதம் இடம் பெற்றிருக்க நம்நாட்டில் எத்தனைபேர் சமஸ்கிருதத்தில் பேசிக்கொள்கிறார்கள்? ஜெர்மனி நாட்டில் வானொலியில் சமஸ்கிருதத்தில் செய்திபரப்பப்படுகிறது. நம்நாட்டில் சமஸ்கிருதம் மறைந்து போனதற்குக் காரணம் அதைப்பெற்றிருந்தவர்கள் மற்றவர்களுக்கு வழங்கிப் பொதுவுடமை ஆக்காததேயாகும். நம்மிடத்திலுள்ள நல்லதைப் பிறர்க்கு உரியதாக்கும் யாகத்தைச் செய்யத் தவறினால் அது நம்மிடத்திலிருந்து மறைந்துவிடும். நம்நாட்டில் தோன்றிய சமஸ்கிருதத்தைப் பிறருக்குரியதாக்கத் தவறியதால் அது நமக்கே பயன்படாது போய்விட்டது.

(தொடரும்)

ஆத்மாவின் பந்தமும் முக்தியும்

(சுவாமி விவேகானந்தர் கட்டுரை — சேலம் கல்லூரி ஆசிரியை சகோதரி மங்கையர்க்கரசி மொழிபெயர்த்தது)

அத்வைத தத்துவப் பிரகாரம் மெய்ப் பொருள், பிரம்மம் ஒன்றே. மற்ற அனைத்தும் மாயையினல் பிரம்மத்தினின்று தோன்றிய வைகளே. நம் குறிக்கோள் பிரம்மத்தை மறுபடியும் திரும்ப அடைவதே ஆகும். நாம் அனைவரும் பிரம்மம்; மாயையுடன் கூடிய மெய்ப் பொருள். நாம் இம்மாயையைக் கடக்க இயலுமாணல் நம் யதார்த்த நிலையை அடைகிறேம். இக்கோட்பாட்டின்படி ஒவ்வொரு மனிதனும், தேகம், மனது அதற்கு அப்பால் உள்ள ஆத்மா எனப்படும் இம் மூன்றின் சேர்க்கையாவான். ஆத்மாவின் வெளியுறை தேகம். உள்ளுறை மனது. மனதின் உதவிகொண்டு தேகத்தை இயக்குவிப்பவன் ஆத்மா. ஆதலால், அதுவே உண்மையான பார்ப்பவன், இன்பம் துய்ப்பவன் ஆகின்றுன்.

மனித உடலில் ஆத்மா ஒன்றுதான் பௌதிகப் பொருளால் ஆனதன்று. பௌதிகப் பொருள் அல்லாத ஒன்று கூட்டுப் பொருளாக இருக்க இயலாது என்பதால் ஆத்மா கூட்டுப் பொருள் அன்று. கூட்டுப் பொருள் அல்லாத ஒன்று காரண காரிய விதிக்கு உட்பட்டதன்று. அதனல் ஆன்மா அழிவற்றது. ஆரம்பம் என்று ஒன்று இருந்தால் முடிவும் அதற்கு உண்டு என்பதால் அழிவற்ற ஆன்மாவிற்கு முதலும் முடிவும் இல்லை. ஆன்மா பௌதிகப் பொருள் அன்று என்பதனல் அதற்கு உருவமும் இல்லை. உருவமுடைய அனைத்துக்கும் ஆதி அந்தம் உண்டு. ஆன்மா எங்கும் வியாபித்துள்ளது, உருவமற்றது, காலதேசத்தில் கட்டுப்படாதது. அத்வைத வேதாந்தத்தின் படி ஆத்மா உன்னிடம், என்னிடம், அனைவரிடமும் எங்கும் வியாபித்துள்ளது.

மனிதன் சிந்திக்கும் ஒவ்வோர் எண்ணமும், ஒவ்வொரு கர்மமும் மனதில் ஒரு பதிவை உண்டாக்குகிறது. இது வடமொழியில் சம்ஸ்காரம் என்று பகரப்படுகிறது. சம்ஸ்காரத்தின் தொகை ஒரு பெரிய சக்தியாக உருவெடுக்கிறது. அது ஜீவவியக்தி அல்லது பண்பு என்று பகரப்படுகிறது.

மனிதனின் வியக்தி அவனைகத் தேடிக் கொண்டதாகும். மரணம் அடைந்த பிறகு புதிய பிறவிக்குத் தூண்டுதலாய் இருப்பது அவனுடைய சம்ஸ்காரங்களே. மரணத்தால் வீழ்ந்த தேகம் பஞ்சபூதங்களாக மாறி அமைகிறது. ஆனல் சம்ஸ்காரங்கள் அழியாமல் மனதினுள் புதைந்து இருக்கின்றன. மனதும் ஞானம் வந்த பின்பு அழிந்து போகிறது. இம் மனதை அழிப்பதற்கே மனிதன் படாதபாடு படுகிறுன்.

பல திசைகளில் இருந்துவரும் காற்று புழுதி, குப்பை முதலியவற்றை இழுத்துக் கொண்டு ஒரு வடிவத்துடன் சுழல்கிறது. அப் புழுதி மண்டலம் நகரும்பொழுது குப்பைகளைக் கீழே விட்டுவிட்டு அங்கிருக்கும் வேறு சில குப்பைகளை இழுத்துக்கொண்டு ஒரு வடிவத் துடன் நகருகிறது. காற்றின் வேகம் இருக்கும் பரியந்தம் இது தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதே போன்று சம்ஸ்காரங்கள் பஞ்ச பூதங்களின் உதவிகொண்டு தேகம், மனது ஆகியவற்றை உருவாக்குகின்றன. காற்று சில குப்பைகளை இழுத்துக்கொண்டு நகருவதுபோல் இத்தேகம் வீழ்ந்துபட்டுப் போய் வேறு தேகத்தை ஜீவன் எடுக்கிறுன். இவ்வாறு சம்ஸ்காரங்களின் ஆற்றல் அழிந்து பட்டுப் போகும் பரியந்தம் பிறப்பு, இறப்பு தொடர்கிறது. பிறப்பு, இறப்பினின்று விடுதலை பெறுவதையே குறியாகக்கொண்டு மக்கள் அனைவரும் இயங்குகின்றனர்.

ஓர் அறையில் அனைவராலும் அடிக்கப்படும் பந்து ஒன்று இங்கும் அங்குமாக அலக்கழிக்கப்பட்டு இறுதியாக அறையைவிட்டு வெளியேறிவிடுகிறது. அதேபோன்று இவ்வுலகம் என்னும் அறையில் உள்ள மனம் என்ற பந்து, உடல், உள்ளம் என்பவற்றின் செயல்களால் ஓயாது உந்தித்தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது. பந்து எத்திசையில் எந்தவேகத்துடன் செல்லும் என்பது அது பெற்ற அடியின் வேகத்தைப் பொறுத்து அமைவதைப் போன்று மக்களுடைய மறுபிறவி அவர்களுடைய முன் வினைகளைப் பொறுத்து அமைகிறது. வினைகளே பிறவிக்கு வித்தாகின்றன.

பட்டுப்புழு தனது உமிழ் நீரிலிருந்து நூலை உற்பத்தி செய்து தன்னைச் சுற்றி வலை பின்னுகிறது. இறுதியில் தான் பின்னிய வலையில் தானே அகப்பட்டுக்கொள்வதைப் போன்று வினை என்ற வலையை மனிதன் தானே தன்னைச் சுற்றி விரித்துக்கொண்டுள்ளான். வினை என்னும் சக்கரத்தை அனை வரும் சுழல விட்டு விட்டோம். அதில் நசுக்கப் படுகிறோம். நல்வினை, தீவினை இரண்டுமே மனிதனைப் பந்தப்படுத்தும் இயல்புடையவையாகும்.

ஆத்மாவுக்குப் போக்கு வரவு என்பது இல்லை. பிறப்பு, இறப்பு ஆத்மாவுக்கு இல்லை. ஆத்மாவின் முன் இயற்கையே அசைகிறது. ஆத்மாவில் இவ்வசைவு பிரதிபலிக்கிறது. இதை ஆத்மா அசைகிறது, இயற்கையன்று என்று கருதுவது அக்ஞானமாகும். இவ்வாறு கருதும் பொழுது ஆத்மா கட்டுக்கு உட்பட்டதாகிறது. ஆத்மா அசைவற்றது. எங்கும் நிறைந்தது என்பதை அனுபூதியில் பெறும் பொழுது விடுதலை வந்தமைகிறது. கட்டுப் பட்ட ஆத்மா ஜீவன் என்ற பெயர் பெறுகிறது. சம்ஸ்காரத்தின் காரணமாகப் பல பிறவிகள் வந்தமைகின்றன. மனிதன் தேவர்களைவிட உயர்ந்தவன். ஏனெனில் மனிதப் பிறவியில் மட்டும்தான் முக்தியடைய இயலும்.

பிரம்மத்தினின்று தோற்றத்துக்கு வந்த அனைத்தும் பிரம்மத்தையே அடைய முயல் கின்றன. தாவரம், விலங்கு முதலிய பல நிலைகளைக் கடந்து மனித நிலையை இறுதியாக மனிதன் அடைந்துள்ளான். மனிதன் பிரம்மத்திற்கு மிக அண்மையில் உள்ளான். பிரம்மசொரூபம் ஆவதே வாழ்க்கையின் லட்சியமாகும்.

பிறப்பு, இறப்பு என்னும் வட்டத்தைச் சுற்றும் அனைத்து ஜீவராசிகளும் விரைவிலோ காலதாமதம் ஆகியோ முக்தியடைவது திண்ணம். அனைவருக்கும் முக்தி உண்டு என்ற பட்சத்தில் எதற்காக அதனையடையப் படாத பாடுபடவேண்டும் என்ற ஐயம் தோன்றலாம். ஆனல் இப்போராட்டமே மனிதனை முக்திக்கு எடுத்துச் செல்லும் ஒரே வழி. போராட்டத்தைத் தவிர்க்க அவனுக்கு இயலாது. மனிதர்களில் பலர் உலகியல் இன்பங்களில் திருப்தியுற்று இருக்கின்றனர். விழிப்படைந்தவர்கள் உணர்ந்து யதார்த்த நிலையை அடையப் பாடு படுகின்றனர். மற்றவர்கள் அக்ஞானத்தில் உழலுகின்றனர்.

நிலையற்ற பொருளைத் துறந்து நிலையான பொருளை அடைய வேண்டும் என்று வேதாந்தம் கூறுகிறது. நிலையற்றதை ஏன் துறக்க வேண்டும்? முக்தியின் அவசியம் என்ன? இன்பத்தை நல்கும் இவ்வுலகத்தினின்று ஏன் மேன் மேலும் இன்பத்தைப் பெற முயலலாகாது? என்பன போன்றவினுக்களை உலக இன்பத்தில் ஊறியவர்கள் எழுப்புகின்றனர். இவ்வுலகம் அழியக்கூடியது, இவ்வின்பங்களை மக்கள் பன்முறை அனுபவித்திருக்கின்றனர் என்பதே மேற்கூறிய வினுக்களுக்கு விடையாகும். பகடைகளை உருட்டும் பொழுது ஒரு பகடையில் ஐந்தும் மற்ருென்றில் நான்கும் பிறிதொன்றில் இரண்டும் வருவதாகக் கொள்வோம். தொடர்ந்து பகடைகளை உருட்டிக் கொண்டே இருந்தால்மறுபடியும் இந்தச்சேர்க்கையாகிய ஐந்து, நான்கு, இரண்டு கட்டாயமாக வரும். இதே போன்று இப்பொழுது தொடர்பு உடையவர்கள், இன்பம் இவையனைத்தையும் முற்பிறவிகளில் பலமுறை மனிதன்பெற்றிருக்கிருன். ஆகவே நிலைத்த, என்றும் மாருத ஆனந்த நிலையை அடைதற் பொருட்டு இந்நிலையற்ற உலகியல் இன்பத்தைத் துறத்தல் அவசியமாகிறது.

ஆசை இருக்கும் பரியந்தம் பரிபூரண நிலையை அடைய இயலாது. ஜீவன் முக்தர்களுக்கு ஆசை இல்லை. இறைவனுக்கு எந்த விதமான ஆசையும் இல்லை. அப்படி ஆசை இருக்குமானல் அவன் இறைவன் அல்லன். இறைவனுக்கு இதைச் செய்தால் மகிழ்ச்சி, அதைச் செய்யாததனல் கோபம் என்று சிலர் கூறுவது சிறுபிள்ளைத்தனமான பேச்சாகும். சான்ருேர்கள் எதற்கும் ஆசைப்படாதே, ஆசையை விட்டொழி, ஆத்மத் திருப்தியுற்றிரு என்று போதித்துள்ளார்கள். ஆசைக்கு வயப் பட்டுப் பந்தத்தில் கட்டுப்படாமல் ஆசையைக் கடந்து முக்தியடைதல்வேண்டும். கிடைப்பதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றுள்ள நாம் அதனை வீணுக்காமல் முக்தியடையப் பாடு படுவோமாக.

அன்னையின் தோற்ற மகிமை

(திருப்பூர் பக்தர் இல்லத்தில் யதீஸ்வரி சாரதாப்ரியாம்பா அவர்கள் நிகழ்த்திய உபந்யாசம்)

மனிதர்கள் இவ்வுலகில் வந்து பிறந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்கள் இங்கு வாழ்ந்திருப்பது சாசுவதம் அன்று. பெருமக்கள் சிலர் உலகில் தோன்றுகிறார்களே தவிர மறைவதில்லை என்பது கோட்பாடு. ஸ்ரீ ராமர் இவ்வுலகை உய்விக்கப் பிறந்தார். சீதாதேவி பெண் ஒருத்தி எப்படி வாழவேண்டும் என்பதைக் காட்டப் பிறந்தார். ஸ்ரீ ராமர் ஒரு ராஜ்யத்தை எப்படி நடத்த வேண்டும், ராமராஜ்யம் எப்படி இருக்கவேண்டும் என்பதை நமக்குக் காண்பித்து ராமராஜ்யத்தை நம்மிடம் ஒப்படைத்து, தாம் உலகிற்கு வந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்தார். உலக நன்மைக்காகவே அத்தகையவர்கள் தோன்றுகின்றனர். இராமாயணமும் மஹாபாரதமும் என்றும் அழியாத செல்வங்களாகும்.

பெண் ஒருத்தி எவ்விதம் வாழ்ந்திருக்க வேண்டும் என்பதைக் காட்டுவதற்கே அன்னை சாரதாதேவியார் வந்திருந்தார். கல்கத்தாவில் காளிகோவிலில் (காளிகட்) நகபத் என்ற சிறிய இடத்தில் அவர் வாழ்ந்திருந்தார். ஜெயராம்பாடி என்ற கிராமம் ஒன்றில் ஓர் எளிய கொட்டகையில்தான் அவர் பிறந்தார். காளி கோயிலில் பூஜை நடக்கும்போது நகபத்திற்கு மேல் உள்ள இடத்தில் வாத்தியங்கள் வாசிப்பார்கள். அது எழுந்து நிற்கக்கூட முடியாத உயரமுடைய சிறிய அறையாகும். அந்தச் சிறிய அறையில்தான் தம் வாழ்நாளை அன்னையார் கழித்தார் என்பதை நோக்கும்போது அதற்குக் காரணமாக அமைந்தது அவர்தம் மனதைமிகப் பெரியதாக்கி உலகமக்கள் அனைவரின் நலனுக்காகவும் அங்குச் செய்த தபஸ் ஆகும். அன்னை சாரதாதேவியார் சாதாரணமான பெண் அல்லர்.

இவ்வுலகவாழ்வு எதுவும் சாசுவதம் அன்று. ஸ்ரீ ராமர் வந்தார், கிருஷ்ணர் வந்தார் என்று காணும்போது அவர்கள் இங்கு ஏன் வந்தார்கள் என்று நோக்கவேண்டும். இன்றைக்கு நவ நாகரிகம் என்னும்பெயரில் நடையுடை பாவனை முதலியன மாறியமைந்துகொண்டு வருகின்றன. பழைய பண்புகள் யாவும் மறைந்து வருகின்றன. நாம் ஏன் பிறந்தோம்? எப்படி இங்கு வாழ வேண்டும்? நாம் என்ன செய்ய வேண்டும்? என்பதை விளக்கிக்காட்டவே பெருமக்கள் தோன்றுகின்றனர். அவர்கள் உலக மக்களை உய்விக்கப் பிறந்தவர்கள்; உலக மக்களை வாழ்விக்கப் பிறந்தவர்கள்; அவர்கள் உலகில் வாழப் பிறக்கவில்லை. இன்றைக்குக் கல்வி என்பது நவ நாகரிகமாக உடையணிந்து கொண்டு பெண்மையை எங்ஙனம் மதித்து வாழவேண்டும் என்றுகூடத்தெரியாத அளவிற்குப் போய்க்கொண்டிருக்கிறது

அன்னை சாரதாதேவியார் கல்கத்தாவில் ராணி ராசமணியால் கட்டப்பட்ட காளிகோயிலுக்கு அருகில் நகபத்தில் வாழ்ந்திருந்ததே உலக மக்களுக்கு ஒரு பாடமாகிறது. ராமகிருஷ்ணர் அக்கோவிலில் ஒரு பூஜாரியாக நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் எவ்வளவு வசதிகள் இருந்தாலும் எவ்வளவு பெரிய இடம் இருந்தாலும் நமக்குப் போதும் என்னும் எண்ணம் வருவதில்லை; இன்னும் போதவில்லையே என்றுதான் கருதுகிறோம். அன்னை சாரதாதேவியார் உள நிறைவுடன் வாழ்ந்திருக்காவிடில் இன்று ராமகிருஷ்ண பரமஹம்சர் இருந்திருக்க முடியாது; விவேகானந்தர் இருந்திருக்க முடியாது. உலகம் முழுதும் ராமகிருஷ்ண மடம் தோன்றியதற்கு ராமகிருஷ்ணர் மட்டும் காரணம் அல்லர். உதாரணம் ஒன்று எடுத்துக்கொள்வோம். ஒரு பெரிய ஆலமரம் விரிந்து பரந்து அழகாகத் தோன்றுகிறது. அதை நிலத்துடன் கட்டிப் பிடித்திருப்பது விழுது பகுதியாகும். அந்த விழுது இல்லாவிடில் மரம் விழுந்துவிடும். அதேபோன்று அன்னை சாரதாதேவியார் ராமகிருஷ்ண மடம் ஸ்தாபிதத்திற்குச் சிறந்த விழுது ஆவார். தமக்கு அனைத்தும் இருப்பதாகக் கருதி அன்னை சாரதாதேவியார் நிறைவாழ்வு வாழ்ந்திருந்தார். நமக்கு எவ்வளவு இருந்தாலும் போதாத மனம். பெண் ஒருத்தி தனக்கு வரும் கஷ்ட நஷ்டங்களில் மனதைச் செலுத்தி வருந்தலாகாது—லாபம் வரும்போது அதனால் மிதமிஞ்சிய சந்தோஷமடைதலும் கஷ்டத்தில்

துக்கப்பட்டு வருந்துதலும் கூடாது.

நாம் இங்கு எதற்கு வந்தோம், எவ்விதம் வாழ்ந்திருக்க வேண்டும் என்பதைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கவேண்டும். நன்ருகச் சிந்தித்துப்பார்த்தால் இங்கு ஒரு துளி இன்பம் தான் உள்ளது என்றும் துன்பம்தான் மிகுந்திருக்கிறது என்றும் உணரலாம். ஆனல் கஷ்டத்தைக் கஷ்டமாகப் பாவிக்கக் கூடாது. அப்போது எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அதனை நாம் சமாளிக்கப் பழகுவோம். துன்பம் உயிர்வகைகளைப் பக்குவப்படுத்துகிறது. அதனல்தான் இறைவன் கருணை கூர்ந்து கஷ்டத்தைக்கொடுத்து உயிர்வகைகளைத் திருத்தியமைக்கின்ருர். வந்த துயரத்தை நினைத்து நினைத்துத் துக்கப்படக்கூடாது. துக்கத்தைப் பிரசாதமாக எடுத்துக்கொள்ளத் தெரிந்துகொள்ளும்போது நாம் மனபரிபாகம் அடைந்தவர்களாவோம். உலக மக்கள் தங்களுக்கு வருகின்ற துக்கத்தைத் துக்கமாகப் பாவிக்கக்கூடாது; வரப்பிரசாதமாகப் பாவிக்கவேண்டும் என்பதைக் காட்டவே அன்னையார் இவ்வுலகிற்கு வந்துள்ளார். அதனல் தான் அவர் ராமகிருஷ்ணரைக் காட்டிலும் பெரியவர். ஒரு முறை 'என்னை எவ்வாறு தாங்கள் கருதுகின்றீர்கள்?' என்று அன்னையார் கேட்டபோது ஸ்ரீ ராமகிருஷ்ணர் அன்னையாரைப் பற்றிக் கூறுகின்ருர்: 'அன்னை பராசக்தி ஒரு வடிவெடுத்து என்னை ஈன்றெடுத்தாள். மற்ருெரு வடிவெடுத்து இப்பொழுது எனக்குப் பணிவிடை பண்ணுகின்ருள்.'

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குத் தேவியின் திவ்ய தரிசனம் பெற வேண்டுமென்ற அருள் பித்துப் பிடித்திருந்ததை உலக மக்கள் பைத்தியம் பிடித்திருந்ததாகக் கருதி அவரைப் பைத்தியக்காரன் என்று நினைத்தனர். அதைக்கேட்ட தாய் சந்திராதேவி தம் மகனுக்கு திருமணம் செய்து வைத்தால் பித்துச் சரியாகிவிடும் என்று கருதினர். இருபத்து மூன்று வயதுள்ள ராமகிருஷ்ணருக்கு ஆறு வயது சாரதை திருமணம் செய்விக்கப்பட்டார். அது பொருத்தமான திருமணமா? இல்லை; பொருத்தமற்ற திருமணம். குழந்தை சாரதையைப் பரமஹம்சர் காளிதேவியை வணங்கியது போன்று வணங்கிப் போற்றினர். காளிதரிசனம் பெற வேண்டும் என்று கதறியழுதார். தீவிர அருள் தாகத்திஞல் ஒரு நாள் தம் கழுத்தை அறுத்துக்கொள்ள தேவியின் சந்நிதியில் இருந்த வாளை எடுத்தார். அப்போது தேவி பிரசன்னமாகி அவரைத்தடுத்தாட்கொண்டாள். எங்கும் சைதன்யமயமாக தேவி அவருக்குக் காட்சி கொடுத்தாள். மனபரிபாகத்திற்கு ஏற்பத்தான் வாழ்வுஅமையும். அவரை போட்டால் துவரை முளைக்காது. ஆதலால் நல்வினை தீவினைக்கு ஏற்பத்தான் நம் வாழ்வு அமைகிறது. சன்மார்க்கத்தில் செல்பவர்களைக் கண்டு உலக மக்கள் அனுதாபம் கொள்கிருர்கள். போகப் பொருள்களை அனுபவிக்காமல் உலகில் வாழ்வதால் வாழத் தெரியாதவர்கள் என்று சந்யாச ஆச்ரமம் மேற்கொண்டவர்களைக்கூட அவர்கள் நிந்திப்பர். அப்படி எண்ணுபவர்களுடைய மனப்பக்குவம் அவ்வளவுதான்.

அன்னை சாரதாதேவியாரின் அருட்செல்வர் சுவாமி விவேகானந்தரின் பிறப்பு ஒரு தெய்விகப் பிறப்பாகும். ஆண்மகவு இல்லையே என்று தவமிருந்த தாய்க்கு ஞானச்சுடராகச் சுவாமி விவேகானந்தர் தோன்றினர். அத்தகைய விவேகானந்தர் அன்னை சாரதாதேவியாரின் அருளாசியுடன்தான் சர்வமத மகாசபைக்குச் சென்ருர். அன்னையாரின் ஆசி இருந்தால்தான் தாம் சர்வமத மகாசபைக்குச் செல்லமுடியும் என்று அவர் கருதினர். பின்னர் அருளன்னையின் ஆசியுடன் தான் நம் இந்துமதத்தின் பிரதிநிதியாகச் சர்வமத மகாசபைக்குச் சென்ருர். இயேசு ஒருவரே உண்மையென்றும் கிறிஸ்துவ மதம் ஒன்றே உலகில் நிலைநாட்டப்படவேண்டுமென்றும் கருதப்பட்ட அந்நாளில் அன்னை சாரதாதேவியாரைப் பிரார்த்தித்து மகாசபைக் கூட்டத்தில், 'சகோதரி, சகோதரர்களே!' என்று விவேகானந்தர் கம்பீரமாக ஆரம்பித்தார். 'சீமாட்டிகளே, சீமான்களே!' என்றுகேட்டுப் பழகியிருந்த அனைவருள்ளத்திலும் சுவாமிஜியின் ஆத்ம பாவம் ஆழப் பதிந்தது.

அன்னை சாரதாதேவியே தாயாகவும், தேவியாகவும், பராசக்தியாகவும் தோன்றியுள்ளார் என்பதைப் பரமஹம்சரே விளக்குகின்ருர். தாம் செய்த தவத்தையெல்லாம் ஒரு மணியாகக் கட்டி ஜபமாலை என்று கூறுவது

போன்று தம் தவப்பயனையெல்லாம் அவருடைய பாதத்தில் சமர்ப்பித்துத் தொழுதார். 'நீ அருள் தாயாக இருந்து அனைவரையும் ஆதரிக்கவேண்டும்' என்று ஆசி கூறினர். எங்கெங்கு மனம் நொந்தவர்கள் உள்ளனரோ, எங்கெல்லாம் மக்கள் மனம் வாடித் தத்தளிக்கின்றனரோ அங்கெல்லாம் அன்னை அவர்களுக்கு ஆறுதல் அளித்து அவர்களை உய்வித்தார். 'எனக்கு இத்தகைய கஷ்டம் வந்துவிட்டதே' என்று மனம் நொந்து 'என் கஷ்டம் எப்படித் தீருமோ?' என்று நொந்து வரும் மக்களுக்கு அன்னை இரு கைகளையும் நீட்டி வரவேற்று வாயில் காப்போன் போல் இருந்து, 'வா மகளே! வா மகனே!' என்று அழைத்து எந்த நேரத்தில் யாருக்கு எந்த உபகாரம் செய்யவேண்டுமோ அவ்விதம் அருள் பாலித்தார். எல்லாரையும் வரவேற்று அனைவருக்கும் இருக்க இடம் தந்து உலக மக்கள் அனைவரும் 'அம்மா, அம்மா!' என்று அழைக்க அருள் தாயாகத் திகழ்ந்தார். இன்று எத்தனையோ பேர் நல்ல கல்வி கற்று, பட்டம் பெற்று அன்னையின் அருள் நிழலைச் சார்ந்துள்ளார்கள். எத்தனையோ தபஸ்விகள் இன்று அன்னையின் பாதார விந்தங்களில் சரண் புகுந்துள்ளனர்.

நாம் பணத்தைப் பாதுகாத்துவைக்க வங்கிகளில் அதைப் போட்டு வைக்கின்றோம். அதே போன்று சிறந்த பொக்கிஷமாகிய இறைவனை நம் ஹிருதயத்திலே வைத்து நம்பிக்கை என்னும் பூட்டினால் பூட்டி நம் மனதைக்கொண்டு அந்தப் பொக்கிஷத்தைப் பாதுகாத்து வந்தால் அந்தத் தெய்வம் நம்மை வழி நடத்தும். சதா சர்வகாலமும் அரிய பொக்கிஷம் உள்ள நம் ஹிருதயத்தில், ஆங்குக் குடிகொண்டு விளங்கும் இறைவனிடத்தில் நம்மனம் நிலைபெற்றுவிட்டால் நமக்கு எந்தப் பயமும் இல்லை. இறையருள் யாண்டும் நம்மை வழி நடத்தும். இறைவனின் பிரசாதம் மனதைப் பரிசுத்தப்படுத்துகிறது. பரிசுத்தமான மனதால் இறைவனைக் குறித்துச் சதா சிந்தித்தல் எளிதாகிறது. ஆகவே அன்னையைச் சரண்புகுந்து தெய்வ நம்பிக்கையால் நம் வாழ்வை இனிது நடத்த முயல்வோமாக! அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்.

நம் தாய்நாடு

"என் குழந்தைகளே! இரக்கம் கொள்ளுங்கள். ஏழைகள், அறியாமையில் இருப்பவர்கள், நசுக்கப்பட்டவர்கள் ஆகியவர்களுக்காக இரக்கம் கொள்ளுங்கள். இதயமே நின்று போகும் வரையிலும், மூளை கொதித்துப் போகும் வரையிலும் இரக்கம் கொள்ளுங்கள். உங்களுக்குப் பைத்தியம்பிடித்துவிட்டதோ என்று நினையுங்கள். அதன் பிறகு இறைவனின் கால்களில் உங்கள் ஆன்மாவை அர்ப்பணியுங்கள். அப்போது உங்களுக்கு ஆற்றல் வந்து சேரும்; அசைக்கமுடியாத உறுதியான வலிமை வந்து சேரும். போராட்டம்! போராட்டம்! இதுவே கடந்த பல ஆண்டுகளாக என் வாழ்வின் இலட்சியமாக இருந்து வந்திருக்கிறது. இப்போதும் போராட்டம் என்றுதான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். எங்கும் எல்லா இடத்திலும் இருள் சூழ்ந்திருக்கும்போதும் போராட்டம் என்றுதான் நான் சொல்லுவது வழக்கம். வெளிச்சம் வரும்போதும் நான் போராட்டம் என்றுதான் சொல்கிறேன். என் குழந்தைகளே! அஞ்சவேண்டாம். கொழுந்துவிட்டெரியும் ஆர்வத்தை எங்கும் பரப்புங்கள். செயலாற்றுங்கள்! செயலாற்றுங்கள்! வேலை செய்யும்போது ஒரு வேலைக்காரனைப் போலவே இருங்கள். சுயநலம் அற்றவர்களாக இருங்கள். எல்லையற்ற பொறுமையைக் கடைப்பிடியுங்கள். கவனமாக இருங்கள். உண்மையல்லாதவற்றில் மிகவும் எச்சரிக்கையாயிருங்கள். மெதுவாக என்றாலும் வெற்றி நிச்சயமாக உங்களுடையதாகப் போவது உறுதி. எதிர்கால இந்தியா உங்களைப் பொறுத்தே அமையப்போகிறது. வெற்றி உங்களுடையதே!"

— *சுவாமி விவேகானந்தர்*

சுவாமி பிரேமானந்தர் வாழ்வும் வாக்கும்

(பிரம்மச்சாரி சேகர்)

[229ஆம் பக்கத் தொடர்ச்சி]

பல ஆண்டுகளுக்குப் பிறகு இதே போன்ற ஒரு சம்பவம் சுவாமி பிரேமானந்தர் கிழக்கு வங்காளத்தில் முஸ்லீம்கள் அதிகமாக வசித்த ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தபோது நடந்தது. இறைவன் நீக்கமற எல்லாப் பொருள்களிலும் வியாபித்திருக்கிறான் என்று சுவாமி பிரேமானந்தர் பேசியதால் மிகவும் கவரப்பட்ட ஒரு முஸ்லீம் அன்பர் அவரிடம் சென்று, "தாங்கள் நான் தீண்டிய உணவைச் சாப்பிடுவீர்களா?" என்று கேட்டார். சிறிதும் தயக்கமின்றி அவர், "ஆம், நான் சாப்பிடுவேன்" என்று விடை விடுத்தார். உடனே அந்த முஸ்லீம் அன்பர் ஓடோடிச் சென்று உணவுப் பதார்த்தங்களைக் கொண்டுவந்தார். சுவாமி பிரேமானந்தர் அவருடைய கையிலிருந்தே உணவை வாங்கிச் சாப்பிட்டார். மேல்நாட்டார் ஒருவருக்கு இது ஆச்சரியப்படத் தக்கதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் பழைய சம்பிரதாயங்களில் ஊறிப்போன ஹிந்து ஒருவனுக்கு இச்செயல் அனுஷ்டான விதிகளை மீறியதாகவே படும்.

சுவாமி பிரேமானந்தர் பிரேமையே உருவானவர் என்றாலும் கண்டிப்பு மிகுந்தவர் என்பதை முன்பே குறிப்பிட்டுள்ளோம். இன்றைக்கும் கூட ஸ்ரீ ராமகிருஷ்ணமடத்தைச் சேர்ந்த மூத்த சாதுக்கள் பலர் சுவாமி பிரேமானந்தருடைய தண்டனை முறைகளைப் பற்றியும் கத்திபோல் கூர்மையான விமர்சனங்களைப் பற்றியும் நினைவு கூர்வதுண்டு. ஆனால் அவருடைய கோபத்தில் கடுமை இருக்காது. இளம் பிரம்மச்சாரி யாராவது ஒருவர் ஏதேனும் ஒரு காரணத்தின் பொருட்டுச் சோர்ந்து போய்க் காணப்பட்டால் அவர் அவரிடம் இனிமையாகப் பேசித் தமக்கென்று ஆயத்தப் படுத்தி இருக்கும் சிறந்த உணவு வகைகளைக் கொடுத்து அவரை உண்ணச் செய்வார். யாராவது ஒரு சாதுவிடம் தாம் மிகக் கடுமையாக நடந்துகொண்டதாக அவர் உணர்ந்தால் ஒரு டம்ளரில் பாலை எடுத்துக்கொண்டு அவரைத் தேற்றும் பொருட்டு அவர் பின்னாலேயே செல்வதும் உண்டு.

ஒரு சமயம் சுவாமி நோய்வாய்ப்பட்டிருந்த போது, ஓர் அன்பர் சுவை மிகுந்த தின்பண்டங்களை அவ்வப்பொழுது கொண்டுவந்து தமக்குக் குற்றேவல் செய்து வந்த பிரம்மச்சாரிகளுக்கு உண்ணும்படி தந்தார். இதைக் கவனித்த சுவாமி பிரேமானந்தர் அவர்களுள் ஒருவரைத் தமக்கருகில் அழைத்து, "நம் குருநாதர் மடத்து உறுப்பினர்கள் இரவில் ஆவலை அடக்கிக்கொண்டு சிறிதளவு தான் உண்ண வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். நீங்களோ நாவைக் கட்டுப்படுத்த முடியாமல் அதற்கு நேர்மாறாக நடந்து வருகிறீர்கள்" என்று சாடினார். அந்தப் பிரம்மச்சாரியின் மனம் இதனால் புண்பட்டது. யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் அன்றே அவர் மடத்தைவிட்டு வெளியே சென்று விட்டார். அடுத்த சாப்பாட்டு வேளையில் அவர் இல்லாததைச் சுவாமி பிரேமானந்தர் அறிந்துகொண்டார். பரபரப்புற்ற அவர் மற்றவர்களிடம் சொல்லி அவரைத் தேடும்படி பணித்தார். ஆனால் அவர் சென்றதற்கான எந்தத் தடயமும் இல்லை. எனவே, சுவாமி பிரேமானந்தர் பெரிதும் கவலைக்குள்ளானார்.

அன்று மாலை அந்தப் பிரம்மச்சாரி அரவம் செய்யாமல் மெதுவாகப் பின் கதவு வழியாக மடத்திற்குள் பிரவேசித்தார். அவர் வந்து விட்டதையறிந்த சுவாமி பிரேமானந்தர் அவரைத் தம் அறைக்கு அழைத்துக் கூறினார். "என் குழந்தாய், நோய்வாய்ப்பட்டதனாலும் வயதாகி விட்டதாலும் என் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாதவனாக இருக்கிறேன். அந்தச் சந்தர்ப்பங்களில் நான் கோபப்பட்டேனானால் அதை நீ பொருட்படுத்தலாமா?" இவ்வாறு கூறியபோதே அவர் கண்களில் கண்ணீர் மல்கியது. சில இனிப்புப் பண்டங்களை வரவழைத்து, அந்தப் பிரம்மச்சாரிக்குத் தம் கையாலேயே அமுது செய்வித்தார்.

"மற்றவர்களிடம் நீங்கள் பேரன்பு

செலுத்தி அவர்களை உங்களுக்குச் சொந்த மாக்கிக் கொண்டீர்களானால் உங்களை மற்ற வர்களும் உதாரணமாகக் கொண்டு பின்பற்று வார்கள். ஒரு தலைவன் உண்மையான தலை வனாய் இருத்தற்பொருட்டுத் தான் முற்றிலும் அகங்காரமற்றவனாய் இருந்தாக வேண்டும்'' என்று ஒரு பக்தருக்கு எழுதிய கடிதத்தில் சுவாமி பிரேமானந்தர் குறிப்பிடுகின்றார். விவேகானந்த சுவாமிகளின் கூற்றுக்கிணங்க சுவாமி பிரேமானந்தர் ஆன்மீக மறுமலர்ச்சி யின் மையமாகப் பேலூர் மடத்தை உருவாக்கு வதில் கருத்துச் செலுத்தினார். அச்செயலையும் அன்புடனும் பரிவுடனும் ஆற்றி வந்தார் சுவாமி பிரேமானந்தர். தம் குருநாதராகிய ஸ்ரீ ராமகிருஷ்ணரின் போதனைகளில் ஆழ்ந்த நம்பிக்கையும் அவருடைய அந்தரங்க விருப் பங்களைச் செயல்படுத்துவதில் தம்மையே அர்ப்பணித்துக்கொண்டு இடையறாது புரிந்த சேவையும் எல்லாப் படித்தரங்களிலும் இருந்த மக்களைத் தம்பால் ஈர்த்த செயலும் அவருடைய பேரன்புக்கு ஆதாரமாயிருந்தன. அத்தகைய வர்கள் எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்து வந்தாலும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய போதனையைச் செவி மடுத்தால் அது அவர்களுடைய நெஞ்சங்களை ஊடுருவிச் செல்லாமலிருப்பது சாத்தியமன்று என்று சுவாமி பிரேமானந்தர் உறுதியாக நம்பினார்.

மற்றொரு பக்தருக்குத் தாம் எழுதிய கடிதத் தில் சுவாமி பிரேமானந்தர் குறிப்பிடுவதாவது: "மனித குலத்தைச் சேர்ந்த அனைவரையும் நேசிப்பதன் மூலம் அவர்களை உங்களுக்கு உரியவர்களாக்கிக் கொள்வதுதான் இந்தக் காலத்தில் பக்தி என்றும் ஞானம் என்றும் வழங்கப்படுவதற்கு உரியதாகின்றது. உங்கள் முழுமனதுடன் சேவைபுரிந்து வாருங்கள். பரமஹம்சதேவரின் கருத்துக்களெல்லாம் உல கம் முழுவதும் நன்கு பரவி வருகின்றன. நாற் றிசைகளிலும் சாந்தியும் ஆனந்தமும் பொங் கிப் பரவுவன ஆகுக.''

மற்றவர்களுடைய நலனிலும் வசதியிலும் கருத்துமிகச் செலுத்தி வந்த சுவாமி பிரே மானந்தர் தம் உடல் நலத்தில் அதிகம் கருத் தைச் செலுத்தாமலிருந்து வந்தார். தமக்குப் பரிமாறப்பட்ட மிகச் சிறந்த உணவு வகைகளை யும்கூடத் தம் குரு சகோதரர்களுக்கு அன் புடன் எடுத்து வழங்கிவிடுவது அவருக்கு வழக்கமாயிருந்தது. தமக்கென்று அவர் ஓரிரு உடைகளைத்தான் வைத்துக்கொண்டார். ஒரு முறை தம் உபயோகத்திற்கென்று நான்கு சட்டைகளை ஒரு பக்தர் சுவாமி பிரேமானந்த ருக்குக் குற்றேவல் செய்து வந்தவரிடம் வழங் கினார். அதைப்பற்றிக் கேள்விப்பட்ட சுவாமி, "அத்தனை உடைகளைத் தன் உபயோகத்துக் காக வைத்திருப்பவன் சந்நியாசியே அல்லன்'' என்று தம் பணியாளிடம் கடிந்துகொண்டார். அவர் தம் உடலை உகுத்த சமயத்தில் அவருக் கென்று இருந்தவை ஒரு துணிப் பையும், ஒரு பகவத் கீதையும், மற்றும் சில புத்தகங்களும், மற்றோர் ஆடையும்தான்!

ஒருமுறை தம் குரு சகோதரராகிய ஸ்ரீ விவே கானந்தர் சுவாமி பிரேமானந்தரைப் பார்த்து, "நீ கிழக்கு வங்காளத்திற்குச் சென்று மத போதனை செய்து உன் பேரன்பினால் அந்தப் பகுதி முழுவதையும் மூழ்கடிக்க வேண்டும்'' என்று உரைத்தார். இந்த வேண்டுகோளி னால் தூண்டப்பட்டவராகச் சுவாமி பிரேமா னந்தர் 1914ஆம் ஆண்டு முதல் 1916ஆம் ஆண்டு வரை வங்காளத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அதற்கு முன், அவர் காசிமாநகருக்குச் சென்று ஆங்குத் தங்கி யிருந்த சுவாமி பிரம்மானந்தரைச் சந்தித்து அவர் உடனடியாகப் பேலூர் மடத்துக்குத் திரும்புவதன் மூலம் மற்றச் சாதுக்களுக்கெல் லாம் ஆன்மீக விழிப்பை ஊட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவரோ உறுதி யாகவும் திடமாகவும், "சிவபெருமானின் இருப்பிடமாகிய இந்நகரை விட்டு நான் எவ் வாறு வருவேன்?'' என்று கூறிவிட்டார். அதற்குச் சுவாமி பிரேமானந்தர் கூறியதாவது: "மஹராஜ், நமக்கெல்லாம் சிவபெருமானாய் இருப்பவர் சுவாமிஜிதானே? அவர் பேலூர் மடத்தில் அல்லவா இருக்கிறார்?" விவேகா னந்த சுவாமிகளைக் குறித்தே அவர் இங்ஙனம் இயம்பினார்.

சுவாமி பிரம்மானந்தர் அமைதியுற்றிருந் தார். பிரேமானந்தரோ அவருடைய காலடி யில் வீழ்ந்து வணங்கினார். சுவாமி பிரம்மா னந்தர் பதட்டத்துடன், "என்ன காரியம்

செய்கிறுய், சகோதரனே, எழுந்திருப்பாயாக" என்ருர். அவரோ விடாப்பிடியாக, "நீங்கள் பேலூர் மடத்திற்கு வருவதாக உறுதி கூறி லுல்தான் எழுந்திருப்பேன்" என்று மொழிந் தார். அவருடைய பணிவும் அன்பும் சுவாமி பிரம்மானந்தரை வெற்றிகொண்டு விட்டன. தாம் பேலூர் மடத்துக்கு வருவதாக அவர் உடனே வாக்குறுதி அளித்தார். சுவாமி பிரே மானந்தர் காசிமாநகரில் தங்கியிருந்த இச் சமயத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அதைப்பற்றிச் சுவாமி பிரபவானந்தர் என்ன கூறுகிருர் என்று பார்ப்போம் :

1914ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சுவாமி பிரேமானந்தர் காசிமாநகரில் தங்கி யிருந்தபொழுது, அவர் கங்கையில் நீராடி விட்டு ஆலயத்திற்குச் சென்று ஸ்ரீ விஸ்வநாத ரையும் மாதா அன்னபூரணியையும் தரிசித்து விட்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருந் தார். ஒருமுறை நானும் அவருடன் சென்றிருந் தேன். கோயில் வழிபாடெல்லாம் முடிந்த பிறகு தலைமை அர்ச்சகர் சுவாமி பிரேமானந் தர் கழுத்தில் ஓர் அழகிய மலர்மாலையை அணிவித்தார். அந்த மாலையைக் கழற்றி என்னிடம் தருவதற்கு அவர் ஆயத்தமான பொழுது நான் கூறினேன்: 'இல்லை, ஐயா, தயவு செய்து நீங்களே அதை அணிந்திருங் கள். இப்போது நீங்கள் மிகவும் அழகுடைய வராய்த் திகழ்கிறீர்கள் !' 'அழகான' என்ற வார்த்தை அவருக்கு இறைவனின் சௌந்தர் யத்தை நினைவூட்டியதால் அவருக்கு உடனே பரவசநிலை கூடிவிட்டது. அவருடைய முகம் சிவந்து போயிற்று; அவருடைய உடல் முழு வதிலிருந்தும் அற்புதமான தேஜஸ் வெளிக் கிளம்பலாயிற்று. மெதுவாக அவர் கோவிலை விட்டுப் புறப்பட்டார்; நானும் பின் தொடர்ந்து சென்றேன். அந்தச் சந்நிதித் தெருவில் எப்போதும் போல் கூட்டம் இருந்தது. ஆனல் இரு மருங்கிலும் கூடியிருந்த மக்கள் சுவாமி பிரேமானந்தரை உற்றுப் பார்த்த வண்ணம் அவருக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்ற னர். ஒவ்வொருவரும் அவர் உடலிலின்று கிளம்பிய தேஜஸைக் கண்டனர் என்பதில் ஐயமில்லை. நாங்கள் சென்ற வழிநெடுகிலும் மக்கள் சுவாமி பிரேமானந்தரை நின்று பார்த்த பிறகுதான் அப்பால் சென்றனர். அவரோ சுற்றுப்புறச் சூழ்நிலையை முற்றிலும் மறந்தவ ராய் இறைவனைப்பற்றிய சிந்தனையில் மூழ்கிய வராகக் காணப்பட்டார். நாங்கள் மடத்தின் வாயிலை நெருங்கிய போது உள் வராண்டா விலின்று பூஜை வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த சுவாமி நிர்பரானந்தர் எங்களைப் பார்த்தார். உடனே மற்றச் சாதுக்களிடம் சுவாமி பிரேமானந்தரைச் சிறப்பாக வரவேற் பதற்கு ஆயத்தப்படுத்தும்படி கட்டளையிட் டார். அவர்களும் சங்கு, சேகண்டி, மணிச் சப் தங்களைக் கிளப்பி உற்சாகமாக எங்களை வர வேற்ருர்கள். வராண்டாவிற்குச் சென்றதும் சுவாமி பிரேமானந்தர் தாம் கழுத்தில் அணிந் திருந்த மாலையைக் கழற்றிச் சுவாமி நிர்பரானந் தரின் கழுத்தில் அணிவித்தார். உடனே அவர் ஆனந்தப் பரவசமுற்று நடனமாடத் தொடங்கி விட்டார். படிப்படியாக அந்தப் பெரு மகிழ்ச்சி குறைந்தது; தெய்விகத் தேஜஸும் மறைவதாயிற்று."

சுவாமி பிரேமானந்தரின் அமைதியான சுபாவத்திற்கும் தம்மை மறந்த நிலைக்கும் மாருக அவருக்கு அபரிமிதமான புகழ் ஏற் பட்டிருந்தது. ஆன்மீகத் தாகம் எடுத்துத் தவித்துக் கொண்டிருந்த ஜனங்கள் அவர் சென்ற இடங்களிலெல்லாம் ஆர்வத்துடன் கூட்டம் கூட்டமாக அவர் முன் சென்று அவருடைய ஆசிகளைப் பெற்றனர். பல ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சர் கூறியிருந்தார்: "ஆன்மிகப்போதனை அளிக்கத் தயாராவதற்கு முன்னல் ஒரு வன் அதற்கான அதிகாரத்தைக் கடவுளிடமி ருந்து பெற்றிருக்கவேண்டும். அப்போதுதான் அவன் போதிப்பதற்கேற்ற வல்லமையை இறைவன் அவனுக்கு அருள்கிருர். மதபோத கரின் பணியோ உண்மையில் மிகக் கடின மானது. இறைவனிடமிருந்து ஆதேசம் பெற்ரு லொழிய ஒருவர் போதிப்பது என்பது இய லாத காரியம்; மக்கள் யாரும் அவருடைய வெற்று மொழிகளுக்குச் செவி சாய்க்கமாட் டார்கள். அவற்றில் எந்தவிதமான ஆற்ற லும் இருப்பதில்லை. எந்தச் சாதனத்தை மேற் கொண்டாவது ஒருவன் ஆன்ம சாக்ஷாத்காரம்

பெறவேண்டியது அவசியம். அதன் பிறகு அவன் கடல்மடை திறந்தாற்போன்று சத்திய மொழிகளைப் பேசக்கூடும்." தம் பேச்சைக் கேட்ட மக்களிடம் சுவாமி பிரேமானந்தர் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தினர் என்று அறிந்தவர்கள் அவர் நிச்சயமாக இறைவனருள் பெற்றிருந்தார் என்பதை மறுக்க முடியாது.

பல பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சுவாமி பிரேமானந்தர் கிழக்கு வங்காளத்திலிருந்து டாக்கா நகருக்கு 1915 ஆம் ஆண்டு விஜயம் செய்தார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் உத்தமச் சீடரொருவர் தம்மிடையே இருந்தார் என்ற உணர்ச்சியால் அம்மக்களின் பேரானந்தம் அளவு கடந்ததாயிற்று. ஹிந்துக்களுடன் முஸ்லிம் பெருமக்களும் கூட உற்சாகமடைந்திருந்தனர். அவர்களில் ஒரு குழுவினர், இம்மகான் ஹிந்துக்களாகிய உங்களுக்கு மட்டும் சொந்தமானவர் என்று கருதுகிறீர்கள்? இல்லை, அவர் எங்களுக்கும் உரியவர்தான் என்று மன மகிழ்ச்சியுடன் கூறினார்கள்.

கிழக்கு வங்காளத்தில் மிகப்பரந்த அளவில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பூஜித்துக் கொண்டாடப் பெறுவதைக்கண்டு சுவாமி பிரேமானந்தர் பெரிதும் உவகையுற்றார். ஜனங்கள் கேட்டுக் கொண்டபோதெல்லாம் தயங்காமல் அவர் உபந்நியாசம் நிகழ்த்தினர். இதன் விளைவாக, அவர் கல்கத்தாவிற்குத் திரும்பியபின் காலரா நோயால் பாதிக்கப்பட்டு மிகவும் துன்புற்றார். பல நாட்களுக்கு அவர் சுய நினைவின்றிப் படுக்கையில் இருக்க நேர்ந்தது. அவர் உயிர் பிழைப்பாரா என்பதே சந்தேகமாயிருந்தது. ஒருநாள் அவர் கண் விழித்துப் பார்த்தபோது தம்மைச் சுற்றிலும் கவலை தோய்ந்த கண்களுடன் நின்றுகொண்டிருந்த பக்தர்களையும் சாதுக்களையும் பார்த்து உறுதியுடன் கூறினர்: "எதற்கும் கவலைப்படாதீர்கள்; நான் இப்போது சாகமாட்டேன்; ஏனென்றால் என் தாயார் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்."

சுவாமி பிரேமானந்தர் சிறு பையனாக இருந்தபோது அவருடைய தாய் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரிடம், "ஐயன்மீர், நான் என் மகனைத் தங்களிடம் ஒப்படைப்பதற்குப் பதிலாக நான் இறைவனிடம் மாறாத அன்புடையவளாக இருக்க அருள்புரியுங்கள். என் குழந்தைகளின் மரணம் குறித்து நான் எந்தவிதமான துயரமும் படலாகாது என்னும் வரத்தையும் தாருங்கள்" என்று மனமுருக வேண்டினர். பரமஹம்சரும் மகிழ்ச்சியுடன் அவ்வேண்டுகோளை நிறைவேற்றினர். இந்த விஷயம் அப்போது அங்கிருந்த பலருக்குத் தெரியாது. எனவே, சுவாமி பிரேமானந்தர் தாமே அதை எல்லாருக்கும் நினைவூட்டினர்.

நோயினின்று முற்றிலும் விடுபட்டபோதிலும் சுவாமி பிரேமானந்தர் மிகவும் சோர்வுற்றவராய் மெலிந்து போனர். மேலும் ஒரு பயணம் மேற்கொண்டபோது 'கால அஜார்' என்றழைக்கப்பட்ட கொடிய நோய் அவரைப் பீடித்தது. உடனே அவர் பேலூர் மடத்துக்குத் திரும்பி வரவேண்டியதாயிற்று. அவரைப் பரிசோதித்துப் பார்த்த வைத்தியர்கள் பீஹார் மாகாணத்திலிருந்த டியோகார் நகருக்கு அவர் உடனடியாக அனுப்பப்பட வேண்டும் என்று யோசனை தெரிவித்தார்கள். ஆங்கு ஒரு பக்தருடைய வீட்டில் சுவாமி பிரேமானந்தர் தங்கியிருந்தபொழுது அவ்வீட்டிற்கு வேலையாக வந்த க்ஷவரத் தொழிலாளி ஒருவன் எதையோ திருடிவிட்டதாக அகப்பட்டுக் கொண்டான். அவனைப் போலீசாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அந்த வீட்டுக்காரர் தீர்மானித்துவிட்டார். சுவாமி பிரேமானந்தர் குறுக்கிட்டு, "பசியின் கொடுமையினல் அவன் இந்த மாதிரி நடந்துகொண்டிருக்கிறான்" என்று அவனுக்கு ஆதரவாகப் பேசி ஒரு ரூபாய் பணத்தையும் தம் சொந்த அங்கவஸ்திரத்தையும் கொடுத்து அவனை ஆசீர்வதித்து அனுப்பிவைத்தார். "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு?" என்பது கோட்பாடு.

அதன்பிறகு சுமார் ஒன்றரை ஆண்டுக் காலம் சுவாமி பிரேமானந்தர் நோயின் பிடியில் சிக்கி வருந்தினர். ஓரளவு குணமாவதுபோல் தோன்றிய சமயத்தில் அவரை இன்புளுயன்சா நோய் பற்றிக்கொண்டது. மீண்டும் அவர் கல்கத்தாவுக்குக் கொண்டு செல்லப் பட்டார். வைத்தியர்களின் தீவிரமான

சிகிச்சையும் பலனளிக்கவில்லை. 1918ஆம் ஆண்டு ஜூலை 30ஆம் நாள் தம் உடலை உகுத்து விட்டு மஹா சமாதியடைந்தார் சுவாமி பிரேமானந்தர்.

ஒருமுறை தம் பக்தர் ஒருவருக்கு, "உங்கள் இதயத்தில் யாண்டும் இறைவன் வீற்றிருக்கட்டும்; நீங்கள் அவன் கையில் ஒரு கருவியாக இருந்து அமைதியுடன் செயலாற்றுங்கள்" என்று எழுதியிருந்தார். தம் கூற்றுக்கு விளக்கமாகச் சுவாமி பிரேமானந்தர் வாழ்ந்து காட்டினர். அவருடைய இறுதி நாட்களிலும் முற்றிலும் தன்னலமற்ற பாங்கும் எல்லா உயிர்களிடம் இறைவனின் சான்னித்தியத்தை உணர்ந்து அன்பு செலுத்தும் இயல்பும் அவரை விட்டு நீங்கியிருக்கவில்லை. உடலைத் துறக்கப்போகும் சமயத்தில் அவர் ஒரு சாதுவைத் தம் அருகில் அழைத்து, "நீ எனக்காக ஒரு காரியம் செய்வாயா?" என்று கேட்டார். "எதையும் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்று அவர் பதில் கூறினர். "சாதுக்களுக்கும் பக்தர்களுக்கும் சேவை செய்வதை ஒருநாளும் மறந்துவிடாதே" என்று வற்புறுத்திக் கூறினர் சுவாமி பிரேமானந்தர். அந்தச் சந்நியாசியும் தலையை அசைத்துத் தம் சம்மதத்தைத் தெரிவித்தார்.

பிரம்மச்சாரியாயிருந்த காலத்தில் சுவாமி பிரேமானந்தருடன் மிகவும் இணக்கம் பூண்டிருந்த மடத்தைச் சேர்ந்த சந்நியாசி ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்: "காசிமாநகரில் உள்ள ஸ்ரீ விஸ்வநாதர் ஆலயத்தின் சலவைக்கல் தரையானது எப்போதும் ஈரமாயிருக்கும். நான் சுவாமி பிரேமானந்தருடன் அங்குச் சென்றிருந்தபொழுது அவருக்குப் பின்னல் நின்றுகொண்டு அவர் காலடி படிந்த இடத்தைத் தொட்டு என் இதயத்தில் ஒற்றிக்கொண்டேன். இறைவனுடைய தரிசனம் உங்களுக்குக் கிடைக்கும் பெரும் பாக்கியம் ஏற்பட்டால்தான் நீங்கள் கடவுளின் குழந்தையாக விளங்கிய சுவாமி பிரேமானந்தரைப் போன்ற மகான்களின் முன்னிலையில் இருந்தால் எத்தகைய பேரானந்தம் கிட்டும் என்பதைச் சரியாக உணர்ந்துகொள்வீர்கள்!"

சுவாமி பிரேமானந்தர் யாருக்கும் தீக்ஷை கொடுக்கவில்லை ஆயினும், கடிதங்களின் மூலமாகப் பலருக்கு ஆன்ம போதனை செய்திருக்கிறார். யாரெல்லாம் தம்மிடம் கேட்டுக்கொண்டார்களோ அவர்களுக்கெல்லாம் ஊக்கமும், நல்லறிவும் தரக்கூடிய அன்பு கனிந்த வார்த்தைகளை எழுதி அனுப்புவார் சுவாமி பிரேமானந்தர். அவருடைய வார்த்தைகள் யாண்டும் பக்தர்களிடம் ஆன்ம போதத்தை வளர்த்து வாழ்வின் கடைசி இலட்சியமாகிய இறைவனைச் சாக்ஷாத்கரித்தல் என்பதை நோக்கி உந்தித் தள்ளுவனவாகவே இருந்தன. அவர் 1902ஆம் ஆண்டு முதல் தம் எழுத்துப் பணியை இடைவிடாமல் நிறைவேற்றி வந்தார். தாம் மஹா சமாதியடைந்த 1918 ஆம் ஆண்டுவரை பதினேழு ஆண்டுக்காலம் இவ்வாறு சீரிய முறையில் மக்களிடையே ஆன்மீக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வந்தார். இதில் அவர் சலிப்படைந்ததே இல்லை.

ஸ்ரீ சுரேந்திரருக்குத் தாம் எழுதிய ஒரு கடிதத்தில் சுவாமி பிரேமானந்தர் கூறுகிறார்: "யார்தான் புனித அன்னையைப் பற்றி முழுமையாக அறிந்துகொண்டுள்ளனர்? முற்காலத்தில் சீதை, சாவித்திரி, ஸ்ரீமதி ராதா போன்றோர் மிகப் புனிதம் வாய்ந்த வாழ்க்கை நடத்தினர்கள். தற்காலத்திலோ அன்னை சாரதாதேவியார் தம் வாழ்வின் மூலம் அவர்களுடைய மகிமைகளையெல்லாம் மங்கிப்போகும்படி செய்திருக்கிறார். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு நிகரான மேன்மைகளைப் பெற்றிருந்தும் எல்லாவற்றையும் தமக்குள் மறைத்து வைத்துக்கொண்டு தம் ஒப்பற்ற தாயன்பை மட்டும் அபரிமிதமாக அவர் வெளிப்படுத்தினர். ஸ்ரீராமகிருஷ்ணர் தம் சிஷ்யர்களைப் பொறுக்கியெடுத்துத் தம்முடன் சேர்த்துக்கொண்டார். புனித அன்னையாரோ கடையனுக்கும் கதி மோட்சம் தருபவராய், கருணாமூர்த்தியாய் இலங்கினர். அவரிடம் எல்லாரும் பேதமின்றி ஒரு பாதுகாப்பு உணர்வை அடைந்து சாந்தி பெற்றார்கள். நமக்கெல்லாம் முன்மாதிரியாக அன்னை சாரதா தேவியாரின் வாழ்க்கை அமைந்துள்ளது. அன்னையாரின் தகுதி வாய்ந்த பிள்ளைகளாக நாம் நம்மை மாற்றியமைத்துக் கொள்வதுதான் நாம் செய்ய வேண்டிய இன்றியமையாத கடமையாம்."

(தொடரும்)

இந்து மதத்தின் எல்லைக் கோடுகள்

(சுவாமி விவேகானந்தருடன் சகோதரி நிவேதிதை நிகழ்த்திய உரையாடல்—சகோதரி தங்கம் மொழிபெயர்த்தது.)

'பிரபுத்த பாரதம்' பத்திரிகையின் ஆசிரியர் எனக்கு ஒரு முக்கியமான வேலையைக் கொடுத்தார். நம் இந்து மதத்தில் விருப்பமுள்ள பிற மதத்தவரை நம் மதத்தில் சேர்த்துக்கொள்வது பற்றியும், பிற மதத்திற்கு மாறிய இந்துக்களைத் திரும்பச் சேர்த்துக்கொள்வது குறித்தும் சுவாமிஜியைப் பேட்டி காண வேண்டும் என்பதே அவர் வேண்டுகோள். அதற்கிணங்க, நானும் சுவாமிஜியைச் சந்தித்து இது பற்றிப் பேசப் பேலூர் சென்றேன். இருள் கவிய ஆரம்பித்திருந்த மாலை நேரம்; கங்கையில் படகில் சென்று பேலூரை அடைந்தேன். சுவாமிஜி பேட்டி கொடுப்பதற்காகத் தம் அறையிலிருந்து இறங்கிக் கீழே வந்தார்.

பெரிய விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கு நேரமும் இடமும் ஒத்தவையாய் இருந்தன. மேலே நட்சத்திரங்கள் தெளிக்கப்பெற்ற ஆகாயம்; சுற்றிலும் சலசலவென்று ஓடிக் கொண்டிருந்த கங்கை; ஒரு பக்கம் மங்கலான விளக்குகளால் ஒளியூட்டப்பட்ட ஆச்ரமக் கட்டடங்கள்; . அவற்றிற்குப் பின்னே உயரமான நிழல்தரும் மரங்களும் மற்றும் பனைமரங்களும் அடங்கிய இனிய சூழலில் சுவாமிஜியுடன் என் பேட்டியைத் தொடங்கினேன்.

"சுவாமிஜி, இந்துக்களாய் முதலில் இருந்து பின் பிற மதங்களுக்கு மாற்றப்பட்டவர்களைத் திரும்பவும் இந்துமதத்தில் சேர்த்துக்கொள்ளலாமா! இதுபற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?"

"நன்றாகச் சேர்த்துக்கொள்ளலாம். சேர்த்துக்கொண்டாக வேண்டும். அதுதான் முறை." இப்படிச் சொல்லி விட்டுச் சுவாமிஜி சிந்தனை வயப்பட்டவராய்ச் சிறிது நேரம் அமைதியாய் இருந்தார். பின்னர் தொடர்ந்து சொன்னார்:—

"தவிரவும், அப்படி அவர்களை நாம் சேர்த்துக்கொள்ளாவிட்டால் இந்துக்கள் எண்ணிக்கையில் குறைந்து விடுவார்கள்." முகம்மதியர்கள் இந்தியாவிற்கு வந்த சமயத்தில் இந்துக்கள் அறுபது கோடியாக இருந்திருக்கிறார்கள். ஃபெரிஷ்டா என்ற வரலாற்று ஆசிரியர் இந்தப் புள்ளி விவரத்தைத் தருகிறார். இப்போது (அதாவது 1899ஆம் ஆண்டு, பேட்டி கொடுத்த வருடம்) நாம் இருபது கோடிதான் இருக்கிறோம்.

"எண்ணிக்கை குறைவது மட்டுமன்று; இந்துமதத்தை விட்டுச் செல்லும் ஒவ்வொரு மனிதனும் இந்துக்களின் எண்ணிக்கையை குறைப்பது மட்டுமன்றி; இந்துமதத்தின் எதிரிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துபவனும் ஆகிறான்."

"ஆனால் கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களுக்கு மாற்றப்படும் இந்துக்களில் பெரும்பாலானோர் ஆட்சியிலிருப்பவர்களின்வாளுக்கு, அதிகாரத்திற்கு அஞ்சி மதம் மாறியவர்களே; அல்லது அவ்வாறு பயத்தால் மதம் மாறியவர்களின் வாரிசுகளாகத்தான் இருப்பார்கள். எனவே, பிற மதத்திற்குப் போய் விட்டார்கள் என்பதற்காக இவர்களை நாம் எந்த விதக் கஷ்டத்திற்கும் ஆளாக்கக் கூடாது.

"வேறு மதத்தில் பிறந்தவர்கள் விஷயத்தை எடுத்துக் கொண்டால், அப்படிப்பட்டவர்கள் பழங்காலத்திலேயே இந்து மதத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இன்றும் அது நிகழ்ந்துதான் வருகிறது. பழங்குடி மக்கள், பாரத தேசத்தின் எல்லைப் புறத்திலுள்ள அண்டை நாட்டு மக்கள், முகமதியர்க்கும் முன்பு இந்தியாவில் படையெடுத்து வந்தவர்கள்—இவர்களெல்லாரும் இந்துமதத்திற்கு மாறியிருக்கிறார்கள். அது மட்டுமன்று. நம் புராணங்களில் முதன் முதலாகக் குறிப்பிடப் பட்டுள்ள சில ஜாதிகளும் கூட இவ்வாறு இந்துமதத்திற்கு மாறி வந்த பிற மதத்தவர்கள் என்றே நான் கருதுகிறேன்.

"தாய் மதமாகிய இந்து மதத்தை வேண்டுமென்றே விட்டுச் சென்றவர்கள் திரும்பிவரும் பட்சத்தில் அவர்கள் விருப்பப்படி பிராயச்சித்தச் சடங்குகள் நடத்திக் கொள்ளலாம். ஆனால் கட்டாயத்தின் பேரில் இந்து மதத்தை விட நேர்ந்தவர்களுக்கோ—காஷ்மீரத்திலும் நேபாளத்திலும் உள்ள முஸ்லிம்களின் நிலை இதுதான்-அல்லது வேறு மதத்தில் பிறந்து

இந்து மதத்திற்கு வரவிரும்புபவர்களுக்கோ பிராயச்சித்தச் சடங்குகள் அவசியமில்லை. அவர்களை அத்தகைய சடங்குகளைச் செய்தாகவேண்டும் என்று கட்டாயப் படுத்தக் கூடாது.''

இவ்வாறு இந்து மதத்திற்கு வருபவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாய் இருப்பார்கள் சுவாமிஜி? ஏனென்றால் இந்து சமுதாயத்தின் ஓர் அங்கத்தினராய் இருக்கவேண்டும் என்றால் அவர்கள் ஏதாவது ஒரு ஜாதியைச் சேர்ந்தவராய் இருக்கவேண்டும்.

''முன்பு இந்துக்களாய் இருந்தவர்கள் பிறப்பால் எந்த ஜாதியைச் சேர்ந்திருந்தார்களோ அதே ஜாதியைத் திரும்பப் பெறுவார்கள். இந்துமதத்திற்கு வரும் புதியவர்கள் தாமே ஒரு புதிய ஜாதியை அமைப்பார்கள். இந்து மதத்தின் உட்பிரிவான வைஷ்ணவத்திற்கு மாறியவர்கள் எல்லாரும் அப்படித் தங்களுக்குள் ஒரு ஜாதியை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் சமுதாயத்தில் மதிப்பு இருந்திருக்கிறது. பிற மதத்தவரை வைஷ்ணவர்களாக்கிய ராமானுஜரிலிருந்து கிருஷ்ணசைதன்யர்வரை எல்லா வைஷ்ணவ ஆச்சாரியர்களும் அப்படித்தான் செய்திருக்கிறார்கள்.''

''இந்தப் புதிய இந்துக்கள் யாரை மணம் செய்து கொள்வார்கள், சுவாமிஜி?''

''ஏற்கனவே செய்து வந்தது போல அவர்களுக்குள்ளேதான் விவாகச் சம்பந்தங்கள் எல்லாம் வைத்துக் கொள்வார்கள்.''

"இவர்களுக்கு என்ன பெயர்கள் கொடுப்பது, சுவாமிஜி?"

இந்து பெயர்கள்தான் கொடுக்கவேண்டும். பெயர் கொடுப்பதில் பொருள் மிகப் புதைந்திருக்கிறது."

என்னுடைய அடுத்த கேள்வி, இதுவரை அமைதியாகப் பதிலளித்து வந்த சுவாமிஜியை ஆவேசத்தோடு பேச வைத்தது.

''சுவாமிஜி, இப்படிப் புதிதாக வருபவர்களுக்கு எந்த வழிபாட்டு முறையைப் போதிப்பது? பல கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் வழிபாட்டு மு[illegible]றைகளையும் தன்னுள் அடக்கியிருக்கும் பரந்த சனாதன தர்மத்திலிருந்தும் தமக்கு உகந்தவற்றை அவர்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாமா? அல்லது இந்த வழிபாட்டுமுறையைத் தான் நீங்கள் பின்பற்ற வேண்டும் என்று வரையறுத்துக் கொடுக்க வேண்டுமா?''

"என்ன நீ இப்படிக் கேட்டுவிட்டாய்? அவர்களுக்கு விருப்பமானதை அவர்களே தான் தேர்ந்தெடுத்துக்கொள்வார்கள். நாம் அவர்கள் மீது எதையும் திணிக்கக்கூடாது. நம் இந்து மதத்தின் உயிர் நாடியே அவரவர்க்கு விருப்பமான இஷ்ட தெய்வத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் சுதந்திரத்தில்தான் — அத்தகைய சுதந்திரத்தைப் பிறருக்கு அளிப்பதில் தான் — இருக்கிறது. தன் இஷ்ட தெய்வத்தைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையை ஓர் இந்துவுக்கு மறுப்பது இந்து மதத்தின் இயல்பையே (The Spirit of Hinduism) அழிப்பதாகிவிடும்."

சுவாமிஜி இப்படிச் சொன்னதும் அவருடைய வார்த்தைகள் கருத்துச் செறிவு மிக்கவை என்பதை உணர்ந்தேன். இஷ்ட நிஷ்டை என்பது உண்மையில் இந்தப் பெரிய உலகம் முழுவதையும் வரவேற்றுத் தன்னிடத்தே இருத்தி வாழ்வளிக்கக் கூடிய பரந்த கொள்கை என்பதில் சந்தேகமில்லை. இதைச் சுட்டிக்காட்டியவர் யார்? இந்து தர்மத்தின் அடிப்படைகளை யுக்தி பூர்வமாகவும் அனுதாபத்துடனும் ஆராய்ந்து அறிந்தவர் அல்லவா? இப்போது உயிர் வாழ்ந்திருப்பவர்களில் வேறு யார் இவ்வளவு தெளிவாக இந்து மதத்தின் சிறப்பைப் பல ஆண்டுத் தவத்தாலும், ஆராய்ச்சியாலும், தீர்க்க தரிசனத்தோடு அறிந்து சொல்லியிருக்கிறார்கள்? செய்தியின் உயர்வும் செய்தி சொன்னவரின் மாண்பும் என் உள்ளத்தில் ஆழப்பதிந்தன.

பின்னர் பேச்சு வேறு விஷயங்களைப் பற்றித் திரும்பியது. சிறிது நேரத்துக்குப் பின் சுவாமிஜி அன்போடு விடை கொடுத்தனுப்பினார். அந்தப் பரமாச்சாரியார் ஆச்ரமத்தில் தம் அறைக்குத் திரும்புவதைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு நானும் கிளம்பினேன்; கங்கைநதியில் மிதந்து கொண்டிருந்த சிறியதும் பெரியதுமான பலவிதப் படகுகளுக்கு நடுவில் புகுந்து வழியைக்கண்டு கொண்டு என் கல்கத்தா இல்லத்திற்கு வந்து சேர்ந்தேன்.

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

பரிக்ஷித்து மன்னன் சிருங்கியின் பேரில் பிரதிசாபம் ஒன்றை இடுவானாகில் இப்பாபம் தீர்ந்துவிடும். ஆனால் அங்ஙனம் நிகழப்போவ தில்லை. ஏனென்றால் அவ்வரசனே மிக்க நல்ல அருங்குணங்கள் வாய்ந்தவன். அவன் மிகப் பெரியப் பக்தன். பக்தர்கள் தங்களால் செய்ய முடியுமெனினும் வஞ்சம் தீர்ப்பதில்லை. தங்க ளுக்குச் செய்யப்பட்ட எந்தத் துன்பத்தையும், பொறுத்துக் கொண்டு விடுவார்கள்.

இங்ஙனம் உயர்ந்த முனிவராகிய சாமிகா தன் மகன் அவசர கோலத்தில் செய்த பாபச் செயலுக்காக மிகவும் வருந்தினர். தன்னை அரசன் அவமதித்து விட்டான், கீழ்மைப் படுத்தி விட்டான் என்கிற எண்ணமே அவருக்கு வரவில்லை. அரசன்மீது கோபமோ தீய எண்ணமோ அவர் உள்ளத்தில் எழ வில்லை. உயர்ந்த சாதுக்களின் லக்ஷணம் அது. அவர்கள் இன்பம் நேரும் இடத்து மகிழ்வ தில்லை; துன்பம் நேருமிடத்து வருந்துவது மில்லை. ஏனென்றால் இவ்வுலக வாழ்வின் லக்ஷணம் அவர்களுக்குத் தெரியும். இவைகள் எல்லாம் வெறும் மனோ விகாரங்கள், கனவு போன்றவை என்பது அவர்களுக்குத் தெரியும்.

அத்தியாயம் 19.

சூதர் சொன்னார் :—பெரியோர்களே! அரண் மனைக்குப் போனதும் தன் செயலைக் குறித்துப் பரீக்ஷித்து மிகவும் வருந்தினான். தன் செயலில் உள்ள பிழை அப்பொழுதுதான் அவனுக்குப் பட்டது. தன்னையே நொந்து கொண்டான். கவலை மிகக்கொண்டான். அவன் இங்ஙனம் சிந்திக்கலானான் : ஆ! நான் எவ்வளவு மோச மானவன். ஒரு நல்ல உத்தம சாதுவை இழிவு படுத்தி விட்டேனே. என் குலத்துக்கு, ராஜ தர்மத்துக்கு, எவ்வளவு பெரிய இழுக்காக நான் அமைந்து விட்டேன். அப்பொழுது முனி வரின் பெருநிலையை உணராது போனேனே! பக்தர்களும் கடவுளும் ஒன்று. பரத்தை உணர்ந்த பெரியோர்கள் பரம்பொருளே ஆவர். அந்த உத்தம ரிஷியை நான் அவ மதித்ததன் மூலம் பரம்பொருளையே அவமதித் தவன் ஆகிறேன். இந்தப் பெருங்கேட்டைச் செய்த எனக்கு ஏதாவது பெரிய தீமை விரை வில் நிகழும். ஆண்டவனே உன்னை முழு மன தோடு பிரார்த்திக்கிறேன். அந்தப் பெருங் கேடு என்னை மட்டும் பீடிப்பதாகுக! என் பரம்பரையினர் யாரையும் சாராது இருக்க நீ பேரருள் புரி. இந்தத் தண்டனையை நான் முழு மனதோடு, மகிழ்வோடு ஏற்கிறேன். இதன் மூலம் என் பாபம் தீரும், இனி தீய செயல் எதிலும் நான் பிரவேசிக்க மாட்டேன், செய்ய மாட்டேன். ஆண்டவனே! என் பிழைக்காக இந்த ராஜ்யத்தின் ஜனங்களையும் சௌபாக்கி யத்தையும் அழித்து விடாதே. எனக்கு நல்லறிவு வந்தது. இனி, நான் என்றும் அந்தணர், வானவர், ஆனினம் இவைகளின் பால் என்றும் நல்ல பாவத்துடன் மரியாதை யுடன் வணக்கத்துடன் நடந்து கொள்வேன்.

பரீக்ஷித்து இங்ஙனம் சிந்தித்துக்கொண்டி ருந்த பொழுது சாமிகா முனிவரின் சீடன் ஒரு வன் வந்து "அரசே! எனது குருநாதர் இச்செய் தியைத் தங்களுக்குத் தெரிவிக்கப் பணித்தார் கள் அவருக்குத் தெரியாமலும் சம்மதமில்லாம லும் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்று விட்டன அவரது குமாரன் சிருங்கி சபித்துள்ளபடி நீர் இன்றிலிருந்து ஏழாவது நாள் தக்ஷகன் என் னும் பாம்பு தீண்டி மரணமடைவீர்" என்று தெரிவித்தான்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் பரீக்ஷித்து மிகவும் மகிழ்ந்தான். அவன் பிரார்த்தித்துக் கொண்டபடி தண்டனை தனக்கு மட்டும் அமைந்தது. "இது நாள் வரை இவ்வுலக இன்பங்களை அனுபவித்தேன். இனி நான் அவைகளினின்று முற்றிலும் விடுபடுவேன். கடவுளை ஸ்ரீ ஹரியையே தியானிப்பேன்" என்று முடிவு கட்டினான். இந்த அரிய சந் தர்ப்பத்தை வாய்ப்பை விரைவில் உண்டு பண்ணித்தந்த அந்தச் சாபத்தை மனமார ஏற்றுக்கொண்டான். உடனே அவன் மர ணத்தை ஏற்க, மரணத்தறுவாயில் மனதை ஸ்ரீ ஹரியின் ஸ்மரணையில் நிலைத்திருக்கச் செய்ய ஆயத்தமானான். மரணத்தறுவாயில் கடவுளின் நினைப்பு ஒன்றே உயர்வற உயர்

நலம் விளைவிக்கும். உபவாசமிருந்து, கங்கைக் கரையில் ஸ்ரீ கிருஷ்ண ஸ்மரணையில் இருந்து மரணத்தை ஏற்கக் கங்கைக்குப் போனான்.

மரணமடையப் போகும் நாளும், விதமும் தெளிவாகத் தெரிந்த பிறகு யார்தான் சும்மா இருக்க முடியும்! நல்லோர் அதை நல்ல முறையில் ஏற்கின்றனர். புனித கங்கையின் கரையில் உயிர் நீத்தல், கங்கையில் அஸ்தி கரைத்தல் ஜீவனுக்கு மிக உயர்ந்த நலம் விளைவிக்கும். கங்கை நதி ஸ்ரீ ஹரியின் பாதங் களிலிருந்து பெருகி வருகிறது. அதன் நீர் முழுவதும் ஆண்டவன் பூஜையில் உபயோ கிக்கப்பட்ட தீர்த்தத்துக்கு நிகர். துளசி தளம் இட்டு அதை உபயோகிக்கிறோம். பூஜை தீர்த்தம் மிகப் புனிதமானது. அது ஜன்ம சாபல்யம் செய்யவல்லது. அத்தகைய நதி யைப் புனிதமானது எனக் கருதாது, போற் றாது எப்படி இருக்கமுடியும். தர்மபுத்திரனின் வழிவந்த அவ்வுத்தமன் இங்ஙனம் நல்ல தீர் மானம் பண்ணி கங்கைக்கரைக்கு வந்து சேர்ந் தான். ஆங்கு உபவாசமிருந்து தியானத்தில் ஈடுபட்டான். உலகப்பற்று இல்லாததால், மரணபயம் இல்லாததால், ஸ்ரீ கிருஷ்ண விடத்துப் பேரன்பு, பக்தி இருந்ததால் அவ னது தியானம் ஆழ்ந்ததாகவும் இடையீடு இல்லாததாகவும் இருந்தது. இங்ஙனம் வாழ் வின் இறுதியில் அவன் உள்ளும் புறமும் பற் றற்று உத்தமமான துறவி போன்று வாழ்ந் தான்.

அப்போது இவ்வுத்தம அரசனைப்பார்த்து ஆசீர்வதித்துச் செல்ல மிக உயர்ந்த ரிஷிகள் அங்கு வந்தார்கள். அத்திரி, வசிஷ்டர், சியவ னர், அரிஷ்டநேமி, பிருகு, பராசரர், விஸ்வா மித்திரர், பரசுராமர், பரத்வாஜர், கௌதமர், பிப்பலாதர், மைத்ரேயர், துவைபாயனர், தேவ ரிஷி நாரதர், அருணர் ஆகிய ராஜரிஷி, தேவ ரிஷி, மகரிஷிகள் கூட்டம் ஆங்குத் திரண்டது. அவரவர் சிஷ்யக் கூட்டங்களும் சேர்ந்து அது மிகப் பெரிய சத்சபை, பக்த திருக்கூட்டம் ஆயிற்று. சான்றோர் தாங்கள் புனித யாத் திரை போகிறதாகச் சொல்லிக்கொள்வார் கள். ஆனால் அந்த இடம்தான் மேலும் தெய் விகத்தில் வளர்கிறது, க்ஷேத்திரம் ஆகி றது. இந்தத் தெய்விகத் திருக்கூட்டத்தைப் பார்த்துப் பரீக்ஷித்துக்குப் பேரானந்தம் உண் டாயிற்று. ஒவ்வொரு ரிஷியும் தானே சாக்ஷாத் காரம் பெற்ற பெரியவர்கள். அவரவர் மிக உயரிய முன்னோர்களை உடையவர்கள். கோத் திரம்—குலப்பெருமை நிறைந்தவர்கள். அவர் களை அன்புடன் வரவேற்று முறைப்படி வணங்கினான். அவர்களுக்கு உணவு வழங்கி, சிரமபரிஹாரம் செய்வித்தான். பிறகு முனி வர்கள் யாவரும் தத்தமக்கு உரிய ஆசனங் களில் அமர்ந்தார்கள். அவர்களுக்கு முன்பு உரிய மரியாதை செலுத்திவிட்டுப் பரீக்ஷித்துத் அமர்ந்துகொண்டான். கைகூப்பிக்கொண்டு தான் மேற்கொண்டுள்ள விரதம்பற்றி மிகவும் அமைதியாகவும், சந்தோஷமாகவும் சொன் னான். அவன் மனது மிகவும் மேலான நிலை யில் இருந்தது. தான் மாறாத, இடையீடில் லாத கிருஷ்ண ஸ்மரணையில் உயிர் துறக்க அவர்களின் ஆசியை வேண்டினான். முனிவர் கள் யாவரும் அரசனின் செயல்கள் யாவற்றை யும் அங்கீகரித்து மனப் பூர்வமான அன்போடு ஆசி வழங்கினார்கள். அவர்களால் அவ்வுத் தமனிடம் அன்பு பாராட்டாமல் எங்ஙனம் இருக்கமுடியும்? பரிக்ஷித்து அத்திருக்கூட் டத்தை நோக்கி இங்ஙனம் சொன்னான்:- "உங் கள் அனைவரின் ஆசியினால் நான் இன்று தன் யனானேன். கிருதார்த்தனானேன். தெய்வா தீனமாக நான் செய்து விட்ட பாபத்தை மன் னித் தருளினீர்கள். அரசனாயினும் சரி யாரா யினும் சரி குற்றம் பொறுக்காத நீங்கள் என் மீது கிருபை கூர்ந்தது எனது பாக்கியம். என் உலகப் பற்றுக்களையும் மோஹத்தையும் களைந்து எறியவே என் பிரபு இங்ஙனம் திருவிளையாடல் புரிந்துள்ளான். உலக விஷயங்களிலேயே இதுநாள்வரை உழன்று வந்த என்னை சாபம் போன்று தென்படுகிற இந்த அருட்செயலால் என் பிரபு என்னை ஆட்கொண்டுள்ளான், தன்னிடம் கவர்ந் துள்ளான். நான் ஆத்மீக வாழ்வில் பிரவேசித் துள்ளேன். பிராம்மண சாபம் என் உலகப்பற்றுக்களை எரித்துச் சாம்பலாக்கிவிட் டது. ஓ பரமகிருபா நிதிகளாகிய முனிவர் களே! ஓ கங்கா மாதா! இனிமேல் நான் என் பிரபுவின் திருவடிகளிலேயே மனம் லயித் திருக்கும் வண்ணம் ஆசி புரியுங்கள், துணை

புரியுங்கள். நீங்கள் யாவரும் சேர்ந்து ஆண்டவனின் திருப்புகழ் பாடுவீர்களாக, தேவாரம் பாடுவீர்களாக, திருமந்திரம் ஓது வீர்களாக. சிருங்கியின் சாபப்படியே தக்ஷகன் என்னைத் தீண்டட்டும். அதை மனப் பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன். அந்தச் சமயம், பயம் ஏதுமின்றி, இந்த நிகழ்ச்சியே என்மனதில் படாத அளவு கிருஷ்ண ஸ்மரணை யில் மனது திளைத்திருக்குமாறு அருள் புரியுங் கள். என் பக்தி மேலும் மேலும் வளரும் வண்ணம் ஆசீர்வதியுங்கள். வரப்போகும் ஜன்மங்களிலும் என்றும் குன்றாத மாறாத கிருஷ்ண பக்தியும், என்றும் சாதுக்களின் சங்கமும் அவர்களின் ஆசியும் எனக்கு வாய்க்குமாறு கிருபை செய்யுங்கள். ஆசிபுரி யுங்கள்" என்று பிரார்த்தித்தான்.

மனத் தடுமாற்றம் ஏதுமற்ற, இன்பதுன்பங் களில் சம நிலையில் இருக்கும் அவ்வுத்தமன் தன் ராஜ்யப் பொறுப்புக்களைத் தன் மகன் ஜனமேஜயனிடம் ஒப்படைத்தான். தன் ராஜ்ய, உலகக் கடமையையும் இங்ஙனம் நன்கு நிறைவேற்றி வைத்துவிட்டான். மிகவும் திட வைராக்கியம் கொண்ட அவ்வரசன் கங்கை யின் தென் கரையில், வடக்கு நோக்கிக் குச ஆசனத்தில் மிக்க அமைதியுடன் உட்கார்ந்து கொண்டான். இந்த உத்தமமான அரசனின் நிஜமான வைராக்கியம், பற்றற்ற தன்மை, உண்மையான கிருஷ்ண பக்தி, உயர்ந்த தியாகம் இவைகளைப் பார்த்து மகிழ்ந்து தேவர்கள் பரீக்ஷித்தின் மேல் தேவலோகப் புஷ்பங்களை வர்ஷித்தார்கள், தேவ கீதம் இசைத்தார்கள். ஆங்குக் கூடியிருந்த முனிவர் கள் எப்போதும் உலக நன்மையிலேயே கருத் துள்ளவர்கள், அதை லக்ஷியமாகக் கொண்ட வர்கள், தங்களுக்கென்று செயல் ஏதும் இல்லாதவர்கள், எப்போதும் என்றும் கடவுள் புகழ் பாடுபவர்கள். இவ்வரசனின் உயர்ந்த தெய்வ சம்பத்தைப் பார்த்துப் பரவசமடைந் தார்கள். பூரித்த மனதுடன் அவர்கள் அரசனைப் பார்த்து இங்ஙனம் மொழிந்தார் கள்: "ஓ தலைசிறந்த ராஜ ரிஷியே, சிரமமின்றி மிகச் சிறந்த தியாகத்தைச் செய்துள்ளாய். சிரித்த முகத்துடன் மரணத்தை ஏற்றுக் கொண்டாய். அதற்கு ஆயத்தமாய் இருக் கிறாய். தெய்வீகத்தில் உன் மனது உயர்ந்து கொண்டே போகிறது. உன் செயல்கள் யாவும் எங்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்க வில்லை. ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் மிகவும் பக்தி கொண்ட பாண்டவர்களின் வம்சத்தைச் சேர்ந் தவன் நீ. அவர்களைப் பின்பற்றி வந்தவன் நீ. பாண்டவர்கள் இவ்வுலகில் வாழ்ந்தபோது என்றுமே ஸ்ரீ கிருஷ்ணனோடு வாழ்ந்தவர்கள், என்றுமே அவனுடன் வாழ விரும்பினார்கள். பகவான் பூலோக லீலையை முடித்து வைகுண் டம் ஏகியதும் என்றென்றும் அவனுடனேயே வாழவிரும்பிய பாண்டவர்களும் உடனே உலகைத் துறந்துவிட்டுத் தாங்களாகவே கிருஷ்ணனை நோக்கிப் புறப்பட்டுவிட்டார்கள். அவர்களுடைய துறவு, தியாகம், பக்தி எவ் வளவு இயல்பாகவும், உயர்வாகவும் இருந் ததோ அதே அளவையில் உனது இறுதிக் காலமும் அமைந்துள்ளது. இங்குக் கூடியுள்ள ஓ முனிவர்களே, இவ்வுத்தம ராஜ ரிஷி தன் சரீரத்தைத் துறந்துவிட்டுக் கிருஷ்ணனுடன் ஐக்கியமடையும்வரை நாம் அனைவரும் இவ் வரசனுடனேயே இருப்போமாக! மாயை, மோஹம், பாசம் இவைகளை எவ்வளவு எளி தில் துடைத்துவிட்டான், கடந்துவிட்டான் பாருங்கள். வாழ்நாள் எல்லாம் சீலமாக வாழ்ந்து பக்தி செய்து வந்ததின் விளைவு இங்ஙனம் வாழ்வின் சிகரம்போல் அமைந்துள் ளது. அவனுக்கு ஸ்ரீ கிருஷ்ணன் என்றென் றும் அருள் பாலிக்கட்டும்."

முனிவர்களின் அருள் மொழிகளைக் கேட்ட அரசன் அவர்களைப் பக்தியுடன் வணங்கினான். முனிவர்களின் அமிர்தவசனம் உண்மையா னது, பொருத்தமானது. ஸ்ரீ கிருஷ்ண கர்ணா மிர்தத்தைக் கேட்க விருப்பம் கொண்டவனாகி அரசன் முனிவர்களை நோக்கி இங்ஙனம் பகர்ந்தான். ஓ முனிவர்களே! வேதங்களே! உங்கள் யாவரின் வடிவில் இங்கு எழுந்தருளி யுள்ளன. மெய்ப்பொருளின் பல்வேறு தோற் றங்களாக நீங்கள் யாவரும் உள்ளீர்கள். பரந்த இவ்வுலகில் பல்வேறு இடங்களில் தவத்தில் ஈடுபட்டிருந்த நீங்கள் என்னை ஆசீர் வதிக்க அல்லவோ இங்குத் திரண்டிருக்கிறீர் கள். உங்கள் செயல்கள் யாவும் முடிவில் என்றும் உலகநன்மைக்காகவே அமையவேண்

டும் என்கிற விரதம் கொண்டிருப்பவர்கள் நீங்கள். உங்கள் செயல், ஜீவிதம் உங்களுக்காகவே அல்ல. அது பரநலமே வடிவெடுத்தது. அந்தணர்களே மானுடர் தங்கள் ஜீவிதத்தில் நெடுகக் கடைப்பிடிக்கவேண்டியபுனித செயல்கள் யாவை? மனிதனது கடமை என்ன? குறிப்பாக மரணத்தறுவாயில் உள்ள மானுடன் செய்யவேண்டிய செயல் யாது?

மரணத்தறுவாயில் மானுடன் ஒருவன் தானம் செய்ய வேண்டும் என்று ஒரு முனிவர் சொன்னார். மற்றொரு முனிவர் தபஸ், தியானம் செய்ய வேண்டும் என்றார். வேள்வி செய்யலாம் என்று ஒரு ரிஷி சொன்னார். இங்ஙனம் ராஜயோகம், ஈஸ்வர பூஜை செய்யலாம் என்பதாக பல்வேறு அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டன. ஒரு முடிவுகட்ட முடியாமல் யாவரும் குழம்பிக்கொண்டிருந்தனர். அந்தச் சமயம்தான் தன்போக்கில் சஞ்சரித்துக் கொண்டிருந்த வியாசரின் குமாரன் சுகதேவர் அங்கு வந்து சேர்ந்தார். அவர் மேனியில் ஆடை ஏதும் இல்லை. அவர் ஆச்ரமங்களையெல்லாம் கடந்த நிலையில் இருந்தார். பிறவி முதல் அவர் சதா பிரம்மநிஷ்டராக இருந்தார். அவர் ஒரு அவதூதர் போன்று சஞ்சரித்தார். உலக உணர்வே இல்லை. எந்த உலகக் கடமையும் இல்லை. பகல், இரவு எங்குச் சஞ்சரிக்கிறோம் என்கிற விஷயங்களைக்கூட அறியாத நிலையில் அவர் மனது மிக உயர்ந்த நிலையில் இருந்தது. அவர் பைத்தியம் போன்று தென்பட்டார். அவரைச் சுற்றி வேடிக்கை பார்க்கும் சிறுபிள்ளைகள் கூட்டம் ஒன்று இருந்தது. அவரது பெரிய நிலையை எளிதில் பார்த்தமாத்திரத்தில் பாமரர் உணரமாட்டார்கள். அப்பொழுது அவர் பதினாறு வயதுடைய இளம் காளை. அவரது அங்கங்கள் யாவும் சர்வ அழகு பொருந்தியனவாகவும், மிக மிருதுவானவையாகவும் இருந்தன. அகன்று விரிந்த ஒளி பொருந்திய மிக அழகிய கண்கள். அவரது மூக்கும் கன்னங்களும் காதுகளும் புருவங்களும் மிக அழகானவைகள். அவரது முகத்தின் அழகை வர்ணிக்கவே முடியாது. கழுத்துக்குக் கீழே உள்ள இரண்டு எலும்புகளும் பொருத்தமான சதைப்பற்று உடையனவாக அழகான மார்பு, புஜம், தோள்வளையாக இருந்தன. அவரது திருமுகத்தை அழகிய சுருண்ட கேசங்கள் அலங்கரித்தன. அவரது கரங்கள் முழங்கால் வரை நீண்டு இருந்தன. ராமன், கிருஷ்ணன், முருகன், விஷ்ணு ஆகிய கடவுளரின் அழகு போன்று அது தெய்வ அழகாக இருந்தது. அவரது உடலிலிருந்து ஓர் ஒளி வீசியது. அவரது நிறம் பசுமை. இளமையும், தெய்வ அழகும், உள்ளே உள்ள ஆனந்தம் புறத்தே இனிய புன்முறுவலாகப் பவளவாயில் என்றும் மிளிர்ந்ததும் மக்கள் உள்ளத்தை எல்லாம் கவர்ந்தன, கொள்ளைகொண்டன. நிர்குண பிரம்மம் இங்ஙனம் சர்வ சௌந்தரியமான சரீரத்தில் சஞ்சரித்து வந்தது. ஆங்குக் குழுமியிருந்த ரிஷிகள் கூட்டம் ஒரு மிக்க எழுந்து நின்று அத்தெய்வ புருஷரை வணங்கி வரவேற்றது. மிகப் பெரிய பக்தனாகிய பரீக்ஷித்தும் கடவுளால் ஆங்கு அழைத்து வரப்பட்ட அந்த தெய்வமூர்த்தியை வீழ்ந்து வணங்கினான். அரசனும், பெரிய முனிவர்கள் கூட்டமும் மிக்க மரியாதையும் வணக்கமும் செய்ததைப் பார்த்து அவரைப் பின்பற்றி வந்த பொதுமக்கள், குழந்தைகள் கூட்டம் ஓடிப்போயிற்று. யாவரும் கூடி அத்திருமூர்த்தியை ஓர் உயர்ந்த ஆசனத்தில் எழுந்தருளப் பண்ணினார்கள்.

சுகதேவர் அங்கு எழுந்தருளியிருந்த முனிவர்கள் யாவரையும்விடச்சிறந்த அனுபூதிமான். பிரம்மரிஷி, ராஜரிஷி, தேவரிஷி ஆகிய ரிஷி புங்கவர்களின் மத்தியில் சுகர் வீற்றிருந்தது நக்ஷத்திரங்களின் மத்தியில் பூரணச் சந்திரன் போன்று இருந்தது. உயர்ந்த கிருஷ்ண பக்தனாகிய பரீக்ஷித்து சுகதேவரை அணுகி மீண்டும் மீண்டும் தன் தலையை அவரது திருவடிகளில் வைத்து வணங்கினான். கூப்பிய கரங்களுடன் மிகவும் இனிமையான குரலில் அரசன் சுகரை இங்ஙனம் வேண்டினான்:- "ஓ பிரபு! சதா பிரம்மநிஷ்டரே! நீங்கள் எழுந்தருளி எங்கள் அனைவரையும் பாக்கியவான்கள் ஆக்கியுள்ளீர்கள். தங்களைப் போன்ற தெய்வ புருஷர்களைப் பற்றி நினைத்தாலே கிரஹஸ்தர்களின் வீடுகள் புனிதமடைகின்றன. மாற்று அறியாத, பேதமேதும் அறியாத, கள்ளங் கபடமற்ற தெய்வக்குழந்தையாகியதேவரீரைக் கண்களால் கண்டுகளித்துத் திருவடிகளை ஸ்பரி

சித்துப் பாத பூஜை செய்த எங்களின் பாக்கியத்தைக் கடவுளின் அருளை என்னவென்று சொல்லுவது! விஷ்ணுவின் பார்வையினாலேயே அசுரக் கூட்டம் துடைக்கப்படுவது போன்று தங்கள் சான்னித்திய மகிமையால் தங்களை அண்டிய, தரிசித்த மக்களின் பாபங்கள் எல்லாம் சாம்பலாகிவிடுகின்றன.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் பாண்டவர்களை மிகவும் நேசித்தார். பகவானது அன்பைவிட வாழ்வில் பெரிய பேறு வேறு என்ன இருக்கிறது. நான் அந்த உத்தம பாண்டவர்களின் வழி வந்தவன். தன் தாய் மாமனது மக்களின் பிரீதிக்காகவோ என்பிரபு பகவான் கண்ணன் இன்று தங்களை இங்குக் கொண்டு வந்து சேர்ந்திருக்கிறான். ஆ என் பிரபு என்னிடம் எவ்வளவு அன்பு வைத்துள்ளான். எனது மரணத்தறுவாயில் உங்களை என் பிரபு கண்ணன் அல்லவோ இங்குக்கொண்டுவந்துள்ளான். நாங்கள் யாரும் தங்களை இங்கு எதிர்பார்க்கவில்லை. நீரோ நிறை ஞானி, சதா பிரம்ம நிஷ்டர். உலக ஞாபகமே இல்லை. நீர் சஞ்சரிப்பது உங்களுக்கே தெரியாது. பரம கருணை மூர்த்தியாகிய பகவானின் அருளினால் தாங்களாகவே இங்கு எழுந்தருளினீர்கள். கடவுள் அருளினால் பெற்ற என் அருள் தாகம் தங்கள் சந்நிதியில் மேலும் தீவிரமாகிறது. நீர் யோகிகளுக்குள் மேலான யோகி ஆவீர். சாகும் தறுவாயில் உள்ள ஜீவன் செய்யவேண்டிய காரியம் என்ன? முக்கியமாக விவேக வைராக்கியம் கொண்டவனாகக் கடவுளின் திருவடிகளை அடைய வேண்டும் என்கிற பேர் ஆவல் உள்ளவன் என்ன செய்யவேண்டும்? அவர்கள் எதைக் கேட்கவேண்டும், எதை ஓத வேண்டும், எதை நினைத்துக் கொண்டிருக்க வேண்டும்? யாரை வழிபடவேண்டும்? அவர்கள் விலக்கவேண்டியவை எவை? ஓ என் தெய்வமே தேவரீர் இதை எல்லாம் எனக்குச் சொல்லுவீர்களாக. நல்லோரைக் காண்பதும் நன்று அவர் சொல் கேட்பதும் நன்று, தாங்கள் இல்லறத்தார் வீடுகளில் ஒரு பசு பால்கறக்க ஆகிற நேரம் கூட இருக்கமாட்டீர்கள் என்று நான் அறிவேன். ஆண்டவனின் அருள் அல்லவோ தங்களை இங்கு எழுந்தருளச் செய்துள்ளது."

சூதர் சொன்னார்:— இங்ஙனம் பொருத்தமாகக் கேட்ட அவ்வுத்தம அரசனுக்கு வேத வேதாந்தங்களின் உட்பொருளை, அறியவேண்டிய அனைத்தையும் அறிந்த, எதை அறிந்தால் அனைத்தும் அறிந்ததாகிறதோ, எதைப் பெற்றால் அனைத்தும் பெற்றதாகிறதோ அதைப் பெற்றவரான வியாசரின் மிகப் பிரசித்திபெற்ற பிரம்ம நிஷ்டரான சுகதேவர் அன்புடன் அரசனுக்கு இங்ஙனம் எடுத்துச் சொன்னார்.

முதல் ஸ்கந்தம் முற்றும்.

குறிப்புகள்

அருள் இணக்கம்

இவ்வாண்டு பாதயாத்திரை முடிந்தபின் பாதயாத்திரைக்கு ஏற்பாடு செய்திருந்த அன்பர் பாதயாத்திரிகர்கள் அனைவரையும் கதாதரரின் இல்லத்துக்கு எழுந்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பெற்றோர்கள் வைத்தபெயர் கதாதரராகும். கதாதரரின் நாமத்தைத் தம் இல்லத்துக்கு அவ்வன்பர் வைத்திருந்தார். விதுரர் வீட்டுப்பக்கம் கண்ணன் வந்தபோது "இது யார் வீடு?" என்றுகண்ணன் கேட்டார். "இது உம் வீடு" என்று விதுரர் பகர்ந்தார். உடனே கண்ணன் அவ்வீட்டுக்குள் புகுந்துவிட்டார். கதாதரர் வீடு என்றவுடன் பாதயாத்திரிகர் அனைவரும் மகிழ்ச்சியுடன் அவ்வீட்டிற்குச் சென்றனர். ஆங்குக் குழுமிய அனைவருக்குமிடையில் அருள் இணக்கம் ஏற்பட்டது.

உடல் சம்மந்தப்பட்ட உற்றார் உறவினர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரிப்பது இல்லறத்தார்களுடைய கடமையாகும். பலர் அத்துடன் குடும்ப வாழ்வைக் கட்டுப்படுத்திக் கொள்கின்றனர். இல்லறப் பக்தர்கள் அருள் இணக்கத்தை வளர்த்து வருகிறார்கள். தெய்விக சம்பந்தமான பல விழாக்கள் கொண்டாடி

அவ்விழாக்களுக்கு அருளாளர்களையும் பக்தர்களையும் வரவழைத்து உபசரித்துப் பரமானந்தம் அடைகின்றார்கள். இத்தகைய நிகழ்ச்சிகளின் மூலம் அவர்கள் தங்களுடைய இல்லத்தில் அருள் நிலையை வளர்த்து இல்லற வாழ்வை ஓர் ஆச்ரம வாழ்வாக மாற்றிவிடுகிறார்கள். தெய்வீக சம்பந்தமான நிகழ்ச்சிகளில் அருளாளர்களும் பக்தர்களும் கூடி ஆங்குப் பஜனையும், நாம ஜபமும், அர்ச்சனையும், சத்விஷய ஆராய்ச்சியும், தியானமும் செய்யும்பொழுது ஆங்கு அருள் சக்தி ஏற்படுகிறது என்பதில் ஐயமில்லை. பொருளையும் அருளையும் வளர்ப்பவர்கள் தான் இகம், பரம் இரண்டுக்கும் தகுதி உடையவர்களாகின்றார்கள். அத்தகையவர்களுடைய இல்லத்தில் தெய்வ சாந்நித்தியம் யாண்டும் திகழ்ந்துகொண்டிருக்கும்.

பாதயாத்திரிகர்கள் அனைவரும் பக்தியுடன் கதாதரரின் இல்லத்தில் பஜனை செய்தனர். அவர்களுக்கிடையே அன்று ஏற்பட்ட இணக்கம் அருள் இணக்கம் என்பது அவர்களுக்கு விளக்கிச் சொல்லப்பட்டது. அருள் வட்டத்துக்குள் இருந்து அன்று அவர்கள் தங்கள் உள்ளத்தை விரிவடையச் செய்துகொண்டார்கள். "எங்கெங்கோ தோன்றி எங்கெங்கோ தொழில் செய்து எங்கெங்கோ வாழ்ந்து வருகின்ற நாம் எல்லாரும் அருள்துறையிலே இன்றைக்கு இங்குக் கூடிச் சகோதர சகோதரர்களானோம்" என்று கூறியதும் அவர்கள் உள்ளத்தில் ஒரு புத்துணர்வு ஏற்பட்டது. "இப்பொழுது நம்மிடையே ஏற்பட்ட இவ் அருள் இணக்கம் ஆன்மீக அடிப்படையில் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆன்மீக உறவுதான் நமக்கு நிலைத்த உறவு ஆகும். இந்த ஆன்மீக உறவு விரிவடைந்துகொண்டே போகவேண்டும். இந்த ஆன்மீக உறவில் பந்தபாசத்துக்கு இடமில்லை. இவ் ஆன்மீக உறவில் நாம் நன்கு வளர்ந்து வரவேண்டும். அப்பொழுது நம் வாழ்வு பெருவாழ்வாக மாறும்." இங்ஙனம் அவர்களுக்கு அருள் இணக்கத்தின் மகிமை எடுத்துச் சொல்லப்பட்டது. உள்ளத்தில் அருள் உணர்வு ஓங்க ஒருவருக்கொருவர் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

கதாதரரின் இல்லத்துக்கு அழைத்த அன்பர் அனைவருக்கும் பிரசாதமாகச் சிற்றுண்டி வழங்கினார். பாதயாத்திரையின் ஞாபகார்த்தமாகக் கதாதரரின் விலாசமிட்ட கைப் பை ஒன்று ஒவ்வொரு பாதயாத்திரிகருக்கும் வழங்கிய காட்சி உள்ளத்தைத் தொடுவதாக இருந்தது. பாதயாத்திரையின் நிறைவு அந்த நிகழ்ச்சியின்மூலம் மேலும் சிறப்பிக்கப்பட்டது. பாதயாத்திரிகர்கள் அனைவரும் மன நிறைவுடன் அன்பு உணர்வு ஓங்க அருள் இணக்கத்தை வலுப்படுத்திக்கொண்டு பிரியா விடைபெற்றுச் சென்றனர். வாழ்க்கையில் இத்தகைய சந்தர்ப்பங்கள் வாய்ப்பது மிகவும் அரிது. இத்தகைய சந்தர்ப்பங்கள் வாய்க்கும்போதெல்லாம் அவற்றைப் பயன்படுத்திக்கொண்டு அருள்துறையில் நாம் முன்னேறி வருவோமாக.

செய்திகள்

நிகழ்பவை:

இவ்வாண்டு திருப்பராய்த்துறை ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல ஒன்பதாவது, பத்தாவது வகுப்பு மாணவர்கள் ஐக்கிய வணக்கத்துக்காக ஆகஸ்டு 3, 4 தேதிகளில் திருவண்ணமலை அருணாசலேசுவரர் கோவிலுக்குச் சென்று வருவார்கள். எட்டாம் வகுப்பு மாணவர்கள் கர்நாடக மாநிலத்திலுள்ள மாதேசுவரன் மலைக்குச் சென்று வருவார்கள். ஏழாம் வகுப்பு மாணவர்கள் கும்பகோணத்திலுள்ள கோவில்களுக்கும், ஐந்து, ஆறும் வகுப்பு மாணவர்கள் தஞ்சாவூரிலுள்ள சப்த ஸ்தலங்களுக்கும், இவ்வாண்டு குருகுலத்தில் சேர்ந்த புதிய மாணவர்கள் திருச்சியிலுள்ள மலைக்கோட்டை, திருவானைக் கோவில், ஸ்ரீரங்கம் முதலிய கோவில்களுக்கும் வழிபாட்டுக்குச் சென்று வருவார்கள்.

ஆகஸ்டு மாதம் 3ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9-30 மணியிலிருந்து மாலை 4-30 மணி வரையில் விருதுநகர் பெரியகாளியம்மன் கோவிலில் ஸ்ரீமத் போதானந்த சுவாமிகள் ஜப யக்ஞம் நிகழ்த்துவார்கள்.

ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் ஆடி விடுமுறைக்காக ஆகஸ்டு மாதம் 9ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு மேல் அவரவர்கள் ஊருக்குப் புறப்படுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

திருவாசகம்	பிரசார விலை ரூ.	23-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு	,, ...	21-00
மஹாபாரதம்	,, ...	8-00
இராமாயணம்	,, ...	5-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,, ...	6-50
தினசரி தியானம்	,, ...	4-50
ராஜயோக விளக்கம்	...	12-00
கர்மயோக விளக்கம்	...	10-00
பக்தியோக விளக்கம்	...	9-00
ஞானயோக விளக்கம்	...	8-00
விவேகானந்த உபநிஷதம்	...	7-00
பரமஹம்சரின் பெருமை	...	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	...	6-00
கடவுளின் வடிவங்கள்	...	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1	...	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2	...	5-50
விவேகானந்த விவரணம்	...	4-00
சகோதரி நிவேதிதை	...	3-75
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	...	3-50
ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம்	...	3-00
அனுஷ்டான வேதாந்தம்	...	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	...	3-00
பஜனைப்பாடல்கள்	...	3-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம்	ஷை ...	3-00
சின்மயானந்த குரு	ஷை ...	3-00
ஆனந்தமானபரம்	ஷை ...	3-00
சுகவாரி	ஷை ...	3-00
மௌனகுரு வணக்கம்	ஷை ...	3-00
எங்கும்நிறைகின்றபொருள்	ஷை ...	2-50
மலைவளர் காதலி	ஷை ...	1-50
பரசிவ வணக்கம்	ஷை ...	1-00
கண்ணன் என்னும் கடவுள்	...	2-50
அறம் வளர்த்த நம்பி	...	2-50
சந்நியாசி	...	2-50
விரதவீரர் பீஷ்மர்	(நாடகம்)	2-50
ஹரிச்சந்திரன்	ஷை ...	2-00
தவப்புதல்வர்கள்	ஷை ...	2-00
பாதுகாபட்டாபிஷேகம்	ஷை ...	1-75
விபீஷணன் சரணாகதி	ஷை ...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
காயத்ரீ	...	1-50
நன்மக்களைப் பெறுதல்	...	1-50
மாணாக்கன்	...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	1-25
சைவன் யார்?	...	1-25
*ஆலய வழிபாடு	...	1-25
*ஆத்ம சக்தி	...	1-25
*மனிதனது நிஜசொரூபம்	...	1-25

*சிவதத்துவம்		... 1-25
இறைவணக்கம்		... 1-00
குழந்தைகளின் களிக்கூடம்		... 1-00
இராவண தத்துவம்		... 1-00
வாலி மோட்சம்	(நாடகம்)	... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	(நாடகம்)	... 1-00
தானவீரன் கர்ணன்	(நாடகம்)	... 1-00
மார்க்கண்டேயன்	(நாடகம்)	... 1-00
பிரஹ்லாதன்	(நாடகம்)	... 1-00
தபோபலன்	(நாடகம்)	... 1-00
பார்வதி,லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்		... 1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும்		... 1-00
நோய்க்கு இடம் கொடேல்		... 1-00
*சக்தி தத்துவம்		... 0-90
*சூரியநாராயணன்		... 0-75
தெய்விக மகிமைகள்		... 0-75
*முருகக்கடவுள்		... 0-75
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு		... 0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்		... 0-60
*கணபதி		... 0-60
விஷ்ணு தத்துவம்		... 0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?		0-50
அருள் விருந்து (பௌண்ட் செட்)		...10-00
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்		... 0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை		0-30
கந்தர் அநுபூதி		... 0-25
The Bhagavad Gita (12th Imp.)		...30-00
Sri Lalithambiha Sahasranama Stotram		15-00
The Indian National Education		...10-00
Tirukkural (with plastic cover)		... 8-00
Ramakrishna lives Vedanda		... 8-00
Mahaveer Sri Hanuman		... 7-75
The Bhagavad Gita (Small Size)		... 6-00
Man Making Message		... 7-00
Ramayana (with plastic cover)		... 7-00
Mahabharata	,,	... 6-00
Daily Divine Digest (DELUXE)		... 6-00
Daily Divine Digest (Ordinary)		... 4-00
Sri Krishna-The Manifest Divinity	,,	... 6-00
Facets of Brahman or The Hindu Gods		.. 5-00
Sri Vishnu Sahasranama Stotram		... 4-00
Siva Sahasranama Stotram		... 3-50
Bheeshma The Superman		... 3-50
*Introducing The Gita		... 2-00
Holy Bible—In the Light of Vedanda		... 1-50
Reminiscences of Master Mahashaya		... 1-50
The Garland of Paraaparam		... 1-50
*key to Higher Life		... 1-25
*The Student		... 1-25
The Teacher		... 1-00
The School		... 1-00
The Nursery School		... 1-00

சேலம் ஸ்ரீ ஸாரதா கல்லூரியில்

மூன்று நாட்கள் சிறப்பு வழிபாடு

ஆகஸ்ட் மாதம் 11 சனிக்கிழமை, 12 ஞாயிறு, 13 திங்கள்

சேலம் ஸ்ரீ ஸாரதா கல்லூரியில் ஆகஸ்ட் மீ 11, 12, 13 தேதிகளில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி முறைப்படி சிறப்பு வழிபாடு நடைபெறும். ஆகஸ்ட் 11ஆம் தேதி சனிக்கிழமை 'ஓம் நமோ நாராயணாய' என்னும் மந்திரமும் 12ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை 'ஓம் மஹாசக்த்யை நம:' என்னும் மந்திரமும், 13ஆம் தேதி திங்கட்கிழமை 'ஓம் நமசிவாய' என்னும் மந்திரமும் நாம அர்ச்சனையின்பொழுது ஜபத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். இதில் அன்பர்களும், தாய்மார்களும் மூன்று நாட்களிலுமோ அல்லது வசதிப்படும் நாட்களிலோ கலந்துகொள்ளலாம். தங்குவதற்கு இடவசதி ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே அமைக்கப் பெறும். தமக்குத் தேவையான படுக்கை வசதிகளை அவரவர்களே கொண்டு வரவேண்டும். உணவுக்காக நாள் ஒன்றுக்கு ரூபாய் ஒன்பது வீதம் நேரில் செலுத்தலாம்.

நிகழ்ச்சி முறை

காலை

5-45	மணி முதல்	6-00	மணி வரை	—	திருப்பள்ளி எழுச்சி
6-00	,,	7-00	,,	—	நாம அர்ச்சனை
7-00	,,	7-10	,,	—	தியானம்
7-30	,,			—	சிற்றுண்டி
9-00	,,	10-00	,,	—	அறவுரை
11-00	,,	12-00	,,	—	நாம அர்ச்சனை
12-00	,,	12-10	,,	—	தியானம்
12-30	,,			—	நண்பகல் உணவு

மாலை

4-00	மணி முதல்	4-30	மணி வரை	—	சிற்றுண்டி
4-30	,,	5-00	,,	—	பஜனை
5-00	,,	6-00	,,	—	நாம அர்ச்சனை
6-00	,,	6-10	,,	—	தியானம்
6-30	,,	7-30	,,	—	சொற்பொழிவுகள்
7-30	,,	8-00	,,	—	கலா நிகழ்ச்சி
8-30	,,			—	இரவு உணவு

இங்ஙனம்

சித்பவானந்த

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.